أحكام الجنائز

வெளியீட்டு எண்: 11

# இறப்பும் இறுதிச் சடங்கும்


ஆசிரியர்:

அஷ்ஷைகு நாஸிரித்தீன் அல்பானீ

தமிழில்:

மவ்லவி S.M. முஸ்தஃபா மவ்லானா ஜமாலி



வெளியீடு:

ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் டிரஸ்ட்

சென்னை.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| *Title of the Book* | : | *Erappum Erudhi Chadangum* |
| *Subject* | | *Death and its Rituals* |
| *Author* | : | *As- Sheikh Nasiridin Al-bani* |
| *Translator* | : | *Moulavi. S.M. Mustafa Moulana Jamali* |
| *Language* | : | *Tamil* |
| *Editon* | : | *First* |
| *Date of Publication* | : | |
| *Copy Right* | : | *Reserved* |
| *Size of the Book* | : | *Dimmy 1/8 (8 3/4 x 5 1/4)* |
| *Paper* | : | *16 Kg. - Map Litho* |
| *No. of Pages* | : | *156* |
| *No. of Copies* | : | *3,000* |
| *Printer* | : | *M/s. Graphic Park Designer - Offset Printers, No.78, Big Street, Triplicane, Chennai - 600 005. Phone : 8555349* |
| *Price* | : | *Rs.13/-* |

R.RI

*PUBLISHERS*

Furqan Publications Trust,
No. 204, II Floor, Thambu Chetty St., Chennai - 600 001.
Phone No: (044) 522 1696
E.mail: furqan@giasmd01.vsnl.net.in

اسم الكتاب : أحكام الجنائز (بالتاملية)

تأليف :الشيخ إمام ناصر الدين ألباني

الناشر : دار الفرقان - مدراس - جنوب الهند

أحكام الجنائز

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# முன்னுரை

இன்று நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாஸிரித்தீன் அல்பானீ அவர்கள் சிரியாவில் வாழ்ந்துவரும் புகழ்பெற்ற மார்க்க அறிஞர்; சட்ட நிபுணர்; நபிமொழிக்கலை மேதை; பன்னூலாசிரியர். அவர் 'அஹ்காமுல் ஜனாயிஸ்' எனும் விரிவான நூலை எழுதி வெளியிட்டுள்ளார். பிறகு அதன் சுருக்கப் பதிப்பையும் அவரே வெளியிட்டுள்ளார்.

அந்நூல் இலட்சக் கணக்கில் அச்சேறி, மக்களுக்கு பெரும் பயன் அளித்து வருகின்றது. எளிய அரபி நடையில் இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியவாறு, குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடன் இமாம்கள் கருத்தையும் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள். இந்நூல் இஸ்லாமிய அறிஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கும் இது பயன் தர வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இந்நூலை மூலவுருச் சிதையாமல் மொழிபெயர்த்துத் தர பெரிதும் முயன்றுள்ளேன். மூலநூலில் உள்ளவாறே மரண நேரம் ஆரம்பித்ததிலிருந்து நல்லடக்கஞ் செய்யும் வரையுள்ள விபரங்களை நீங்கள் அறியலாம். சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுள்ள ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் அறக்கட்டளைக்கு என் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைப் படித்து செயல் வடிவில் கொண்டு வருமாறு சமுதாய மக்களை வேண்டுகின்றேன்.

*வஸ்ஸலாம்.*

மவ்லவி. எஸ். எம். முஸ்தபா மவ்லானா
'கலாபவனம்'
மருதமுனை - இலங்கை.

10-11-1999.

# மூல ஆசிரியரின் முன்னுரை

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவனைப் போற்று கிறோம். அவனிடமே உதவி தேடுகிறோம். பிழை பொறுக்க வேண்டுகிறோம்.

எங்கள் ஆத்மாக்களின் கெடுதிகளிலிருந்தும் எங்கள் இழி செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்.

அல்லாஹ் எவனை நல்வழியிலாக்குகிறானோ அவனை யாரும் வழிகெடுத்துவிட முடியாது. எவனை வழிகெடுக்க அல்லாஹ் நாடினானோ அவனை நல்வழிப்படுத்த யாராலும் முடியாது.

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை. அவன் தனித்தவன்; இணை துணையில்லாதவன் என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாவார்கள் என்றும் உண்மையுரைக்கிறேன்.

இது மரணத்தினால் ஏற்படும் சட்டங்களை ஆதாரபூர்வ மாகச் சுருக்கித் தொகுத்த நூலாகும். இதற்கு முன் இது பற்றிய விரிவான நூலை எழுதியிருந்தேன். அதனைக் கண்ணுற்ற பலர் வாழ்த்தியிருந்தார்கள். குறிப்பாக நபி வழியில் வாழத்துடிக்கும் அன்பர்கள், நபிவழியை உயிர்ப்பிக்க முயலும் நண்பர்கள் சுருக்கித் தரும்படி வேண்டிக் கொண்டனர். அதற்காகவும்,

தோழர்கள், சொந்தக்காரர்கள் மரணமடைந்தால் தனது கடமை என்ன? என்பதை இலகுவாக அறிந்து கொள்வதற்கும், நபி வழியில் அதில் கலந்து நன்மை தேடுவதற்கு உதவியாகவும் இந்நூல் அமைகிறது.

இவ்வுலகில் பரந்து வாழும் முஸ்லிம்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு ஊரிலும் விதவிதமாக மரணச் சடங்குகளை நிறைவேற்றுகின்றனர். சில ஊர்களில் நடைபெறும் மரணச் சடங்குகள் இறைமறுப்பாளர்கள், இணைவைப்போர் களின் மரணச் சடங்குகளையும் மீறி விட்டன. இது வேதனைக் குரியதாகும்.

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில்தான் முஸ்லிம்களின் எல்லாச் செயல்களும் அமைய வேண்டும். இதுவே இந்நூலின் குறிக்கோள். அல்லாஹ்வின் பேரருளை எதிர்பார்க்கிறேன்.

முஹம்மது நாஸிரித்தீன் அல்பானீ

# பதிப்புரை

அருளன்பாளன் அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கிறேன்

அன்புச் சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

இறையருளால் உங்கள் கைகளில் தவழுகின்ற **''இறப்பும் அதன் சட்டங்களும்''** ''அஹ்காமுஜ் ஜனாயிஸ்'' எனும் இந்நூல் எமது ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் டிரஸ்ட் - இன் 11-ஆம் வெளியீடாகும். அல்ஹம்துலில்லாஹ்.

ஒரு மனிதனின் ''பிறப்பு'' எனும் நிகழ்வை, அவனது பூவுலக வாழ்வின் துவக்கம் என்பதை உலக மக்கள னைவரும் கருத்து வேறுபாடின்றி ஒப்புக்கொள்வர். அதேபோல 'இறப்பு' எனும் நிகழ்வை மனிதனது வாழ்வின் இறுதி என்பதே பெரும்பாலான மக்களின் முடிவும், சித்தாந்தங்களின் கூற்றுமாகும்.

ஆனால் 'இஸ்லாம்' என்ற சித்தாந்தத்தில் இறப்பு என்பது இறுதியல்ல. அதாவது மரணம் என்பது முடிவல்ல; மறு உலக வாழ்வின் தொடக்கம் எனக் காணப்படுகிறது. சற்று விளக்க மாகக் கூறுவதென்றால், 'இஸ்லாம்' என்ற சித்தாந்தத்தில் மறுமைக் கோட்பாடு எனும் அம்சம் பொதிந்துள்ளது. இஸ்லாம் ஒரு மனிதனது வாழ்வை இரு நிலைகளாகப் பிரிக்கின்றது. அவை இம்மை - மறுமை என்ற நிலைகளாகும்.

இம்மை - மறுமை என்ற இரு நிலைகளையும் இஸ்லாம் சமமாகவே நோக்குகிறது. அதாவது சரிசம எடையில் இரு பொருளைக் கொண்ட தராசுத் தட்டுக்களை உவமானமாகக் கொள்ளலாம், ஒரு தட்டில் எடை அதிகரிக்கப்படும்போது, மற்றொரு தட்டிலும் அதேயளவு எடையை அதிகரிக்க வேண்டும். அதே போல ஒரு தட்டில் எடை குறைக்கப்படும் போது மற்றொரு தட்டிலும் எடையைக் குறைக்க வேண்டும். இதே அடிப்படையிலேயே ஒரு மனிதனது இம்மை வாழ்வில் நன்மைகள் அதிகரிக்கும் போது, மறுமையிலும் நன்மைகள் அதிகரிக்கின்றன. நன்மைகள் குறையும்போது, மறுமையிலும் நன்மைகள் குறைகின்றன.

நன்மைகளை அமோகமாகக் கொண்டவன் சொர்க்கம் என்ற சுகவாசத்தையும், நன்மைகள் குறைந்தவன் அல்லது அற்றவன் நரகம் என்ற துர்வாசத்தையும் அடைகின்றான். இந்த மறுமை சுகவாசத்தையும், துர்வாசத்தையும் மனிதன் அவனது இறப்பிலிருந்தே சுவைக்கத் தொடங்குகின்றான். அதாவது அவனது மரணத்தின் இறுதி கட்டத்திலும் (சக்கராத் எனும் நிலையிலும்) மண்ணில் புதைக்கப்பட்ட நிலையிலும் (கப்ரிலும்) ஆகும்.

மேற்கண்ட இவ்விரு நிலைகளையும் கடந்த பின்பு நிகழுகின்ற, நியாயத் தீர்ப்பு நாள் நிகழ்வுக்குப் பிறகு அடைவதே சொர்க்கம் - நரகம் என்ற இறுதி நிலையாகும். (குறிப்பு: சொர்க்கம் - நரகம் எனும் இறுதி நிலையின் தனித் தனியான விவரம் எமது ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்-ன் 7-வது வெளியீடாக வந்துள்ளதை வாசகர்கள் அறியவும்) இந்த இறுதி நிலைக்கு முந்தைய கட்டமான அதாவது உலக வாழ்வுக்கும், சொர்க்க - நரக வாழ்வுக்கும் இடைப்பட்ட நிலைதான் புதைகுழி (கப்ரு) நிலையாகும். இதனால் தான் இஸ்லாம் மனிதனின் இம்மை மரணம், மறுமை வாழ்வின் ஆரம்பம் என்கின்றது.

இந்த மறுமை வாழ்வை ஆரம்பிக்கும் மனிதனை, அவனுடன் வாழ்ந்த சக மனிதர்கள் எப்படி, எந்நிலையில் வழியனுப்பி வைக்க வேண்டும் என்பதை விளக்குவதற்கே இந்நூல் வெளியிடப்படுகிறது. அனைத்து விளக்கங்களும், இறைத்தூதர் அண்ணலார் முஹம்மது (ஸல்) அவர்கள் மூலமாகப் பெற்ற விளக்கங்களேயாகும்.

ஒரு மனிதன் பிறந்தவுடன், அவனைக் கழுவிச் சுத்தப்படுத்தி, இவ்வுலகின் அங்கத்தினராக அன்புடன் அரவணைத்து ஏற்று, அவனது நலனுக்கும், நிம்மதிக்கும் பிரார்த்திக்கின்றோமோ, அதே நிலையைத்தான் அவன் மரணம் அடைந்தபோதும் சுத்தத்துடனும், மணமுடனும், மாறாத அன்புடனும், பிரார்த்தனையுடனும், மறுமை வாழ்வைத் தொடங்க அனுப்பி வைக்க வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறதெனில், இறைவன் இம்மனித படைப்பை எத்துணை உயர்வாகவும், கண்ணியமாகவும் கருதி படைத்துள்ளான் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

உலகில் தோன்றிய எந்த உயிருள்ள படைப்புக்கும் கிட்டாத கண்ணியத்தையும், மரியாதையையும், மனித குலமாகிய நாம் பெற்றிருக்கிறோமெனில், இந்த மனித குலம் உயிருடன் வாழ்ந்த காலத்திலும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் வாழ்ந்து மறைய வேண்டும் என்பதை சொல்லாமல் சொல்லி உணர்த்துகிறது இந்நூல். இதுவும் இந்நூலை வெளியிட என்னை உந்தியது எனலாம்.

மேலும், மனித குலத்திற்கு நல்வாழ்க்கை நெறியைக் கொடுத்த இறைவனின் கட்டளைகளையும், அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலான 'அழகிய முன் மாதிரியை'யும் சமர்ப்பிக்கும் நோக்கமும், கொள்கையும் எமது "ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்"க்கு உண்டென்பதை பல பதிப்புரைகளில் குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வகையிலும் இந்நூல் மக்களுக்கு இன்றியமையாதது என்பதால் இதனை வெளியிட முடிவு செய்தேன்.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனது வாழ்வுக்கு வழிகாட்டிட இறைவன் தவறவில்லை. அதுவும் ஒரு வழிகாட்டியைக் கொண்டே மக்களுக்கு அதனை செயல் வடிவில் வழங்கியுள்ளான். அந்த வழிகாட்டியான தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வழிமுறை சிறந்த நன்நெறி யாகும். அந்த வழிமுறை அன்றி பிற மார்க்கங்களின், மனிதர்களின் வழிமுறையோ அல்லது அவற்றின் சாயலோ நமது வாழ்வில், செயலில் புகுந்துவிடக்கூடாது. இந்த மரண சடங்குகளிலும் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி, வழிமுறை உள்ளது என்பதை முஸ்லிம் சமுதாயத்திற்கு வெளிப்படுத்திடவும், இந்நூலைப் படித்து நபிகளாரின் வழி முறையைத் தவிர ஏனைய முறைகளை முழுமையாகப் புறந்தள்ளி இறுதிச் சடங்கில் இறைத் தூதரின் வழிகாட்டுதலைச் செயல்படுத்திடவும் வேண்டும் என்ற நன்நோக்கில் இந்நூல் வெளியிடப்படுகிறது.

எமது ஃபுர்கான் பதிப்பகத்தின் மூலம் ஹதீஸ் நூல்கள் மற்றும் சிறிய இஸ்லாமிய விளக்க நூல்கள் வெளியிடும் திட்டத்திற்கு ஊக்கமளித்து, நிதியும் தந்து உறுதுணை யாக இருந்து வரும் எனது அன்புச் சகோதரர் **ஜனாப் S. அக்பர் ஷா, B.A.,** அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், அவர்களின் நல்வாழ்வுக்காக

இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன். மேலும் அவர்கள் எமது டிரஸ்ட்-க்கு அளித்த கம்ப்யூட்டர் இயந்திரத்தின் மூலமாகவே இந்நூலுக்கு அச்சுக்கோர்வை செய்யப்பட்டுள்ள தென்பதையும், இன்னும் பல நூல்கள் உருவாகப் பயன்பட்டு வருகிற தென்பதையும் இத்தருணத்தில் குறிப்பிட விரும்பு கின்றேன்.

'அஹ்காமுல் ஜனாயிஸ்' எனும் விரிவான நூலை எழுதி, தாமே அதே நூலை சுருக்கமான வடிவத்திலும் மக்களுக்குத் தந்த தற்காலத்தில் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஹதீஸ் கலை வல்லுனரான முஹத்திது அஷ்ஷைகு நாஸிரித்தீன் அல்பானீ அவர்களுக்கு நாம் நன்றியைத் தெரிவிக்கவும், அவர்களின் இம்மை - மறுமை நலனுக்காக நாமனைவரும் பிரார்த் திக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்து, அரபி மூலத்திலிருந்த இந்நூலை தமிழாக்கம் செய்து, தமிழறிந்தோர் பயனடையச் செய்த **மவ்லவி. S.M. முஸ்தபா மவ்லானா ஜமாலி** அவர்களுக்கும், இந்நூலை முஸ்தபா மவ்லானா அவர் களிடமிருந்து பெற்றுத் தந்தவரும், முழுமை யாகப் படித்து, மேற்பார்வையிட்டுத் தந்த **சகோதரர் Dr. A. முஹம்மது அலீ,** M.A., Ph.D., அவர் களுக்கும் நான் நன்றி தெரிவிக்கவும், பிரார்த்திக்கவும் கடமைப்பட்டுள்ளேன்.

எந்த நன்நோக்கத்திற்காக இந்நூல் வெளியிடப் பட்டதோ, அந்நோக்கம் இதனைப் படித்த மக்களால் நிறைவேற்றப்படும்போது, அதுவே இந்நூலை வெளியிட்ட எனக்கு முழுதிருப்தியையும், மகிழ்வையும் அளிக்கும். எனக்கும், வாசகர்களுக்கும் மறுமை வெற்றியையும் தருமென திடமாக நம்புகிறேன்.

அன்புச் சகோதரன்

22-11-1999
14-08-1420
சென்னை.

**S.M.S. அஹ்மது**
**ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்**

# பொருளடக்கம்


1. நோயாளியின் கடமைகள்................................................ 14
2. மரண வேளையில் மற்றவர்கள் செய்ய வேண்டியவை................................................ 20
3. மரணமடைந்தோருக்குப் பக்கத்திலிருப்பவர்கள் செய்ய வேண்டியவை.......... 23
4. மரணித்தவர்களிடம் இருப்பவர்களுக்கு ஆகுமானவை................................................ 26
5. மரணித்தவரின் சொந்தக்காரர்களுக்கு கடமையானவை................................................ 28
6. மரணித்தவரின் சொந்தக்காரர்களுக்கு ஆகாதவை................................................ 31
7. அனுமதிக்கப்பட்ட மரண அறிவித்தல்........................ 34
8. நற்பேறுடன் மரணிப்பவரின் அடையாளங்கள்......... 35
9. மரணித்தவரை மக்கள் புகழ்தல்.................................. 42
10. கிரகணங்களின்போது மரணித்தல்.............................. 46
11. மையித்தைக் குளிப்பாட்டுதல்...................................... 47
12. மையித்தை கபனிடுதல்................................................ 55
13. ஜனாஸாவைத் தூக்கிச் செல்லல்.................................. 60
14. ஜனாஸா தொழுகை................................................ 69
15. ஜனாஸா தொழுகை தொழும் முறை.......................... 87
16. நல்லடக்கம் செய்தல்................................................ 92
17. இறந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுதல்................................................ 114
18. மரணித்தபின் அவருக்கு நன்மையளிப்பவை............ 123
19. அடக்கத்தலங்களை ஸியாரத் (தரிசனம்) செய்தல்.... 130
20 மண்ணறைகளில் அல்லது இடுகாட்டில் செய்யக் கூடாதவை................................................ 142

# இந்நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

அஹ்காமுல் ஜனாயிஸ் எனும் இந்நூலின் ஆசிரியர் ஷைகு நாஸிரித்தீன் அல்பானீ அவர்கள் அண்மையில் (02-10-1999) காலமானார்கள். இவ்வறிஞர் வாழ்ந்த கால கட்டத்தில் நாம் வாழ்ந்தோம் என்பதில் நமக்கு பெருமையே. அன்னாரின் மூலம் நாம் பல நூல்களையும், ஹதீஸ் ஆய்வுகளையும் பெற்றது நமது பாக்கியமே. இவ்வறிஞரைத் தந்த வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துவதுடன், அன்னாரின் பிழைகளைப் பொறுத்து, ஜன்னத்துல் பிர்தஸ் எனும் சுவனத்தை அளிக்க பிரார்த்திக்கின்றோம். வாசகர்களாகிய உங்களையும் பிரார்த்திக்க கோருகிறோம்.



## அஷ்ஷெய்க் நாஸிரித்தீன் அல்பானீ (ரஹ்)

# ஹதீஸ் கலையின் மாபெரும் மேதை மறைவு

இந்நூற்றாண்டின் தலை சிறந்த ஹதீஸ் கலை வல்லுநர்களில் ஒருவரான ஷெய்க் நாஸிரித்தீன் அல்பானீ அவர்கள் தமது 85-ஆம் வயதில் சமீபத்தில் ஜோர்டானில் காலமானார். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) இஸ்லாமிய உலகில் இவருடைய மறைவு ஒரு பேரிழப்பாகும். ஹதீஸ் ஆய்வுக் கலையில் இவர் மிகவும் சிறந்து விளங்கினார்.

### வாழ்க்கைக் குறிப்பு:

1914-ஆம் ஆண்டு அல்பேனியாவில் உள்ள ஷ்கூடர் என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை நூஹ் நஜாத்தி அவர்கள் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இஸ்லாமியக் கல்வி நிலையங்களில் பயின்றவர். பின்னர் அல்பேனியா வந்த அவர்

அங்கு ஹனஃபி மத்ஹப் சட்டங்களைப் போதித்து வந்தார். அன்றைய அல்பேனியாவின் அதிபர் அஹ்மது ஸுகோ அந்நாட்டில் மதச்சார்பற்ற ஆட்சியைப் பிரகடனம் செய்ததாலும், ஐரோப்பிய கலாச்சாரத்தை மக்கள் மீது திணித்ததாலும் பலர் அந்நாட்டை விட்டு வெளியேறினர். ஷெய்க் அல்பானீ அவர்களின் தந்தையும் சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ் நகருக்குக் குடிபெயர்ந்தார். டமாஸ்கஸ் நகரில் பள்ளிக்குச் செல்லும் பருவம் வந்தபின் அவரது தந்தை பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பவில்லை. வீட்டிலேயே அவருக்கு குர்ஆன் தஜ்வீது (ஓதும் முறை), அரபி இலக்கணம், ஹனஃபி மத்ஹப் சட்டங்களைக் கற்றுக் கொடுத்தார். அதே சமயத்தில் அன்று டமாஸ்கஸ் நகரில் வாழ்ந்த, ஷெய்க் ஸயித் அல் புர்ஹானி போன்ற இஸ்லாமிய அறிஞர்களிடமும் அல்பானீ அவர்கள் இஸ்லாத்தின் பல்வேறு துறைகளைக் கற்றுத் தேர்ந்தார். மாணவப் பருவத்திலேயே ஹதீஸ் கலையைக் கற்பதில் பெரும் ஆர்வம் காட்டினார். கடிகாரம் சரிபார்க்கும் தொழிலைச் செய்து வந்த அவர், ''அல்லாஹ்வின் அருளால் நான் இந்த வேலையைக் கற்றுக்கொண்டேன். தினமும் 3 மணி நேரம் மட்டும் எனது குடும்பத்தை நடத்துவதற்காக உழைத்தேன். மீதி நேரங்களை நபிமொழிகளைப் படிப்பதற்கும், ளாஹிரிய்யா நூலகத்திலும் சுமார் 6 முதல் 8 மணி நேரங்கள் செலவிட்டேன்'' என்று கூறியுள்ளார். அவரது வருமானத்தில் புத்தகங்களை வாங்கு வதற்குச் செலவழிக்க இயலாத நிலையில் புதிய புத்தகங்களை புத்தக விற்பனை நிலையங்களிலிருந்து இலவசமாகப் பெற்றுப் படித்துவிட்டு திருப்பிக் கொடுத்தார். புத்தகக் கடையினரும் பெருந்தன்மையுடன் அல்பானீ அவர்களுக்குப் புத்தகங்களைக் கொடுத்து உதவினர்.

அச்சமயத்தில் சிரியா, ஜோர்டான் போன்ற நாடுகளி லிருந்து பல மாணவர்கள் அவரிடம் கல்வி கற்றனர். தனது வாழ்நாள் முழுவதும் இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் ஹதீஸ்களையும், இமாம்களின் வழிமுறைகளையும் பின்பற்றி வந்த அவர் எந்த மத்ஹபையும் சார்ந்து இருக்க வில்லை.

அவரது உரைகள் நடக்கும் இடங்களில் மார்க்கத்தில் பித்அத்தை நுழைப்பவர்கள், சூஃபிகள்ஆகியோர் பிரச்சினை களை ஏற்படுத்தினர். அவரைப் பற்றித் தவறாகவும் பிரச்சாரம்

செய்ய ஆரம்பித்தனர். ஆயினும் அல்பானீ, அவர்கள் பக்கம் கவனம் செலுத்தாமல் தம் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

இவரைப் பற்றிக் கேள்வியுற்ற மதீனா இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தின் தலைவர் ஷெய்க் முஹம்மது பின் இப்ராஹிம் அல் அஷ்ஷெய்க் அவர்கள் அல்பானீயை மதீனா பலகலைக்கழகத்தில் ஹதீஸ் கலையைப் போதிக்கும் பேராசிரியராக நியமித்தார். அங்கு 3 வருடங்கள் பணியாற்றிய அல்பானீ, அப்பல்கலைக்கழகத்தில் இஸ்னாத் - ஹதீஸ் அறிவிப்பாளர்களைப் பற்றிய புதிய கலையைத் துவக்கினார். புகழ்பெற்ற மிகப் பழமையான அல்அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில்கூட இத்துறை போதிக்கப்படவில்லை. இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் முதன்முறையாக அல்பானி அவர்களால் இக்கலை துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

## அல்பானீ வகித்த பதவிகள்:

சிரியாவின் ஹதீஸ் கமிட்டி உறுப்பினர்.

மதினா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் ஹதீஸ் துறைப் பேராசிரியர்.

சவூதி அரேபியாவின் கல்வியமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க மக்கா பல்கலைக்கழகத்தின் உயர் கல்வி மேற் பார்வையாளர்.

சவூதியின் முன்னாள் மன்னர் காலித் பின் அப்துல் அஜிஸ் அவர்கள் இவரை மதினா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் சுப்ரீம் கவுன்சில் உறுப்பினராக ஹிஜ்ரி 1395 முதல் 1398 வரையிலான 3 ஆண்டுகளுக்கு நியமனம் செய்தார்.

சிரியாவிலுள்ள புகழ்பெற்ற ளாஹிரிய்யா நூலகம் இவருக்காக நூலகத்திலேயே ஓர் அறையை ஹதீஸ் துறை ஆராய்ச்சிக்காக ஒதுக்கிக் கொடுத்தது.

இதுமட்டுமல்லாமல் அல்பானீ அவர்கள் பெரும்பாலான முஸ்லிம் நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இஸ்லாமிய அழைப்புப் பணிகள் செய்வதற்காக பயணங்கள் மேற்கொண்டார்.

## வாழ்க்கைக் குறிப்பு

ஷெய்க் நாஸிரித்தீன் அல்பானீ அவர்கள் தனது வாழ்நாளில் பல்வேறு இஸ்லாமிய அறிஞர்களுடன் தொடர்புகள் வைத்திருந்தார். அறிஞர்களிடமிருந்து இவரும், இவரிடமிருந்து மற்றவர்களும் கல்வியைப் பரிமாறிக் கொண்டனர்.

சமீபத்தில் மறைந்த ஷெய்க் அப்துல்லாஹ் பின் பாஸ் அவர்களுக்கும், அல்பானீ அவர்களுக்குமிடையில் நல்ல வலுவான தொடர்பிருந்தது. ஷெய்க் பின் பாஸ் அவர்கள் அல்பானீ அவர்கள் குறித்து 'இந்த நவீன உலகில், வானத்திற்கு கீழே, ஷெய்க் நாஸிரித்தீன் அல்பானியை விட ஹதீஸ் கலையில் அதிக ஞானமுடைய ஒருவரை நான் பார்க்கவில்லை'' என்று புகழாரம் சூட்டியுள்ளார்கள்.

ஷெய்க் அல்பானீ அவர்கள் இந்தியாவின் இஸ்லாமிய அறிஞர்களான ஷெய்க் ஹபிபுர் ரஹ்மான் அல்அத்ஹமி, முஸ்தஃபா அல் அத்ஹமி. அப்துஸ்ஸமது ஷர்ஃபுத்தீன் போன்றவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தார்கள்.

60 ஆண்டுகளாக ஹதீஸ் துறையில் தமது காலத்தைச் செலவிட்ட ஷெய்க் அவர்கள் இத்துறையில் தனது உழைப்பு பற்றி திருப்தியடையாதவராகவே இருந்தார்கள். இவருடைய இறுதிக் காலங்களில், மற்ற நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளாமல் தமது முழு வாழ்வையும் ஹதீஸ் துறைக்காக அர்ப்பணிக்க இயலவில்லையே என்று வருந்தினார். தினமும் 10 முதல் 12 மணி நேரம் தொழுகை நேரம் தவிர, நூலகத்திலேயே அறிவைத் தேடுவதில் செலவிட்டார்.

அல்பானீ அவர்கள் ஹதீஸ் துறையில் மட்டும் 100-க்கும் மேற்பட்ட நூல்களை இவ்வுலகத்திற்குத் தந்துள்ளார்கள். அவற்றில் மிகவும் போற்றத்தக்கது ''ஸிஃபத் ஸலாத் அந்நபி'' என்னும் நூலாகும். இந்நூலைப் பற்றி ஓர் அறிஞர் கூறும்போது ''இந்த ஒரு நூல் போதும் ஷெய்க் அவர்களின் திறமைக்கு சான்று கூற!'' என்று குறிப்பிட்டார்.

நன்றி: (சமரசம் - நவம்பர் 1999)

# 1. நோயாளியின் கடமைகள்

**1.** அல்லாஹ்வின் தீர்ப்பை ஏற்பதும், அவன் வைக்கும் சோதனையில் பொறுமையாயிருப்பதும், தன் அதிபதியான அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைப்பதும் அவசியமாகும்.

*''நம்பிக்கையாளரின் செயல்களைப் பார்த்து வியப்படைகின்றேன். அவனுடைய எல்லாச் செயல்களும் நன்மையே தருகின்றன. இது நம்பிக்கையாளரை (முஃமினை)த் தவிர வேறு யாருக்கும் கிடையாது. மகிழ்ச்சி ஏற்பட்டால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மை பயக்கிறது. துன்பம் ஏற்பட்டால் பொறுமையைக் கையாள்கிறான். அதுவும் அவனுக்கு நன்மையையே அளிக்கிறது'' எனவும் ''அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் கொண்டவனாகவே தவிர யாரும் இறக்க வேண்டாம்'' எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(முஸ்லிம். அஹ்மத் பைஹகி)

**2.** நோயாளி அச்சத்திற்கும், ஆதரவுக்கும் மத்தியில் இருப்பது அவசியமாகும். தன் பாவங்களுக்காக அல்லாஹ்வின் தண்டனையை அஞ்சிக் கொண்டும், அவனருளை ஆதரவு வைத்துக் கொண்டும் இருக்க வேண்டும்.

*நபி (ஸல்) அவர்கள் மரணத் தருவாயிலிருந்த ஒரு வாலிபனைக் காணச் சென்று ''உன் நிலையென்ன?'' எனக் கேட்டார்கள். ''இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அல்லாஹ்வின் நல்லருளை விரும்புகிறேன். என் பாவங்களை எண்ணி அஞ்சிக் கொண்டிருக்கிறேன்'' எனக் கூறினார். ''இம்மாதிரியான மரண வேளையில் ஓர் அடியானின் உள்ளத்தில் இவ்விரண்டும் ஒன்று சேர்ந்தால் அல்லாஹ் அவன் விரும்பியதைக் கொடுத்து அவன் அஞ்சுவதை இல்லாமலாக்குவான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(திர்மிதி. இப்னுமாஜா)

**3.** நோய் கடுமையானால் மரணத்தை வேண்டுவது கூடாது. தேவையானால்,

*"யா அல்லாஹ்! எனக்கு வாழ்கை நன்மை பயக்குமாயின் வாழச் செய்வாயாக! மரணிப்பது நன்மையாயின் மரணிக்கச் செய்வாயாக!"* எனப் பிரார்த்திக்கலாம்.

(புகாரி, முஸ்லிம், ஹாகிம்).

**4.** நோயாளிகளிடம் மற்றவர்களின் உடமைகள் இருந்தால் அவற்றை ஒப்படைத்து விட வேண்டும். அல்லது அது பற்றி "வஸிய்யத்" செய்து (விவரமான மரணசாசனம் எழுதி) விட வேண்டும். இது நபி (ஸல்) அவர்களின் கட்டளையாகும்.

(புகாரி, பைஹகி)

**5.** நோயாளி "வஸிய்யத்" (மரண சாசனம்) செய்வது கட்டாயமாகும். ஏனெனில் "வஸிய்யத்" எழுதப்பட்ட ஓலையை தன் தலைக்கடியில் வைக்காது இரண்டு இரவுகளைக் கழிப்பது ஒரு முஸ்லிமுக்கு ஆகாத செயலாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த நபிமொழியைக் கேட்ட நாளிலிருந்து ஒவ்வொரு இரவும் நான் எனது மரண சாசனத்தை எழுதி வைத்துக் கொள்ளாது இருக்கவில்லை என இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி)

**6.** நோயாளியின் பொருட்களில் சொத்துரிமையற்ற இன, ஜனங்களுக்கு வஸிய்யத் செய்வது கட்டாயமாகும். ஏனெனில்,

*உங்களில் எவருக்கு மரணம் நெருங்கி விடுகிறதோ அவர் ஏதேனும் பொருள் விட்டுச் செல்பவராக இருப்பின், அவர் (தம்) பெற்றோருக்கும், பந்துக்களுக்கும் முறைப்படி வஸிய்யத்து (மரண சாஸனம்) செய்வது விதியாக்கப் பட்டிருக்கிறது; (இதை நியாயமான முறையில் நிறைவேற்றுவது) முத்தகீன்கள் (பயபக்தியுடையோர்) மீது கடமையாகும்.*

(அல் குர்ஆன்: 2:180)

என அல்லாஹ் கூறியுள்ளான்.

**7.** நோயாளி தன் செல்வங்களிலிருந்து மூன்றிலொரு பகுதியை மரண சாசனம் செய்யலாம். இதைவிட அதிகப் படுத்துவது கூடாது. குறைத்துக்கொள்வது கூடும்.

*ஸஃதிப்னு அபீ வக்காஸ் (ரழி) அறிவிக்கிறார்கள்:*

*நபியவர்களின் கடைசி ஹஜ்ஜின் போது நானும் சென்றிருந்தேன். அவ்வேளை கடும் நோய்வாய்ப்பட்டேன். நபியவர்கள் என்னிடம் வந்து நலம் விசாரித்தார்கள். அப்போது நான் "இறைத்தூதர் அவர்களே! என்னிடம் அதிகம் செல்வங்கள் உள்ளன. எனக்கு ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே இருக்கிறது. ஆகவே என் செல்வங்களில் மூன்றில் இரு பங்கை மற்றவர்களுக்கு வஸிய்யத் செய்யட்டுமா?" எனக் கேட்டேன். "அவ்வாறு செய்ய வேண்டாம்" என்று நபியவர்கள் கூறினார்கள். அப்படியானால் சரிபாதியையாவது "வஸிய்யத்" செய்யட்டுமா? எனக் கேட்டேன். "வேண்டாம்" என்றார்கள். மூன்றில் ஒரு பங்கையாவது "வஸிய்யத்" செய்யட்டுமா? என்று மீண்டும் கேட்டேன். மூன்றில் ஒரு பங்கு! மூன்றில் ஒரு பங்கும் அதிகமே. ஸஃதே! உன் வாரிசுகளை பணக்காரர்களாக இருக்கச் செய்வது அவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்கும் பிச்சைக்காரர்களாய் ஆகி விடுவதை விட மேலானதாகும். ஸஃதே! அல்லாஹ்வுக்காக நீர் செலவு செய்வது உனக்கு நற்கூலியைத் தரும். உன் மனைவிக்குக் கொடுக்கும் ஒரு கவளம் உணவும் நன்மையையே தரும்!" என்று நபியவர்கள் கூறினார்கள்.*

(புகாரி, முஸ்லிம்).

இந்த நிகழ்ச்சிக்குப் பின் ஒருவர் தன் செல்வங்களில் மூன்றிலொரு பகுதியை மரண சாசனம் செய்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுவிட்டது. மூன்றிலொரு பங்கும் அதிகமே என நபியவர்கள் கூறியதை ஆதாரமாக வைத்து நான்கிலொரு பகுதியையும் வஸிய்யத் செய்யலாம் என்று இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**8.** மரண சாசனம் செய்யும்போது இரண்டு நேர்மையான முஸ்லிம் ஆண்கள் சாட்சிகளாக இருத்தல் வேண்டும். முஸ்லிம்கள் இல்லாதபோது வேறு இரு ஆண்கள் சாட்சிகளாக இருத்தல் வேண்டும்.

*''ஈமான் கொண்டவர்களே! உங்களில் யாருக்கேனும் மரணம் சமீபித்து (அவர் மரண சாஸனம் கூற விரும்பினால்) அச்சமயத்தில் உங்களுக்குள் நம்பிக்கைக்குரிய இரண்டு சாட்சிகள் இருக்க வேண்டும்; அல்லது உங்களில் எவரும் பூமியில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது மரணம் சமீபித்தால் (அப்போது முஸ்லிம்களாக இரு சாட்சிகள் கிடையாவிடின்) உங்களை அல்லாத வேறு இருவர் சாட்சியாக இருக்கட்டும்.*

(அல்-குர்ஆன்: 5:106)

**9.** *சொத்துரிமைக்கு தகுதியுள்ள பெற்றோருக்கும் உறவி ாருக்கும் மரண சாசனம் (வஸிய்யத்) செய்வது கூடாது.*

*நட ''வர்கள் கடைசி ஹஜ்ஜின்போது ஒவ்வொருவருக்கும் அவரவர் உரிமைகளை அல்லாஹ் கொடுத்துள்ளான். சொத்துரிமை உள்ளவர்களுக்கு வஸிய்யத் கூடாது எனக் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், திர்மிதி, பைஹகி)

**10.** *மரண சாசனத்தில் சங்கடங்களை ஏற்படுத்துவது ஹராமாகும். உதாரணமாக சொத்துரிமைக்கு தகுதி உள்ளவருக்கு சொத்து கிடைக்கக்கூடாது எனும் வகையில் ''வஸிய்யத்'' செய்வது கூடாது. அல்லது ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்து ஒரு பிள்ளையின் மீதே அன்பும், இரக்கமும் கொண்டு, அந்தப் பிள்ளைக்கு மட்டுமே சொத்துரிமை சேர ''வஸிய்யத்'' செய்வது கூடாது. இது இஸ்லாத்தில் விலக்கப்பட்டதாகும்.*

*பெற்றோரரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச்சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு; அவ்வாறே பெற்றோரரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு - (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி; அதிகமாக இருந்தாலும் சரியே; (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்.*

*(இதுவும்) அவர்களின் மரண சாஸனமும் கடனும் நிறைவேற்றிய*

பின்னர்தான்; ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக்கூடாது; (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். இன்னும் அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்.

(அல் குர்ஆன்: 4:7, 12)

''தீங்கிழைக்கவும் கூடாது. தீங்கிற்குப் பழி வாங்கவும் கூடாது. எவன் தீங்கிழைத்தானோ அல்லாஹ் அவனுக்குத் தீங்கிழைப்பான். எவன் பிறரைக் கஷ்டத்திலாக்குகிறானோ அவனுக்கு அல்லாஹ் கஷ்டத்தை உண்டாக்குவான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(தாரகுத்னீ, ஹாகிம்)

**11.** அநீதமான (வரம்பு மீறிய - நூதனமான) மரண சாசனம் (வஸிய்யத்) நிராகரிக்கப்பட வேண்டியதாகும். (இதை நிறைவேற்றக் கூடாது).

ஏனெனில்,

''நம்முடைய மார்க்கத்தில் அதில் இல்லாததை நுழைப்பவர்களின் செயலானது நிராகரிக்கப்பட வேண்டியதாகும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

**12.** அதிகமான முஸ்லிம்கள் அநாச்சாரங்களில் (பித்அத்) மூழ்கியிருக்கும் இக்காலத்தில் குறிப்பாக மரணச் சடங்குகளில் அநாச்சாரங்கள் அதிகமாகியுள்ள இக்காலத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையின் (சுன்னத்தின்)படி தன்னைக் குளிப்பாட்டி தொழுவித்து அடக்கம் செய்ய வேண்டிய முறைகளை மரண சாசனம் (வஸிய்யத்) செய்தல் வேண்டும்.

முஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும்; அதில் கடுமையான பலசாலிகளான வானவர்கள் (காவல்)

**இருக்கின்றனர்; அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள்; தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள்.**

(அல் குர்ஆன்: 66:6)

இதனால்தான் நபித்தோழர்கள் தங்கள் மரண சாசனத்தைக் கூறிவிட்டே மரணமடைபவர்களாக இருந்தனர். "நான் இறந்து விட்டால் யாருக்கும் அறிவித்து விடாதீர்கள்! அது எனக்குத் துக்கம் கொண்டாடுவதாக அமைந்து விடும். துக்கம் கொண்டாடுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்" என ஹுதைபா (ரழி) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

இவற்றை ஆதாரமாகக் கொண்டு "அல்அத்கார்" என்னும் நூலில் இமாம் நவவி அவர்கள் "மரண சாசனம்" கூறுவதும் அவ்வேளை பித்அத்களை ஒழித்து நபித் தோழர்கள் காட்டிய வழியில் தன்னை நல்லடக்கம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி "வஸிய்யத்" கூறுவதும் மிகவும் முக்கியமாக விரும்பத்தக்கதாகும் எனக் கூறியுள்ளார்கள்.

# 2. மரண வேளையில் மற்றவர்கள் செய்ய வேண்டியவை

**13.** நோயாளிக்கு மரணவேளை வந்ததும் அருகில் இருப்பவர்களுக்குச் சில செயல்கள் கடமையாகின்றன.

1. அவருக்குக் கலிமாவை எடுத்துக் கூறி அதனைச் சொல்லும்படி செய்ய வேண்டும்.

*"உங்களில் யாருக்காவது மரணம் நெருங்கினால் அவருக்கு கலிமாவை எடுத்துக் கூறுங்கள். எவனுடைய பேச்சின் கடைசிச் சொல் "லா இலாஹ இல்லல்லாஹு" என்றிருக்கிறதோ அவன் சுவனம் புகுவான். அதற்கு முன்னுள்ள பாவச் செயல்களுக்குப் பரிகாரமாகவும் இருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(முஸ்லிம்)

2. அவருக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அவரிடத்தில் நல்லவற்றையே கூறவேண்டும்.

*"நோயாளியிடத்தில் அல்லது மரணத்தருவாயில் உள்ளவர் இடத்தில் நீங்கள் சென்றால் நல்லவற்றையே கூறுங்கள். ஏனென்றால், நீங்கள் கூறுவதற்கெல்லாம் வானவர்கள் 'ஆமீன்' கூறுகிறார்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(முஸ்லிம், பைஹகி)

**14.** கலிமாவை எடுத்துக் கூறுங்கள் என்பதன் பொருள் மரணித்துக் கொண்டிருப்பவர் செவிமடுத்தால் மட்டும் போதுமென்பதல்ல. அவர் வாயினால் மொழிய வேண்டும் என்பதே கருத்தாகும். (மரணித்துக் கொண்டிருப்பவர்) "லா இலாஹ இல்லல்லாஹு" என்று கூற வேண்டும்.

*நோயுற்றிருந்த அன்ஸாரித் தோழர் ஒருவரைக் காண்பதற்கு நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். தோழரைப் பார்த்து 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று சொல்லுங்கள் என்றார்கள். நான் லா இலாஹ இல்லல்லாஹ் என்று*

கூறுவது நல்லதா? என நோயாளி கேட்டார். ஆம்! (நல்லது) என்று நபியவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத்)

**15.** மரணித்துக் கொண்டிருப்பவரிடம் **''யாஸீன்''** அத்தியாயத்தை ஓதும்படியும், அவரை கிப்லாவின் பக்கம் முகம் திருப்பி வைக்கும்படியும் வந்துள்ள நபிமொழிகள் எதுவும் சரியானதல்ல. சட்டவல்லுநரும், தாபியீன்களில் தலைசிறந்தவரும், மார்க்கத் தீர்ப்பு வழங்குபவராகவுமிருந்த ஸயீத் இப்னு முஸைய்யப் (ரஹ்) அவர்கள் இவ்வாறு செய்வது (கிப்லாவின் பக்கம் முகம் திருப்பி வைப்பது) மக்ருஹ் (விரும்பத்தகாதது) என்று தீர்ப்பளித்தார்கள். மரணித்தவர் முஸ்லிமல்லவா? எனக் கேட்டார்கள்.

ஸயீத் இப்னு முஸைய்யப் (ரஹ்) அவர்கள் மரணத் தருவாயில் இருக்கும்போது அபூஸலமத் இப்னு அப்துர் ரஹ்மான் அவர்கள் பக்கத்திலிருந்தார்கள். ஸயீத் அவர்கள் மயக்கமடைந்தபோது அன்னாரின் படுக்கையை கிப்லாவின் பக்கம் முகம் வருமாறு திருப்பக் கூறினார்கள். அவ்வாறு செய்யப்பட்ட சிறிது நேரத்திற்குப் பின் ஸயீத் இப்னு முஸைய்யப் அவர்கள் உணர்வு பெற்று என் படுக்கையைத் திருப்பினீர்களா? எனக்கேட்டார்கள். ஆம்! என பதிலளிக்கப்பட்டது. அபூஸலமாவின் பக்கம் பார்த்து ''நீர் தான் இவ்வாறு செய்யச் சொன்னீரா?'' எனக் கேட்டார்கள். ஆம்! எனக் கூறியவுடன் பழையபடி படுக்கையை மாற்றும்படி கட்டளையிட்டார்கள் என ஸுர் ஆ இப்னு அப்துர் ரஹ்மான் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(இப்னு அபீஷைபா, முஸன்னப்)

**16.** ஒரு நிராகரிப்பாளரின் மரணத் தருவாயில் முஸ்லிம் அருகிலிருப்பது பிழையல்ல. எனினும் அவர் மரணித்துக் கொண்டிருப்பவரிடம் இஸ்லாத்தை எடுத்துக் கூற வேண்டும். அவர் இஸ்லாத்தைத் தழுவிக் கொள்வதை ஆதரவு வைத்துக் கலிமாவைக் கூற வைப்பது நபி வழியாகும்.

*அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*ஒரு யூதச் சிறுவன் நபி (ஸல்) அவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தான். அவன் நோயுற்ற போது நபியவர்கள் நலம் விசாரிக்கச் சென்றார்கள். (அவன் மரணத்தருவாயில் இருப்பதைக் கண்ட) நபியவர்கள் அவன் தலைப்பக்கம் உட்கார்ந்து கொண்டு இஸ்லாத்தில் சேர்ந்து விடு! என்றார்கள். அவன் பக்கத்திலிருந்த தன் தந்தையைப் பார்த்தான். அவனுடைய தந்தை 'நபியவர்கள் சொல்லுகிறபடி செய்' எனக் கூறினார். உடனே அவன் கலிமா உரைத்து இஸ்லாத்தில் இணைந்து விட்டான். நரகத்திலிருந்து இவனைக் காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் எனக் கூறிக் கொண்டு நபியவர்கள் வெளியேறினார்கள். அவன் இறந்தவுடன் உங்கள் தோழருக்காகப் பிரார்த்தியுங்கள் (தொழுகை நடத்துங்கள்) எனத் தோழர்களுக்கு நபியவர்கள் கட்டளையிட்டார்கள்.*

(புகாரி, பைஹகி, ஹாகிம்)

# 3. மரணமடைந்தவருக்குப் பக்கத்திலிருப்பவர்கள் செய்ய வேண்டியவை

**17.** நோயினால் பீடிக்கப்பட்டவர் மரணமடைந்து விட்டால் பக்கத்திலிருப்பவர்கள் செய்ய வேண்டிய பல வேலைகள் உள்ளன.

(அ) என் கணவர் அபூஸலமா மரணமடைந்தவுடன் நபி (ஸல்) அவர்கள் வந்திருந்தார்கள். அப்போது என் கணவரின் கண் திறந்திருந்தது. நபியவர்கள் இலேசாகக் கசக்கிக் கண்ணை மூடிவிட்டு 'உயிர் கைப்பற்றப் பட்டவுடன் (பிரிந்தவுடன்) பார்வை அதனை நோக்கியே இருக்கும்' எனக் கூறினார்கள். இதனைக் கேட்டவர்கள் அனைவரும் நடுக்கமுற்று அழுதார்கள். 'நீங்கள் உங்களைப் பற்றி நன்மையான சொல்லையே உபயோகித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் கூறுபவற்றுக்கு வானவர்கள் ஆமீன் கூறுகிறார்கள்' எனக் கூறிவிட்டுப் பின்

''யா அல்லாஹ்! அபூஸலமாவுக்குப் பிழை பொறுப்பாயாக! நேர்வழியடைந்தவர்களில் அவர் பதவியை உயர்த்துவாயாக! அவர் தமக்குப் பின் விட்டுச் செல்லும் மக்களுக்கு நீயே பிரதிநிதியாக இருந்து காப்பாற்றுவாயாக! எல்லா உலகங்களினதும் அதிபதியே! எங்களுக்கும், அவருக்கும் பிழை பொறுப்பாயாக! அவரின் மண்ணறையை விசாலப்படுத்தி வைப்பாயாக! அதிலே ஒளியையும் ஏற்படுத்துவாயாக!'' எனப் பிரார்த்தித்தார்கள்.

(முஸ்லிம், அஹ்மத்)

(ஆ) மரணித்தவரின் உடம்பு முழுவதும் மறையக் கூடியதாகத் துணியினால் மூடி வைக்க வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மரணித்த (வபாத்தான)வுடன் ''ஹிப்ராப்'' போர்வையினால் (உடம்பு முழுவதும் மறையக்கூடியவாறு) போர்த்தி வைக்கப்பட்டிருந்தார்கள் என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், பைஹகி)

(இ) ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டியவராக மரணித்தவருக்கு இவ்வாறு போர்த்தக் கூடாது. இஹ்ராம் கட்டிய பின் மரணித்தவரின் முகத்தையும் தலையையும் மூடக் கூடாது. நபி (ஸல்) அவர்களுடன் ஹஜ்ஜுக்குச் சென்ற ஒருவர் அரஃபா மைதானத்தில் வாகனத்திலிருக்கும்போது விழுந்து கழுத்து முறிந்து மரணித்து விட்டார். "அவரைத் தண்ணீர், இலந்தை இலை ஆகியவற்றால் குளிப்பாட்டுங்கள். இரண்டு துணியில் (அவருடைய இரண்டு துணியாலும்) கபனிடுங்கள். வாசனைப் பொருட்களை பயன்படுத்தாதீர்கள். அவரின் தலையையும், முகத்தையும் மூடாதீர்கள். ஏனெனில் அவர் 'தல்பியா'க் கூறியவராகவே, மறுமையில் எழுப்பப்படுவார்" என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

(ஈ) மரணித்தவரை அடக்கம் செய்வதைத் தாமதப்படுத்தக் கூடாது. விரைந்து செய்ய வேண்டும். ஏனெனில் "மையித்தை அடக்கம் செய்வதற்கு அவசரப் படுத்துங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா)

(உ) ஒருவர் மரணித்த ஊரிலேயே அடக்கம் செய்ய வேண்டும். வேறோர் இடத்திற்கு மாற்றக் கூடாது. அவ்வாறு செய்வது அடக்கம் செய்வதைத் தாமதப்படுத்தும். இது முன் கூறப்பட்ட நபிமொழியை அலட்சியப்படுத்துவதாகக் கருதப்படும்.

இதற்காகவே அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் சகோதரர் "வாதில் ஹபஷா" என்ற இடத்தில் மரணமடைந்ததும் அவரை அங்கிருந்து மதீனா கொண்டு வந்தார்கள். "எங்களைத் துக்கமடையச் செய்யவே இவ்வாறு நடந்து கொண்டீர்கள். அவர் மரணித்த இடத்திலேயே அடக்கம் செய்யப்படுவதை விரும்பினேன்" என அன்னையவர்கள் கூறினார்கள்.

(பைஹகி).

தான் இறந்து விட்டால் தன்னை இன்ன இடத்திற்கு கொண்டு சென்று அடக்கம் செய்ய வேண்டுமென்று ஒருவர் வஸிய்யத் செய்துவிட்டு இறந்தால் அந்த வஸிய்யத்தை நிறைவேற்றக் கூடாது. ஏனெனில், ஒரு மையித்தை இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்வது ஹராமாகும் என அதிகமான மார்க்க அறிஞர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள் என்று இமாம் நவவீ அவர்கள் தமது "அல்அத்கார்" எனும் ஏட்டில் கூறியுள்ளார்கள்.

(ஊ) மரணித்தவர் பிறருக்கு ஏதேனும் கடன் கொடுக்க வேண்டியது இருந்தால் அதனைக் கொடுத்து விட வேண்டும். அவரிடம் கடனைக் கொடுக்க ஏதுமில்லாவிடில் ஆட்சியாளர் அக்கடனை நிறைவேற்ற வேண்டும்.

கடன் கொடுத்தவர்கள் கடனை மன்னித்து விடுவது கூடும். அல்லது அக்கடனுக்கு மரணித்தவரின் சொந்தக் காரர் யாராவது பொறுப்பேற்றுக்கொள்ளுவதும் சிறந்த தாகும் (எவ்வாறாயினும் அவர் கடனாளியாக இருக்கும் நிலையில் அடக்கம் செய்வது விரும்பத்தக்கதல்ல).

# 4. மரணித்தவர்களிடம் இருப்பவர்களுக்கு அனுமதிக்கப்பட்டவை

**18.** மரணித்தவரின் முகத்தைத் திறந்து பார்ப்பதும் இரு கண்களுக்கு மத்தியில் முத்தமிடுவதும் (ஆர்ப்பாட்டமில்லாமல்) அழுவதும் கூடும். இதற்குரிய ஆதாரங்களாவன:-

நபி (ஸல்) அவர்கள் மரணித்த செய்தி கேட்டு அபூபக்கர் (ரழி) அவர்கள் குதிரையில் விரைந்து வந்தார்கள். நபியவர்கள் மரணிக்கும் போது அபூபக்கர் (ரழி) அவர்கள் மதினாவுக்குப் பக்கத்திலுள்ள ஸூன்ஜூ என்னும் இடத்தில் இருந்தார்கள். அங்கிருந்து விரைந்து வந்தார்கள்.

நபியவர்களின் பள்ளிவாயிலுக்கு வந்தபோது உமர் (ரழி) அவர்கள் நபியவர்கள் மரணிக்கவில்லை என்ற கருத்துபடப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். அபூபக்கர் (ரழி) அவர்கள் நேரே அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். போர்வையால் உடல் முழுவதும் போர்த்தப்பட்டிருந்த நபியவர்களின் முகத்தைத் திறந்து பார்த்தார்கள். இரு கண்களுக்கு மிடையில் முத்தமிட்டார்கள். பின்னர் அழுதார்கள். "என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாவார்களாக! அல்லாஹ்வின் தூதரே! இரண்டு மரணங்களை அல்லாஹ் உங்களுக்கு இணைக்கமாட்டான். உங்களின் (மறைவுக்குரிய) மரணத்தைப் பெற்று விட்டீர்கள்" எனக் கூறினார்கள்.

(புகாரி, நஸயீ, பைஹகி).

இச்செய்தியில் மரணித்தவரின் முகத்தைத் திறந்து பார்த்தலும், முத்தமிடுவதும், அழுதலும் இடம் பெற்றிருக்கின்றன. இதனால் இவை ஆகுமானவையாகும்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தங்கள் மகன் இப்ராஹீம் அவர்களுக்குப் பாலூட்டிய பெண்ணின் கணவர் அபூஸைப் அவர்களின் வீட்டுக்குச் சென்று அங்கு தங்கள் மகனை

எடுத்து முகர்ந்து முத்தமிட்டார்கள். அப்போது இப்ராஹீம் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தார். நபியவர்களின் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது.

இதனைக் கண்ட அப்துர் ரஹ்மான் இப்னு அவ்பு (ரழி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! நீங்களுமா (அழுகிறீர்கள்)?" எனக் கேட்டார்கள். "அவ்புடைய மகனே! இது பாசத்தினால் வரும் கண்ணீராகும். கண்கள் நீரைச் சொரிகின்றன. உள்ளம் வேதனை அடைகிறது. எனினும் அல்லாஹ் விரும்பும் சொற்களைத் தவிர ஏதும் கூற மாட்டோம். (மகனே) இப்ராஹீமே! உன் பிரிவிற்காக நாங்கள் துக்கமடைகிறோம்" எனக் கூறினார்கள். இந்த நிகழ்ச்சியை அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், பைஹகி)

நபி (ஸல்) அவர்கள் ஜஃபர் (ரழி) அவர்களின் மரணத்தையொட்டி மூன்று நாட்கள் வரை அவர் வீடு சென்று அனுதாபம் தெரிவிக்க அனுமதித்தார்கள். அதன் பின் தடுத்துவிட்டார்கள். (இதன் முழு விபரம் அனுதாபம் தெரிவித்தல் என்ற தலைப்பின் கீழ் இன்ஷா அல்லாஹ் விளக்கமாக வரும்).

# 5. மரணித்தவரின் சொந்தக்காரர்களுக்கு கடமையானவை

**19.** தனது உறவினர் ஒருவர் மரணித்து விட்டார் என்ற செய்தியை அறிந்த சொந்தக்காரர்களுக்கு இரண்டு விஷயங்கள் கடமையாகிவிடுகின்றன.

*நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம்; ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நற்செய்தி கூறுவீராக!*

*(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும்போது, 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்' என்று கூறுவார்கள்.*

*இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன, இன்னும் இவர்கள் தாம் நேர்வழியை அடைந்தவர்கள்.*

(அல்-குர்ஆண்: 2:155-157).

இந்த வசனங்கள் துன்பம் ஏற்படும்போது பொறுமையைப் பற்றிப்பிடித்து அல்லாஹ்வின் தீர்ப்புக்குத் தலை சாய்ப்பவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைத் தெளிவாக விளக்குகின்றன. பல நபிமொழிகளும் ஆதாரங்களாக இருக்கின்றன.

*ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது ஒரு அடக்கஸ்தலத்தில் பெண்ணொருத்தி அழுது கொண்டிருப்பதைக் கண்டார்கள். "பெண்ணே! அல்லாஹ்வைப் பயந்துகொள்! பொறுமையாயிரு!" என நபியவர்கள் கூறினார்கள். இவ்வாறு கூறுபவர் யார் என்று அப்பெண் நிமிர்ந்து பாராமல் "இங்கிருந்து போய்விடு, என் துன்பத்தை நீ அறியமாட்டாய்!" எனக் கூறினாள். நபியவர்கள் சென்று விட்டார்கள்.*

''உன்னோடு இப்போது பேசியவர் அல்லாஹ்வின் தூதராகும்'' என ஒருவர் வந்து கூறினார். நடுநடுங்கி, முகம் வெளுத்தவளாக அவள் நபியவர்களின் வீட்டுக்கு வந்தாள். அங்கு வாயில் காவலர் யாருமில்லை. ''அல்லாஹ்வின் தூதரே! உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லை. (மன்னித்து விடுங்கள்)'' என்றாள். ''துன்பம் ஏற்பட்ட உடனேயே மேற்கொள்ளும் பொறுமைக்குத்தான் நற்கூலி கிடைக்கும்'' என நபியவர்கள் கூறியதாக அனஸ் (ரழி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், பைஹகி)

தனது குழந்தைகள் இறந்தவுடன் பொறுமையாக இருந்து அல்லாஹ்வின் தீர்ப்புக்குப் பணிந்து விடுபவனுக்குப் பெருங்கூலியுண்டு. இது குறித்து பல நபிமொழிகள் வந்துள்ளன.

அ. (தாய், தந்தையான) இரு முஸ்லிம்களுக்குப் பருவமடைவதற்கு முன் மூன்று பிள்ளைகள் மரணித்து விடுவார்களாயின் அப்பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் அல்லாஹ் தன் அருளினால் சுவர்க்கத்தில் நுழையச் செய்கின்றான். அப்பிள்ளைகள் சுவர்க்கத்தின் வாசலில் நின்று கொண்டிருப்பார்கள். 'சுவர்க்கத்திற்குள் நுழையுங்கள்!' என்று அவர்களிடம் கூறப்படும். அப்போது அவர்கள் 'எங்கள் பெற்றோர் இல்லாமல் (முடியாது)' என்பார்கள். நீங்களும், உங்கள் பெற்றோர்களும் ''அல்லாஹ்வின் அருளினால் சுவர்க்கத்தினுள் செல்லுங்கள்'' என்று அவர்களுக்குக் கூறப்படும்.

(நஸயீ, பைஹகி)

ஆ. ''எந்தப் பெண்ணாவது அவளுக்குரிய மூன்று பிள்ளைகள் மரணித்தால் அப்பிள்ளைகள் அவளை நரகத்திற்குச் செல்ல விடாமல் திரையாக நிற்பார்கள்'' என்று நபியவர்கள் கூறியதைக் கேட்ட ஒரு பெண் ''இரண்டு குழந்தைகள் மரணித்தால்?'' என்று கேட்டாள். ''இரண்டு குழந்தைகள் இறந்தாலும் அப்படியேதான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

இ. சொந்தக்காரனோ அல்லது ஒரு முஸ்லிமோ மரணித்ததைச் செவியுற்றால் "இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" என்று கூற வேண்டும். அத்துடன் அல்லாஹும்ம அஜிர்னி ஃபீ முஸீபத்தி வஹ்லுஃப்லி ஹைரன் மின்ஹா (யா அல்லாஹ்! எனது இத்துன்பத்தைப் போக்குவாயாக! மேலும் இத்துன்பத்திற்குப் பகரமாக சிறப்பான நற்பயனைத் தந்தருள்வாயாக!) என்று கூறுவது நபிவழியாகும்.

(புகாரி, முஸ்லிம்)

**20.** தன் மகன் இறப்புக்காக ஒரு பெண் தன் அலங்காரங்களைக் குறைத்துக் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்வதானாலும் மூன்று நாட்களுக்கு மேற்படாது துக்கம் கடைப்பிடிக்கலாம். எனினும் கணவன் இறந்தால் மட்டும் மனைவி நான்கு மாதம் பத்து நாள் துக்கம் கடைப்பிடிக்க வேண்டும்.

அபூஸல்மாவின் மகள் ஜைனபு (ரழி) அவர்கள் மூலம் நான் அன்னை உம்மு ஹபீபா (ரழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றேன். அல்லாஹ்வின் மீதும், மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொண்ட எந்தப் பெண்ணும் மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் கடைப்பிடிக்க கூடாது. இறந்த கணவனுக்காக மனைவி மட்டும் நான்கு மாதம் பத்து நாள் துக்கம் கடைப்பிடிக்கலாம் என நபி(ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன் என்று அறிவித்தார்கள்.

**21.** பின்னர் அன்னை ஜைனப் பிந்து ஜஹ்ஷ் (ரழி) அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். அப்போது அவர் தமையன் மரணமடைந்திருந்தார். உடனே அவர் வாசனைத் திரவியத்தைக் கொண்டு வரச் சொல்லி அதனைப் பூசிக் கொண்டார். "எனக்கு இப்போது மணம் பூசுவதற்கு விருப்பமில்லை. எனினும் கணவன் இறந்த பெண்ணைத் தவிர வேறு எந்தப் பெண்ணும் மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் கடைப்பிடிக்கக் கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன். அதற்காகவே இப்போது மணம் பூசிக்கொள்கிறேன்" என்றார்.

(புகாரி).

# 6. மரணித்தவரின் சொந்தக்காரர்களுக்கு ஆகாதவை

**22.** சில செயற்பாடுகளை நபி (ஸல்) அவர்கள் விலக்கியுள்ளார்கள். மரணித்தவரின் உறவினர்கள் இவற்றை அறிந்து கொள்ளாது செயற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அந்தச் செயல்களிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவற்றை இங்கு விளக்குகிறேன்.

அ) ஒப்பாரி வைத்து அழுவது: அழுவது வேறு, ஒப்பாரி வைத்து அழுவது வேறு. அழுவதினால் சப்தம் வெளிவராது. கண்களிலிருந்து நீர் வழியும். இதற்கு மாற்றமாக மரணித்தவரின் நன்மைகளை எடுத்துக் கூறி 'என் தங்கமே! என் செல்வமே! போய் விட்டாயா?' என்றெல்லாம் கூறி அழுவது ஒப்பாரி வைத்தலாகும். இதனைக் கண்டித்துப் பல நபிமொழிகள் வந்துள்ளன. ஒன்றை மட்டும் கூறுகிறோம்.

*''இரு சாரார் நிராகரிப்பிலே (குஃப்ர்) இருக்கிறார்கள். வம்சத்தில் குறை காண்பவரும் இறந்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுபவரும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்*

(முஸ்லிம், பைஹகி)

ஆ) முகத்திலோ, நெஞ்சிலோ அடித்துக் கொண்டு அழுவது,

இ) சட்டைகளை உடைகளைக் கிழித்து ஆர்ப்பாட்டம் செய்து அழுவது,

*இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: முகத்திலோ, நெஞ்சிலோ அடித்து அழுபவர்களும், சட்டைகளைக் கிழித்துக் கொண்டு அழுபவர்களும், அறியாமைக்கால வசனங்களைக் கூறி ஒப்பாரி வைத்து அழுபவர்களும் நம்மைச் சேர்ந்தவர்களல்லர் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(புகாரி, முஸ்லிம், பைஹகி)

*ஈ) மொட்டையடித்தல்:* உறவினரின் மரணத்திற்காகச் சிலர் மொட்டையடிப்பதுமுண்டு. இதுவும் நபி (ஸல்) அவர்களால் விலக்கப்பட்ட செயலாகும்.

ஒரு தடவை நோயினால் பீடிக்கப்பட்ட அபூமூஸா அஷ்அரீ (ரழி) அவர்கள் மயக்கமடைந்தார்கள். இதனைக் கண்ட அவரது உறவினர் பெண் ஒருவர் ஒப்பாரி வைத்து அழுதார். மயக்கம் தெளிந்த நபித்தோழர் ஒப்பாரி வைத்து அழுபவரையும், ஆடையைக் கிழித்து அழுபவரையும் (துக்கத்தால்) மொட்டையடிப்பவரையும் வெறுத்த நபியவர்கள், இவர்களை விட்டும் நான் நீங்கிவிட்டேன். (இவர்கள் இஸ்லாத்தின் வழியிலுள்ளவர்களல்ல) எனக் கூறியுள்ளார்கள். இதனையே இப்போது நானும் கூறுகிறேன். (நானும் விலகிக் கொண்டேன்) என்று கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம், நஸயீ)

*உ) தலைமுடியை விரித்துப் போடுதல்:* சில பெண்கள் துக்கமேலிட்டால் தங்கள் தலைமுடியைக் கொண்டை போடாமலோ, வாரிக்கொள்ளாமலோ பரட்டையாகக் காட்சியளிப்பார்கள். இதனையும் நபி (ஸல்) அவர்கள் விலக்கியுள்ளார்கள்.

"நபி (ஸல்) அவர்களுடன் (பைஅத்) உறுதிப் பிரமாணம் செய்த ஒரு பெண் நாங்கள் நபியவர்களுக்கு மாறு செய்ய மாட்டோம் என்றும் துன்பத்தின் போது முகத்தைப் பிராண்டி, சட்டையைக் கிழித்து, என் கேடே! தங்கமே! எனக் கூறி ஒப்பாரி வைக்க மாட்டோம் எனவும், தலைமுடியைப் பரட்டையாக விடோம் என்பனவற்றை நிபந்தனையாக வைத்துப் பிரமாணம் செய்தோம்" எனக் கூறினார்கள்.

(அபூதாவூத், பைஹகி)

*(ஊ) தாடி வளர்த்தல்:* சிலர் துக்கமேலிட்டால் அது வரை சிரைத்துக் கொண்டிருந்த தாடியைச் சில நாட்களுக்குச் சிரைக்க மாட்டார்கள். பின்பு சிரைப்பார்கள். இதனையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.

தாடி வைப்பது முஸ்லிம் ஆண்களுக்குக் கடமையான ஒரு விஷயமாகும். நான்கு பெரும் இமாம்களும் இதனை

வலியுறுத்தியுள்ளனர். தாடியைச் சிரைக்கலாம் என அனுமதி வழங்கவில்லை. எனவே தாடியைச் சிரைப்பது 'பித்அத்'தாகும்.

*எல்லா 'பித்அத்' துக்களும் வழிகேடாகும். எல்லா வழிகேடுகளும் நரகத்திற்கு இட்டுச் செல்லும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(நஸயீ, பைஹகி)

(எ) ஒருவரின் மரணத்தைப் பற்றிப் பிரபலப் படுத்துதல், மரண அறிவித்தல் கொடுத்தல், இதுவும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டவையாகும். இது மரண வீட்டுக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டி ஏனையோரை அழைப்பதாகக் கருதப்படும். இதனையும் நபி (ஸல்) அவர்கள் விலக்கியுள்ளார்கள்.

*ஹுதைபா (ரழி) அவர்களின் உறவினர் யாராவது மரணித்தால் வேறு யாருக்கும் அறிவித்து விடாதீர்கள். அது அனுதாபத்தை வேண்டி செய்வதாகிவிடுமென்பதை அஞ்சுகிறேன். நபி (ஸல்) அவர்கள் இதனை விலக்கியுள்ளார்களெனக் கூறுவார்கள்.*

(திர்மிதி, இப்னுமாஜா)

# 7. அனுமதிக்கப்பட்ட மரண அறிவித்தல்

**23.** அறியாமைக் கால மரண அறிவித்தல்கள் ஏற்படாத வகையில் ஒருவரின் மரணத்தை விளம்பரப் படுத்தித் தெரிவிக்க முடியும். மரணித்தவருக்குச் செய்ய வேண்டிய குளிப்பாட்டுதல், கபனிடுதல், தொழுகை நடத்துதல் போன்ற செயல்களைச் செய்வதற்கு முஸ்லிம்கள் யாருமே இல்லாத போது இதனைச் செய்ய அனுமதியுண்டு. இப்படியான விளம்பரம் ஆகும்.

அபிசீனிய மன்னர் நஜ்ஜாஷி அவர்கள் மரணமடைந்த வேளை நபி (ஸல்) அவர்கள் இதனைச் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஆதாரமாகும்).

**24.** இவ்வாறு விளம்பரப்படுத்தும் போது அவருக் காகப் பிழை பொறுக்கத் தேடுங்கள்! எனக் கூறுவது விரும்பத்தக்க செயலாகும்.

*அபிசீனிய மன்னர் நஜ்ஜாஷி மரணமடைந்தவேளை அவர் மரணத்தை அறிவித்த நபியவர்கள் "உங்கள் சகோதரனுக்காகப் பிழை பொறுக்கத் தேடுங்கள்!" என தோழர்களுக்குக் கட்டளையிட்டார்கள் என்பதை அறிகிறோம்.*

(புகாரி, முஸ்லிம்)

சில ஊர்களில் அல் பாத்திஹா என்று கூறிச் சில குர்ஆன் வசனங்களை ஓதி விட்டு "யா அல்லாஹ் இதனை இன்னாருக்குச் சேர்த்து விடு" என்று கூறுவது பித்அத் தாகும். உறுதியான கருத்துப்படி குர்ஆனை ஓதி இன்னொரு வருக்கு அதனைச் சேர்ப்பித்தல் தேவையற்ற செயலாகும். அது சேரவே மாட்டா. (இன்ஷா அல்லாஹ் இதன் விபரம் பின்னால் வரும்).

# 8. நற்பேறுடன் மரணிப்பவரின் அடையாளங்கள்

**25.** சத்திய சன்மார்க்கத்தை நிலை நிறுத்திய நுண்ணறிவாளர் நபி (ஸல்) அவர்கள் நற்பேறுடன் மரணிப்பவன் (சுவனவாசியாக) மரணிக்கிறானா? என்பதை மரண வேளையில் அறியக்கூடியவாறு, சில அடையாளங்களைக் கூறியுள்ளார்கள். இந்த அடையாளங்களுடன் மரணிப்பவனுக்கு நற்பேறு கிடைக்கும்.

முதலாவது: மரணவேளையில் கலிமாவை உரைப்பவன்.

இதற்குச் சான்றாகப் பல நபி மொழிகள் வந்துள்ளன. அவற்றிலொன்று முஆத் (ரழி) அவர்கள் மூலம் "யாருடைய கடைசி வார்த்தை 'லா இலாஹ இல்லல்லாஹ்!' என்ற வார்த்தையாக இருக்கின்றதோ அவன் சுவனம் நுழைவான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஹாகிம்)

இரண்டாவது: மரணவேளையில் நெற்றி வியர்த்தல்

புரைதா இப்னு ஹஸீப் (ரழி) அவர்கள் குராஸானில் இருக்கும் போது அவருடைய சகோதரர் ஒருவர் மரணப் படுக்கையில் இருப்பதாக அறிந்து அவரைக் காணச் சென்றார்கள். அப்போது மரணப்படுக்கையில் கிடந்தவரின் நெற்றி வியர்த்திருந்தது. இதனைக் கண்ட புரைதா (ரழி) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று (மகிழ்ச்சியாய்) கூறிவிட்டு "ஒரு நம்பிக்கையாளனின் மரணத்தின் போது அவனது நெற்றி வியர்த்திருக்கும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன் எனக் கூறினார்கள்.

(அஹ்மத், நஸயீ, திர்மிதி, இப்னுமாஜா, இப்னுஹிப்பான், ஹாகிம்)

மூன்றாவது: ஜும்ஆ தினத்தின் பகலிலோ இரவிலோ மரணிப்பது:

*எந்த முஸ்லிமாவது ஜும்ஆ தினத்தின் பகலிலோ, இரவிலோ மரணமடைந்தால் மண்ணறையின் வேதனையை அல்லாஹ் நீக்கி விடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அஹ்மத், திர்மிதி)

*(மண்ணறையின் வேதனை நீக்கப்பட்டவன் வேறு எந்த வேதனைக்கும் உள்ளாக்கப்பட மாட்டான் என்பது இதன் கருத்தாகும்).*

*நான்காவது:* போர்க்களத்தில் உயிர்த் தியாகம் செய்தல்

***அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப் பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள் - தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.***

***தன் அருள் கொடையிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக் கொண்டு அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள்; மேலும் (போரில் ஈடுபட்டிருந்த தம் முஃமினான சகோதரர்களில் மரணத்தில்) தம்முடன் சேராமல் (இவ்வுலகில் உயிருடன்) இருப்போரைப் பற்றி: "அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்" என்று கூறி மகிழ்வடைகிறார்கள்.***

***அல்லாஹ்விடமிருந்து தாங்கள் பெற்ற நிஃமத்துகள் (நற்பேறுகள்) பற்றியும், மேன்மையைப் பற்றியும் நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களுக்குரிய நற்கூலியை (ஒரு சிறிதும்) வீணாக்கி விடுவதில்லை என்பதைப் பற்றியும் மகிழ்வடைந்தோராய் இருக்கின்றார்கள்.***

(அல்குர்ஆன்: 3:169 to 171)

போர்க்களத்தில் எதிரிகளால் வெட்டிக் கொல்லப் படும் நம்பிக்கையாளர்களுக்கு (ஷஹீதுகளுக்கு) ஆறு சிறப்பம்சங்கள் கிடைக்கின்றன.

அ) முதலாம் இரத்தத் துளியுடன் அவர் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

ஆ) சுவனபதியில் அவர் தங்குமிடத்தைக் கண்ணால் காண்கின்றார்.

இ) மண்ணறையின் வேதனையிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்.

ஈ) மறுமையின் பெருந்திடுக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுகிறார்.

உ) நம்பிக்கையின் அணிகலன்கள் பூட்டப்பட்டு ஹூருல் ஈன்களுடன் (சுவன மாதர்களுடன்) திருமணம் செய்து வைக்கப்படுகிறார்.

ஊ) அவரது நெருங்கிய இனசனங்களுள் (உறவினர்களுள்) எழுபது பேருக்குப் பரிந்துரை செய்து சுவர்க்கத்தில் சேர்த்து விடுகிறார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அஹ்மத், திர்மிதி, இப்னுமாஜா)

*ஐந்தாவது:* போரில் எதிரிகளால் கொல்லப்படாமல் நோயினால் மரணமடைதல்

"நீங்கள் உங்களுக்கிடையில் ஷஹாதத்(தியாகத்)தை எப்படிக் கருதுகிறீர்கள்?" என நபியவர்கள் தோழர்களிடம் வினவினார்கள். "அல்லாஹ்வின் பாதையில் (போர்க்களத்தில்) வெட்டுண்டு இறப்பதுதான் "ஷஹீத்" என்று தோழர்கள் பதிலளித்தார்கள். அவ்விதமாயின் என் சமூகத்தவர்களில் ஷுஹதாக்கள் (தியாகிகள்) மிகக் குறைவாகவே இருப்பர் எனக் கூறிவிட்டு போர்க்களத்தில் எதிரிகளால் கொல்லப்பட்டவரும் தியாகியே! போர்க்களத்தில் நோயுற்றிருப்பவரும் தியாகியே! பிளேக் கொள்ளை நோயினால் இறப்பவரும் தியாகியே! நீரில் மூழ்கி இறப்பவரும் தியாகியே! வயிற்றோட்ட நோயினால் இறப்பவரும் தியாகியே! என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்லிம், அஹ்மத்)

*ஆறாவது:* "பிளேக்" நோயினால் மரணமடைதல்

(தமிழ் அகராதியில்) கொள்ளை, கோதாரி எனக் கூறப்படும் பிளேக்நோயினால் இறக்கும் முஸ்லிம்கள் தியாகிகளாவர் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, அஹ்மத், தயாலிஸி)

*ஏழாவது:* வயிற்றோட்ட நோயினால் மரணமடைதல்.

'எவன் வயிற்றோட்ட (வாந்தி, பேதி) நோயினால் இறக்கின்றானோ அவன் தியாகியாவான்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம்)

*எட்டாவது, ஒன்பதாவது:* நீரில் மூழ்கியும் இடிபாடுகளுக்கிடையில் சிக்கியும் மரணமடைதல்.

'ஷுஹதாக்கள் (தியாகிகள்) ஐந்து வகையாவர்: காயம்பட்டு இறப்பவர், வயிற்றோட்ட நோயினால் மரணிப்பவர், நீரில் மூழ்கி, வீடு இடிந்து வீழ்ந்து மரணிப்பவர், எதிரிகளினால் கொல்லப்படுபவர் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம், திர்மிதி)

*பத்தாவது:* பிரசவத் தீட்டு கழியுமுன் இறக்கும் பெண்ணும் தியாகியேயாவார்.

"எதிரிகளினால் கொல்லப்படுபவரும், வயிற்றோட்ட நோயினால் மரணிப்பவரும், பிரசவத்தினால் மரணிப்பவரும் தியாகி (ஷஹீது)களேயாவார்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அஹ்மத், திர்மிதீ, தயாலிஸி)

*பதினொன்றாவது:* தீயினால் மரணமடைவது,

அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுவது உட்பட மேலும் ஏழு வகையினர் ஷுஹதாக் (தியாகி)களாவார்கள். காயம்பட்டுப் பல நாட்களுக்குப் பின் இறப்பவரும், நீரில் மூழ்கி இறப்பவரும் தியாகிகளேயாவார்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூதாவூத், நஸயீ, மாலிக், இப்னு மாஜா, ஹாகிம், இப்னு ஹிப்பான்)

*பன்னிரண்டாவது:* பாரிசவாத நோயினால் மரணிப்பது இதற்கு முன்னுள்ள நபிமொழி ஆதாரமாகிறது.

*பதிமூன்றாவது:* காசநோயினால் மரணிப்பது

"அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு எதிரிகளால் கொல்லப்படுபவர் ஷஹீதாவார். காசநோயினால்

*இறப்பவரும் ஷஹீதாவார். வயிற்றோட்ட நோயினால் இறப்பவரும் ஷஹீதாவார்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அஹ்மத், தயாலிஸி)

*குறிப்பு:* இந்த நோய் அதிகமாகப் புகை பிடிப்பவர்களுக்கே ஏற்படுகிறது. நுரையீரலில் புகைமண்டி சுவாசிக்கக் கஷ்டப்பட்டு இருமி, இருமி, அவஸ்தைப்பட்டு இந்த நோயினால் பீடிக்கப்பட்டு இறப்பவர்களுக்கு இந்த ஷஹீத் பதவி கிடைக்காது. புகை பிடிக்காமல், இந்த நோய் வருபவர்களுக்கே இப்பதவி கிட்டும்.

*பதினான்காவது:* தன் பொருளைப் பாதுகாப்பதற்காக திருடனுடன் போராடி இறத்தல்.

*எவன் தன் பொருளைக் காப்பாற்ற திருடனுடன் போராடி இறக்கின்றானோ அவன் ஷஹீதா (தியாகியா)வான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத்)

*பதினைந்தாவது:* மதத்திற்காகக் கொல்லப்படுபவர் தியாகியாவார். (அதாவது ஒரு குடிகாரனைக் கண்டு நீ குடிக்காதே! இஸ்லாத்திலே மது விலக்கப்பட்டுள்ளது என்று கூறும்போது அவன் ஆத்திரத்தில் இப்படி அறிவுரை கூறுபவரை கொன்று விடுவார். இவ்வாறு கொல்லப்படுபவரே மதத்திற்காக கொல்லப்பட்ட ஷஹீத் பதவியைப் பெறுவார்)

*எவன் தன் பொருளைக் பாதுகாப்பதற்காகத் திருடனுடன் போரிட்டு மரணிக்கின்றானோ அவர் ஷஹீதாவார். தன் குடும்பத்தினரின் மானம் காக்கப் போரிட்டு மரணிப்பவனும் ஷஹீதாவான்.*

*தன் மதப்பிரச்சாரத்திற்காகக் கொல்லப்படுபவரும் ஷஹீத் (தியாகி) ஆவார். தன்னுயிரைப் பாதுகாப்பதற்காகப் போரிட்டு மரணிப்பவரும் ஷஹீதாவார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், நஸயீ, திர்மிதி, அஹ்மத்)

*பதினாறாவது:* தன்னுயிரைக் காப்பாற்றுவதற்காகப் போரிட்டு மரணிப்பவர். இதற்கு முன் கூறப்பட்ட நபி மொழியே ஆதாரமாகின்றது.

*பதினேழாவது:* அல்லாஹ்விற்காகப் போரிடுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருத்தல்.

*இவ்வேளை மரணம் சம்பவித்தல், ஒரு பகலும், இரவும் போருக்கு ஈடுபட்டிருப்பது ஒரு நாள் முழுவதும் பகலில் நோன்பு வைத்து இரவு முழுக்க நின்று வணங்குவதை விட மேலானதாகும். அவ்வேளை அவனுக்கு மரணம் சம்பவித்தால் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தானோ அதன் பிரதி பலன் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அவனுக்குரிய உணவு அளிக்கப்படும். மறுமைக் குழப்பங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(முஸ்லிம், நஸயீ, திர்மிதி, ஹாகிம், அஹ்மத்)

*பதினெட்டாவது:* நற்செயல்களில் ஈடுபட்டிருக்கும் போது மரணமடைதல்.

*குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும்போதோ, தொழுது கொண்டிருக்கும் பொழுதோ, அறிவுரை செய்து கொண்டிருக்கும் பொழுதோ மரணமடைந்தால், அல்லாஹ்வின் மீது உறுதி கொண்டு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று மொழிபவர் அக்கலிமாவுடனே மரணமடைந்தால் சுவனம் செல்வார். அல்லாஹ்விற்காக நல்லெண்ணம் கொண்டு ஒரு நாள் நோன்பு வைத்தவர், அதன் நன்மையைக் கொண்டே மரணமடைந்து சுவனம் செல்வார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அஹ்மத்)

*(மேற்கூறப்பட்ட இந்த நபிமொழியை ஆதாரமாக வைத்து இந்நூலாசிரியர் ஒரு சம்பவத்தைக் குறித்துள்ளார். ஹிஜ்ரி 1401ஆம் ஆண்டு நானும் என் மூத்த சகோதரனும் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றச் சென்றிருந்தோம். அவர் பெயர் முஹம்மது நாஜி அபூஅஹ்மத் என்பதாகும்.*

*ஹஜ்ஜுக் கடமைகளை முடித்துக் கொண்டு கல்லெறியும் மைதானத்தில் நண்பர்களுடன் இருந்தோம். அப்போது*

நண்பர் ஒருவர் ஒரு கோப்பை தேனீரை எடுத்து இடது கையினால் என் சகோதரனிடம் நீட்டினார். "நண்பரே! நபி வழிக்கு மாறு செய்யாதீர்கள்! வலது கையினால் கொடுங்கள்!'' என்றார். அந்தத் தேனீர்க் கோப்பையை வாங்குவதற்கு முன்னால் அவருக்கு மரணம் நேர்ந்து விட்டது. அவர் நபி வழி ஒன்றை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கும்போதே மரணம் சம்பவித்து விட்டது. எனவே எங்களையும் அவரையும் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள், சத்தியவான்கள் ஷுஹதாக்கள், நல்லொழுக்கமுடையவர்களுடன் மறுமையில் ஒன்று சேர்ப்பானாக! என்று எழுதியுள்ளார்)

*பத்தொன்பது:* கொடுமைக்காரத் தலைவனால் அவனுக்கு நல்லுரை வழங்கிக் கொண்டிருக்கும்போது கொல்லப்படுபவர்.

> *''ஷுஹதாக் (தியாகி)களின் தலைவர் ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிப் ஆவார். ஒரு கொடுமையான தலைவனுக்கு நல்லதை ஏவித் தீயதைத் தடுத்துக் கொண்டிருக்கும் வேளை அவனால் கொல்லப்படுபவர் (ஷஹீதாவார்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*
> (ஹாகிம், கதீப்)

இந்தப் பத்தொன்பது அடையாளங்களையும் பெற்று மரணிப்பவர்களை நற்பேறு பெற்று மரணித்து விட்டார் என்று நாம் தயங்காமல் கூறலாம்.

# 9. மரணித்தவரை மக்கள் புகழ்தல்

**26.** உண்மையான முஸ்லிமாக மரணித்தவருக்கு அயல் ஊரிலுள்ள அவரையறிந்த முஸ்லிம்கள் பலர் அவரைப்பற்றி நல்லது கூறுவார்களேயானால் அவரும் சுவனவாசியே யாவார். மரணித்தவரைப் போற்றுபவர்கள் குறைந்த பட்சம் இரண்டு பேராயிருப்பினும் சரியே!

இதற்கு ஆதாரமாகப் பல நபிமொழிகள் உள்ளன. அவற்றில் மூன்று நபிமொழிகளை மட்டும் இங்கு பார்ப்போம்.

அ. அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:
'நபியவர்களுக்குப் பக்கத்தில் ஒரு ஜனாஸா ஊர்வலம் சென்றது. ஜனாஸாவோடு சென்றவர்களில் சிலர் மரணித்தவரைப் பற்றி புகழ்ந்து கூறினர். அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் மாறு செய்யாது அவர்களை நேசித்து வாழ்ந்தார் என்றும் கூறினார்கள். இதனைக் கேட்ட நபியவர்கள் "உறுதியாகிவிட்டது, உறுதியாகிவிட்டது, உறுதியாகி விட்டது" என்று கூறினார்கள்.

இன்னொரு ஜனாஸாவைத் தாங்கிய ஊர்வலம் சென்ற வேளை ஜனாஸாவுடன் சென்ற சிலர் மரணித்தவரைப் பற்றி இகழ்ந்து கூறினார்கள். அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் கெட்டவன் என்றும் கூறினார்கள். இதனைக் கேட்ட நபியவர்கள் "உறுதியாகிவிட்டது, உறுதியாகிவிட்டது, உறுதியாகிவிட்டது" எனக் கூறினார்கள்.

நபியவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த உமர் (ரழி) அவர்கள் இறைத்தூதர் அவர்களே! என் தாயும், தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாவார்களாக! முன் சென்ற ஜனாஸாவைப் பலர் புகழ்ந்து கூறினர். நீங்கள் உறுதியாகி விட்டது, உறுதியாகி விட்டது, உறுதியாகி விட்டது என்று கூறினீர்கள். அடுத்ததாகச் சென்ற ஜனாஸாவைப் பலர் இகழ்ந்து பேசினர். அதற்கும் உறுதியாகி

விட்டது, உறுதியாகி விட்டது, உறுதியாகி விட்டது எனக் கூறினீர்கள். (என்ன உறுதியாகி விட்டது) எனக் கேட்டார்கள்.

"யாரை நீங்கள் புகழ்ந்து கூறினீர்களோ அவர்களுக்கு சுவனம் உறுதியாகி விட்டது. யாரை நீங்கள் இகழ்ந்து கூறினீர்களோ, அவருக்கு நரகம் உறுதியாகி விட்டது. (வானில் வானவர்கள் அல்லாஹ்வுக்குச் சாட்சிகளாக இருக்கின்றனர்). நீங்கள் பூமியில் அல்லாஹ்வுக்குச் சாட்சிகளாக இருக்கின்றீர்கள்!

மற்றொரு அறிவித்தலின்படி: நம்பிக்கையாளர்கள் பூமியில் அல்லாஹ்வுக்குச் சாட்சிகளாக இருக்கின்றனர். அல்லாஹ்வுக்குச் சில வானவர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஆதமுடைய மக்களின் நாவினால் பேசுவார்கள் என நபி (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.

(புகாரி, முஸ்லிம், நஸயீ, திர்மிதி, இப்னுமாஜா, ஹாகிம், அஹ்மத்)

ஆ. அபுல் அஸ்அத்தைல் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் ஒரு தடவை மதீனாவுக்கு வந்தேன். அப்பொழுது மதீனாவில் (விசித்திர) நோய் ஒன்று பரவியிருந்தது. மதீனா வாசிகள் வேகமாக மரணமடைந்து கொண்டிருந்தார்கள்.

நான் உமர் (ரழி) அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். அப்பொழுது எங்களுக்கு அருகில் ஒரு ஜனாஸா சென்றது. அந்த ஜனாஸாவுக்குரியவரைப் பலர் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். இதனைக் கேட்ட உமர் (ரழி)அவர்கள் உறுதியாகி விட்டதெனக் கூறினார்கள். அமீருல் முஃமினீன் அவர்களே! என்ன உறுதியாகி விட்டது? எனக் கேட்டேன். நான் நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்றே கூறினேன். அந்த ஜனாஸாவை யாராவது நான்கு பேர் புகழ்ந்து கூறுவார்களாயின் அவருக்குச் சுவனம் உறுதியாகி அதில் அல்லாஹ் நுழையச் செய்வான் என நபியவர்கள் கூறினார்கள். அப்போது நாங்கள் 'மூன்று

பேர் புகழ்ந்தால்?' எனக் கேட்டோம். மூன்று பேராயினும் சரியே! என்றார்கள். இரண்டு பேர் புகழ்ந்தால்? என மீண்டும் கேட்டோம். இருவராயினும் சரியே! (சுவனம் உறுதியாகி விடும்!) என்றார்கள். ஒருவர் புகழ்ந்தால் என நாங்கள் கேட்கவில்லை என உமர் (ரழி) அவர்கள் விடையளித்தார்கள்.

(புகாரி, நஸயீ, திர்மிதி, பைஹகி, தயாலிஸி, அஹ்மத்)

எந்த முஸ்லிமாவது மரணித்தால் அவன் வீட்டுக்கு மிகச் சமீபமாக உள்ள அண்டைவீட்டினர் அவனைப் புகழ்ந்து கூறுவார்களேயானால் உங்கள் வார்த்தையை நான் ஏற்றுக் கொண்டேன். உங்கள் பார்வைக்குப் படாத அவர் தவறுகளையும் மன்னித்துவிட்டேன் என அல்லாஹ் கூறுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அஹ்மத், ஹாகிம்)

# விரிவுரை

இம்மூன்று நபிமொழிகளும் நபித்தோழர்களுக்கு மட்டுமே பொருந்தும். அவர்களுக்குப் பின் வந்தவர்களுக்கல்ல என்று சிலர் கூறுவது ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதல்ல. நபித்தோழர்கள் சென்ற வழியில் செல்லும் எல்லா முஸ்லிம்களுக்கும் பொருத்தமாகவேயிருக்கும். ஒழுக்க சீலமுடைய நற்செயல்கள் புரியும் எல்லா முஸ்லிம்களுக்கும் இந்தப் பேறு கிடைக்கும் என இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் "அல்பத்ஹு" என்ற ஏட்டில் கூறியுள்ளார்கள். நான்கு பேர் உறுதிப்படுத்த வேண்டும் என்ற நபிமொழி சரியானதே. எனினும் உமர் (ரழி) அவர்களின் அறிவிப்பின் படி இரண்டு பேர் சாட்சியமளித்தாலும் போதும் என்பதே விளக்கமாகும்.

சில ஊர்களில் ஜனாஸாவை அடக்கம் செய்வதற்கு முன் மண்ணறையின் ஓரத்தில் அந்த ஜனாஸாவை வைத்துக் கொண்டு ஒருவர் இந்த மையித்தைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? என்று கேட்பார். கூடியிருப்பவர் "நல்லவர்; இவர் நன்மைகள் செய்வதைக் கண்டோம்" என்று பதில் கூறுவார்கள். இவ்வாறு மூன்று முறை கேள்வி பதில் நடக்கும். இவ்வாறு கேள்வி கேட்பதும் பதில் கூறுவதும் "பித்அத் தாகும்". இதனால் எவ்விதப் பயனும் இல்லை.

இந்த நபிமொழிகளில் கூறப்பட்ட புகழ் வார்த்தைகள் மக்கள் உள்ளத்திலிருந்து இயல்பாக எழுந்து நாவினால் வெளியாக வேண்டும். இன்னொருவர் சொல்லிக் கொடுத்து சொல்லுவதல்ல. உள்ளத்திலிருந்து வெளியாகக் கூடியவாறு மரணித்தவர் நடத்தை இருந்தால் அதனையே வானவர்கள் மனிதர்களின் நாவினால் மொழிவார்கள். இந்தப் புகழ் வார்த்தைகளையே அல்லாஹ் ஏற்றுக் கொண்டு சுவனம் கொடுக்கின்றான்.

நாலு பேர் என்ன, நாற்பது அல்லது நானூறு பேர் சடங்குக்காக, முகஸ்துதிக்காக, மரணித்தவரின் இன சனங்களின் (உறவினர்களின்) திருப்திக்காக நல்லவர் என்று கூறினாலும் பயனில்லை. உதட்டளவில் ஏற்படும் வார்த்தையே தவிர அது உள்ளத்திலிருந்து வருவதல்ல. மரணிப்பதற்கு முன்னர் அவர் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை மக்கள் அறிந்து கொண்டிருப்பார்கள். அம்மக்களின் உள்ளத்திலிருந்து நல்ல வார்த்தையோ, கெட்ட வார்த்தையோ வெளியாகும். இதனை யாரும் மறுக்க முடியாது.

# 10. கிரகணங்களின் போது மரணித்தல்

**27.** ஒருவரின் மரணமும் சூரிய, சந்திர கிரகணங்களும் ஒன்று சேர்ந்தால் அது எந்த முக்கியத்துவத்தையும் காட்டமாட்டா. ஒரு பெரிய மனிதரின் இறப்புக்குத்தான் கிரகணம் ஏற்பட்டிருக்கிறது என எண்ணுவது அறியாமைக் கால (ஜாஹிலிய்யா) நம்பிக்கையாகும். இறைத்தூதர் அவர்களின் இனிய மகன் இப்ராஹீம் மரணமடைந்தபோது சூரிய கிரகணமும் ஏற்பட்டது. இதனை நம்பி பேசிக் கொண்டிருந்த மக்களைக் கண்டு நபியவர்கள் கண்டித்து உரையாற்றினார்கள்.

*''மக்களே! அறியாமைக்கால மக்கள் ஒரு பெரிய மனிதரின் இறப்புக்காகத் தான் கிரகணம் பிடித்துள்ளது என நம்பிக் கொண்டிருந்தார்கள். இது தவறான நம்பிக்கையாகும். சூரிய, சந்திர கிரகணங்கள் அல்லாஹ்வின் அத்தாட்சியிலுள்ளவையாகும். அது யாருடைய பிறப்பிற்கோ இறப்பிற்கோ ஏற்பட்டதல்ல. அதன் மூலம் அல்லாஹ் மக்களுக்கு எச்சரிக்கை விடுகின்றான். கிரகணம் பிடிப்பதை நீங்கள் கண்டால் அல்லாஹ்வைத் துதிப்பதற்கும், பிரார்த்திப்பதற்கும், பாவமன்னிப்புக் கோருவதற்கும் விரையுங்கள்! தர்மம் செய்யுங்கள்! அடிமையை விடுதலை செய்யுங்கள்! அது (கிரகணம்) நீங்கும் வரை பள்ளி வாசலுக்குச் சென்று தொழுங்கள்!'' எனக் கூறினார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத்)

# 11. மையித்தைக் குளிப்பாட்டுதல்

**28.** ஒருவர் இறந்து விட்டால் ஏனைய மக்கள் சிலரின் மீது மரணித்தவரைக் குளிப்பாட்ட அவசரப்படுவது கடமையாகும். இவ்வாறு அவசரப்படுத்துவதற்குரிய ஆதாரங்களை மூன்றாம் பிரிவில் கூறிவிட்டோம். குளிப்பாட்டுவதற்குரிய ஆதாரத்தையும் முன்னரே கூறிவிட்டோம். ஹஜ்ஜுக் கடமையின் போது வாகனத்திலிருந்து விழுந்து கழுத்து முறிந்து இறந்த தோழரை தண்ணீரினாலும், இலந்தையிலையினாலும் குளிப்பாட்டுங்கள்.... என்ற நபிமொழி முதலாவதாகவும், இரண்டாவதாக நபி (ஸல்) அவர்களின் மகள் ஜைனப் (ரழி) அவர்கள் மரணமடைந்த வேளை அவரை மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு முறை குளிப்பாட்டுங்கள்.... என்ற நபிமொழியும் ஆதாரங்களாகின்றன. இதன் விபரங்களைக் கவனிப்போம்.

**29.** குளிப்பாட்டுவதற்குப் பின்வரும் ஒழுங்குகளைக் கவனிக்க வேண்டும்:

*முதலாவது:* மூன்று முறை குளிப்பாட்டுதல் வேண்டும். அதனைச் செய்பவர்கள் தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ளலாம்.

*இரண்டாவது:* ஒற்றைப்படையாகவே குளிப்பாட்டுதல் அமைய வேண்டும்.

*மூன்றாவது:* குளிப்பாட்டும் பொழுது இலந்தை இலை அல்லது உடலைச் சுத்தப்படுத்தக்கூடிய சோப்பு போன்றவற்றை பயன்படுத்த வேண்டும்.

*நான்காவது:* கடைசித் தண்ணீரில் ஏதாவது வாசனைப் பொருட்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கற்பூரத்தைக் கலப்பது சிறந்ததாகும்.

*ஐந்தாவது:* கொண்டைகளை அவிழ்த்து விட்டு நன்றாகக் கழுவ வேண்டும்.

*ஆறாவது:* தலைமுடியைத் தொங்கவிட வேண்டும்.

*ஏழாவது:* பெண்களுக்கு மூன்று பின்னல் போட்டுப் பின்னால் தொங்க விட வேண்டும்.

எட்டாவது: வலது பக்கத்திலிருந்து குளிப் பாட்டுதலை ஆரம்பிக்க வேண்டும்.

ஒன்பதாவது: ஏதாவது நிர்ப்பந்தம் ஏற்பட்டாலே தவிர ஆணை ஆண்களும் பெண்ணைப் பெண்களுமே குளிப்பாட்டுதல் வேண்டும்.

இவற்றுக்கு உம்மு அதிய்யா (ரழி) அவர்கள் மூலம் வந்துள்ள நபிமொழி ஆதாரமாகவுள்ளது.

*நாங்கள் நபி (ஸல்) அவர்களின் மகள் ஜைனபைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும்போது நபியவர்கள் வந்து மூன்று முறை குளிப்பாட்டுங்கள். அல்லது ஐந்து முறை அல்லது ஏழு முறை குளிப்பாட்டுங்கள். தேவையானால் அதிகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஒற்றைப்படையாகத்தான் இருக்க வேண்டுமா? என்று கேட்டேன். ஆம்! அப்படியே தானிருக்க வேண்டும் என்று கூறிவிட்டு கடைசியாகக் கற்பூரத்தைக் கலந்து கொள்ளுங்கள். குளிப்பாட்டி முடிந்தவுடன் என்னை அழையுங்கள் என்று நபியவர்கள் கூறினார்கள். குளிப்பாட்டி முடித்தவுடன் நாங்கள் நபி(ஸல்) அவர்களை அழைத்தோம்.*

*எங்களை நோக்கி வந்த நபியவர்கள் தங்கள் கைகளிலிருந்த சாரத்தை (துணியை) எங்களிடம் வீசி இதனை உள்ளாடையாக உடுத்தி விடுங்கள் என்றார்கள். நாங்கள் அதனை உடுத்திவிட்டு அவளின் தலைமுடியை மூன்றாகப் பிரித்துப் பின்னி முதுகுப் பக்கம் போட்டு விட்டோம். எல்லா வேலைகளிலும் வலதையே முற்படுத்துங்கள்! ஒளுவின் உறுப்புக்களையும் அவ்வாறே செய்யுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இபுனுமாஜா, அஹ்மத்)

பத்தாவது: மரணித்தவரின் எல்லா ஆடைகளையும் களைந்து விட்டு ஒரு துணி துண்டினால் அவர் உடம்பைத் தேய்த்துக் கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதுதான் நபியவர்கள் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதற்குப் பின்வரும் நபிமொழி ஆதாரமாகயிருக்கின்றது. அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டத் தொடங்கியபோதே "நாம் வழமையாக மரணித்தவரின் ஆடைகளைக் களைந்து விட்டுக் குளிப்பாட்டுவதுபோல் இறைத்தூதரின் ஆடைகளையும் களைந்து குளிப்பாட்டுவதா? அல்லது ஆடையுடனேயே நபியவர்களைக் குளிப்பாட்டுவதா?" என்று தோழர்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் இவ்வாறு தர்க்கித்துக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு அல்லாஹ் தூக்கத்தை உண்டாக்கினான். தோழர்கள் எல்லோரும் அந்த இடத்திலேயே உட்கார்ந்து உறங்கி விட்டார்கள். எல்லோருடைய தாடியும் நெஞ்சின் மீது படிந்தது. பின்பு அடையாளம் காண முடியாத ஒருவர் வீட்டுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு" நபியவர்கள் உடுத்தியிருக்கும் ஆடையுடனேயே குளிப்பாட்டுங்கள்" என்று கூறினார்.

திடுக்கிட்டு எழுந்த தோழர்கள் நபியவர்களின் ஆடைகளைக் களையாது ஆடைக்கு மேலாக தண்ணீர் ஊற்றி நபியவர்கள் அணிந்திருந்த ஆடையினாலேயே உடலைத் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள். நபியவர்களைக் குளிப்பாட்டும் வேலைக்கு நான் முந்தியிருந்தால் நபியவர்களின் மனைவியரைத் தவிர வேறு யாரும் நபியவர்களைக் குளிப்பாட்ட விட்டிருக்கமாட்டேன் என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.
(அபூதாவூத், இப்னுமாஜா, பைஹகி, அஹ்மத், இப்னுஹிப்பான்)

**பதினொன்றாவது:** ஆண் ஆண்களுடன் இருக்கும் போது மறைத்திருக்க வேண்டிய மர்மஸ்தானங்களையும் பெண் பெண்களுடனிருக்கும்போது மறைத்திருக்க வேண்டிய மர்மஸ்தானங்களையும் துணித்துண்டினால் மறைத்து அவற்றில் கைபடாது, கண்படாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**பன்னிரெண்டாவது:** இந்தப் பிரிவில் நாலாவதாகக் கூறப்பட்ட விஷயங்கள் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டியபின் மரணிப்பவருக்குச் செய்யக்கூடாது. இதற்குரிய ஆதாரம் முன்னர் கூறப்பட்டு விட்டது.

**பதிமூன்றாவது:** இந்தப் பிரிவில் ஒன்பதாவதாகக் கூறப்பட்டிருப்பது கணவன், மனைவிக்கு நீக்கப்பட்டுள்ளது. கணவனை மனைவியும், மனைவியை கணவனும்

குளிப்பாட்டலாம். இதனைத் தடுக்கும் எந்த ஆதாரமும் காட்டப்படவில்லை. இப்படிச் செய்வது ஆகும் என்பதற்கு பத்தாவதாகக் குறிக்கப்பட்டுள்ள அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறிய நபிமொழி முதலாவதாகவும், இரண்டாவ தாக அன்னையவர்கள் கூறிய சம்பவமும் ஆதாரங்களாகின்றன.

*பகிஃ மண்ணறைத் தோட்டத்தில் ஒரு மையித்தை அடக்கம் செய்து விட்டு நபியவர்கள் திரும்பியபோது, நான் கடுமையான தலைவலியினால் தலையில் கையை வைத்துக் கொண்டு "என் தலையே!" என்று கூறிக் கொண்டிருந்தேன். இதனைக் கேட்ட நபியவர்கள் "நானும் அவ்வாறுதான் கத்த வேண்டும் போலிருக்கிறது. (எனக்கும் தலைவலி வந்துவிட்டது) உனக்கு ஒரு கெடுதலும் இல்லை. எனக்கு முன் நீ இறந்து விட்டால் நானே உன்னைக் குளிப்பாட்டி, கபனிட்டு, தொழுவித்து நல்லடக்கம் செய்து விடுவேன்" எனக் கூறினார்கள்.*

(அஹ்மத். தாரமீ. இப்னுமாஜா. பைஹகி. தாரகுத்னி)

*பதினான்காவது:* குளிப்பாட்டும் முறைகளை நன்கு அறிந்திருப்பவர்களே குளிப்பாட்டுதல் வேண்டும். குறிப்பாக சொந்தக்காரர்களே குளிப்பாட்டுதல் வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டும் பணியில் நபியவர்களின் குடும்பத்தினரே ஈடுபட்டிருந்தனர். அவர்களிலொருவர்தான் அலீ (ரழி) அவர்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

*"நான் நபி (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டினேன். ஏனைய மையித்துக்களுக்கு ஏற்படும் எந்த அசுத்தமும், அசிங்கமும் ஏற்பட்டதை நான் காணவேயில்லை. உயிருடன் இருக்கும் போதும், இறந்த பின்பும் தூய்மையானவர்களாகவே இருந்தார்கள்".*

(இப்னுமாஜா, ஹாகிம், பைஹகி)

**30.** இரண்டு நிபந்தனைகளுடன் குளிப்பாட்டுபவர்களுக்கு நிறைந்த நற்கூலி அல்லாஹ்வினால் வழங்கப்படுகின்றது.

*முதலாவது:* குளிப்பாட்டுபவர் மையித்தின் உடம்பில் ஏதாவது குறைபாடுகளைக் கண்டால் அதை வேறு

யாருக்கும் கூறாமல் மறைத்து விட வேண்டும்.

''ஒரு முஸ்லிமைக் குளிப்பாட்டி அவரிலுள்ள குறைபாடுகளை வெளியிடாது மறைத்துக் கொண்டால் நாற்பது முறை அல்லாஹ் குளிப்பாட்டியவனை மன்னிக்கிறான். கப்ரு தோண்டியவனுக்கு நல்லிருப்பிடத்தை மறுமை வரை அளிக்கின்றான். கபனிட்டவனுக்கு அல்லாஹ் மறுமையில் சுவர்க்கத்தில் மெல்லியதும் அழுத்தமானதுமான உடைகளை அணிவிக்கின்றான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(பைஹகி, ஹாகிம்)

இரண்டாவது: குளிப்பாட்டுவதற்கும், கபனிடுவதற்கும், கப்ரு தோண்டுவதற்கும் எவ்வித கூலியையும் நன்றிகளையும் மையித்தின் குடும்பத்தாரிடமிருந்து எதிர் பார்க்கக் கூடாது. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற் காகவேயன்றி செயல்படும் எந்த வணக்கத்தையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

இதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

**(நபியே!) நீர் சொல்வீராக: ''நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒரே இறைவன் தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது; எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக''.**

(அல் குர்ஆன்: 18:110)

இந்த வசனத்தில்

''தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது, அவனையே வணங்கி வருவானாக!'' என்ற சொல்லின் கருத்து அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகவேயன்றி வணங்கக் கூடாது என்பதாகும்.

செயல்கள் அனைத்தும் எண்ணங்களைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன... என்பது நபி மொழியாகும்.

(புகாரி, முஸ்லிம்)

இந்த நபிமொழியின்படி அல்லாஹ்வுக்காக கப்ரு தோண்டுவது, குளிப்பாட்டுவது போன்ற வேலைகளைச் செய்தால் அல்லாஹ்வின் நல்லருள் கிடைக்கும். சம்பளத் திற்காக இந்த வேலைகளைச் செய்தால் சம்பளம் கிடைக்கும். ஆனால் அல்லாஹ்விடம் எந்தக் கூலியும் கிடைக்காது. மனிதர்களின் கூலியை விட அல்லாஹ்வின் கூலியையே மிக முக்கியமாகக் கருத வேண்டும். மறுமை யிலும் பயனளிக்கக் கூடியது அல்லாஹ்வின் கூலியேயாகும்.

**31.** மையித்தைக் குளிப்பாட்டியவன் பின்பு குளிப்பது சுன்னத்தாகும்.

*"எவன் மையித்தைக் குளிப்பாட்டினானோ அவன் குளிப்பானாக! எவன் மையித்தைச் சுமந்து சென்றானோ அவன் ஒளூச் செய்து கொள்வானாக!" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், திர்மிதி)

இந்த நபிமொழியின் கருத்தை மேலோட்டமாகக் கவனித்தால் குளிப்பதும் ஒளூச் செய்து கொள்வதும் கட்டாயக் கடமையாகத் தென்படுகிறது. எனினும் வேறு இரண்டு நபிமொழிகளைக் கொண்டு இது கடமையல்ல என்பது புலனாகிறது.

*முதலாவது:* உங்களிலொருவனின் மையித்தைக் குளிப்பாட்டுவதனால் நீங்கள் குளிக்க வேண்டியதில்லை. ஏனெனில், உங்கள் மையித்து நஜீஸ் அல்ல.

*"நீங்கள் கைகளை மட்டும் கழுவிக் கொண்டால் போதும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(ஹாகிம், பைஹகி)

*இரண்டாவது:*

*நாங்கள் மையித்தைக் குளிப்பாட்டுவோம். அதற்குப் பிறகு சிலர் குளிப்பார்கள். சிலர் குளிக்கமாட்டார்கள் என இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*

(தாரகுத்னி, கதீப்)

**32.** அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு போர்க் களத்தில் கொல்லப்பட்டவரைக் குளிப்பாட்டக் கூடாது. அவர் பெருந் தொடக்குடையவராய் இருப்பினும் சரியே! இதற்கு ஆதாரமாக பல நபிமொழிகள் உள்ளன.

*முதலாவது:* ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக் கிறார்கள்:

*(போரில் ஷஹீதானவர்களை) அவர்களின்*
*இரத்தத்துடனேயே அடக்கம் செய்யுங்கள்.*
*அல்லாஹ்விற்காக போரிட்டு மரணித்தவர்கள் அவர்களின்*
*காயத்திலிருந்து இரத்தம் ஓடக்கூடிய நிலையில்*
*மறுமையில் வருவார்கள். இரத்தம் இரத்த நிறத்திலேயே*
*இருக்கும். ஆனால் அதன் வாடை கஸ்தூரி மணமாக*
*இருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(புகாரி, அபூதாவூத், நஸயீ, திர்மிதி, இப்னுமாஜா)

*இரண்டாவது:* அபூ பர்ஸத் (ரழி) அவர்கள் அறிவிக் கிறார்கள்:

*நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு போரில் ஈடுபட்டி ருந்தோம். போர் முடிந்த பின் உங்களில் யாரையாவது இழந்து விட்டீர்களா? என்று நபியவர்கள் கேட்டார்கள். ஆம். இன்னாரை, இன்னாரை, இன்னாரை (அவர்களின் பெயர்களைக் கூறி) இழந்து விட்டோம் என்று கூறினோம்.*

*மீண்டும் நபியவர்கள் உங்களில் யாரையாவது இழந்து விட்டீர்களா? எனக் கேட்டார்கள். நாங்கள் ''இல்லை'' என்றோம். 'ஆனால் நான் ஜுலைபீபை இழந்து விட்டேன். அவரைத் தேடுங்கள்!' என்றார்கள். நாங்கள் இறந்தவர்களுக்கு மத்தியில் அவரைத் தேடினோம். ஓரிடத்தில் ஏழு விரோதிகளுக்கு பக்கத்தில் ஷஹீதாகி இருப்பதைக் கண்டு நபியவர்களிடம் சென்று கூறினோம்.*

*நபியவர்கள் அங்கு வந்து அவர் பக்கத்தில் நின்று கொண்டு ''தனித்து ஏழு பேருடன் சண்டையிட்டு அவர்களைக் கொன்று விட்டு அவர்களால் இவரும் கொல்லப்பட்டுள்ளார். நான் அவருக்குரியவர். அவர் எனக்குரியவர்'' என்று இரண்டு மூன்று முறை கூறி விட்டு இரு கைகளையும் நீட்டி ''(அவரைத் தூக்கி என் கையில்)*

வையுங்கள்'' என்றார்கள்.

நாங்கள் அவரைத் தூக்கி நபியவர்களின் முன்னங்கையில் வைத்தோம். நபியவர்களின் கைகளே அவருக்கு 'சந்தூக்'காக இருந்தது. நபியவர்கள் தங்கள் கையினாலேயே கப்ரில் வைத்தார்கள். குளிப்பாட்டுவதைப் பற்றிய பேச்சே (கட்டளை எதுவும்) இருக்கவில்லை.

(முஸ்லிம், தயாலிஸி, பைஹகி)

மூன்றாவது: அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ரழி) அவர்கள் ஷஹீதான ஹன்லலாவின் சம்பவத்தைக் கூறும் போது

''உங்கள் தோழரை (ஹன்லலாவை) வானவர்கள் குளிப்பாட்டுகிறார்கள். அவர் மனைவியிடம் என்ன நடந்தது? என்று விசாரியுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் சென்று கேட்ட போது 'அவர் ஜுனுபாளியாக (குளிப்பு கடமையானவராக) இருந்தார். போரின் பேரிரைச்சல் கேட்டவுடன் பாய்ந்து சென்றார், எனக் கூறியதாக நபியவர்களிடம் வந்து கூறினார்கள். ''அதனால்தான் வானவர்கள் குளிப்பாட்டுகிறார்கள்'' என நபியவர்கள் கூறினார்கள்.

(பைஹகி, ஹாகிம், இப்னுஹிப்பான்)

# 12. மையித்தைக் கபனிடுதல்

**33.** ஒரு மையித்தைக் குளிப்பாட்டி முடிந்தவுடன் அதனைக் கபனிடுவது கட்டாயமாகும். அதற்குரிய நபி மொழி ஆதாரம் மூன்றாவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. (இஹ்ராம் கட்டிய நிலையில் வாகனத்திலிருந்து வீழ்ந்து மரணித்தவர் செய்தியில் பார்த்துக் கொள்ளலாம்).

**34.** மரணமடைந்தவரின் சொந்தப் பணத்திலிருந்து கபனிடுதல் வேண்டும். வேறு யாராவது முன் வந்தும் செலவு செய்யலாம்.

கப்பாப் இப்னுல் அரத் (ரழி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழி இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

"நாங்கள் நபி (ஸல்) அவர்களோடு அல்லாஹ்வுக்காக நாடு துறந்து (ஹிஜ்ரத்) சென்றோம். அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை வேண்டியே அவ்வாறு செய்தோம். எனவே எங்களுக்கு நற்கூலி தருவது அல்லாஹ்வின் மீது கடமையாகி விட்டது. அல்லாஹ்வின் நற்கூலியை (இவ்வுலகில்) பெறாமலே எங்களில் சிலர் சென்று விட்டனர். அவர்களிலொருவர்தான் முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள். உஹத் போரிலே அவர் ஷஹீதாகி விட்டார். ஒரேயொரு போர்வையைத் தவிர வேறெந்தப் பொருளையும் அவர் உடமையாக்கிக் கொள்ளவில்லை.

அவரை நல்லடக்கம் செய்யும்போது அப்போர்வையினால் உடல் முழுவதையும் மூட முடியவில்லை. தலையை மூடினால் கால் திறந்து கொண்டது. காலை மூடினால் தலை திறந்து கொண்டது. "துணியினால் தலையை மூடிவிட்டு கால்களுக்கு இலை தழைகளை வைத்து மூடிவிடுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸயீ, பைஹகி)

இதன் மூலம் அவரவர் உடமையிலேயேதான் கபனிடுதல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

**35.** கபன் துணி உடல் முழுவதையும் மூடக் கூடிய வாறு நீளமானதாகவும், விசாலமானதாகவும் இருத்தல் வேண்டும். ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் உரை நிகழ்த்தினார்கள். அப்பொழுது மரணித்தபின் நீளமில்லாத துணியினால் கபனிட்டு இரவில் நல்லடக்கம் செய்யப்பட்ட தங்கள் தோழர் ஒருவரைப் பற்றிக் கூறினார்கள். கஷ்டமான வேளையிலன்றி தொழுகை நடத்தாது இரவில் அடக்கம் செய்வதைக் கண்டித்தார்கள். பின்னர் நீங்கள் கபனிடும்போது முடிந்தளவு அழகாகக் கபனிடுங்கள் என்று கூறினார்கள்.

(முஸ்லிம். அபூதாவூத். திர்மிதி. இப்னுமாஜா. அஹ்மத்)

அழகாகக் கபனிடுங்கள் என்ற இந்த நபிமொழிக்கு 'சுத்தமான கனத்த உடல் முழுவதையும் நிரப்பக்கூடிய நடுத்தர விலையுள்ள துணியையே கபனிடுதல் வேண்டும்' என மார்க்க அறிஞர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள்.

**36.** உடல் முழுவதையும் மூடும் அளவுக்கு கபன் கிடைக்காவிட்டால் இருக்கும் துணியினால் தலையையும் முடிந்தளவு உடலையும் கபனிட்டு விட்டு கால் பக்கத்திற்கு இலைகளை வைத்து அடக்கப்படல் வேண்டும்.

இதற்குரிய ஆதாரம் (இப்பிரிவில் 34ஆம் இலக்கத்தில் முஸ்அப் (ரழி) அவர்களின் செய்தியில்) தெளிவாக்கப் பட்டுள்ளது.

**37.** மரணமடைந்தவர்கள் அதிகரித்து கபன் துணிகள் குறைவாக இருந்தால் இருக்கும் கபன் துணிகளை எல்லோருக்கும் பங்கிட்டு அடக்கம் செய்வது ஆகும். இச்சூழ்நிலையில் குர்ஆனைப் படித்து விளங்கியவர்களை முதலில் நல்லடக்கம் செய்தல் வேண்டும். அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்ற நபிமொழி இதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

''உஹத் போர் முடிந்த போது நபி (ஸல்) அவர்கள் மூக்கறுக்கப்பட்டு உடல் சிதைக்கப்பட்டிருந்த ஹம்ஸா (ரழி) அவர்களின் சடலத்தைக் கண்டார்கள். ''இவரின் சகோதரி 'ஸபிய்யா' ஏதாவது எண்ணிக் கொள்வாரோ எனப் பயப்படுகின்றேன். இல்லாவிட்டால் இவரை (ஹம்ஸாவை) அடக்கம் செய்யாது விட்டிருப்பேன். இவரின் உடலை பறவைகளும், விலங்குகளும் தின்று மறுமையில் அவற்றின் வயிற்றிலிருந்தே எழுப்பப்படுவதை விரும்புகிறேன்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அதன்பின் அவருடைய போர்வையினால் கபனிட்ட போது தலையை மூடினால் கால் வெளியே தெரிந்தது. காலை மூடினால் தலை வெளியே தெரிந்தது. தலையை மூடிவிட்டு கால்களுக்கு இலைகளைப் போட்டு நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

போரில் கொல்லப்பட்ட வீரத்தியாகிகளில் இருவருக்கு மட்டுமே தனித்து நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள் ''இன்றுள்ள நிலைக்கு நான் சாட்சியாக இருப்பேன்'' எனவும் நபியவர்கள் கூறினார்கள்.

கொல்லப்பட்ட முஸ்லிம்கள் அதிகமாக இருந்ததாலும் அன்று துணியும் குறைவாக இருந்ததாலும் இருந்த துணியைப் பங்கிட்டு கபனிட்டு ஒவ்வொரு மண்ணறையிலும் இரண்டு பேர் மூன்று பேர் என்று நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அப்போது குர்ஆனைக் கற்றவர்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டு முதலாவதாக நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அபூதாவூத், திர்மிதி, அஹ்மத், பைஹகி)

**38.** போரில் ஷஹீதானவர்கள் அணிந்திருந்த ஆடைகளைக் களையக்கூடாது. அவ்வாடையுடனேதான் நல்லடக்கம் செய்தல் வேண்டும். ''அவர்களின் ஆடையிலேயே மூடிவிடுங்கள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத், நஸயீ)

**39.** ஒரே துணியிலும் கபன் செய்யலாம். அல்லது அதற்கதிகமான துணியிலும் கபன் செய்யலாம். முஸ்அப் (ரழி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் செய்தது. (இதே பிரிவு பாடத்தில் 34ம் பகுதி) ஆதாரமாக இருக்கின்றது.

**40.** இஹ்ராம் கட்டியவராக மரணித்தவரை அவருடைய இரு ஆடைகளிலேயே கபனிடப்பட வேண்டும். (இதற்குரிய ஆதாரம் முன்னர் 17ம் இலக்கத்தில் கூறப்பட்டுள்ளது)

**41.** கபனிடுவதற்குச் சில சட்டங்கள் உள்ளன.

முதலாவது: கபன் துணி வெள்ளையாக இருத்தல் வேண்டும்.

''நீங்கள் வெண்மையான ஆடைகளை அணியுங்கள். அது துணிகளில் நல்லது. உங்களில் மரணித்தவரை வெள்ளைத் துணியினாலே கபனிடுங்கள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, பைஹகி, அஹ்மத்)

இரண்டாவது: கபன் துணி மூன்றாக இருத்தல் வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எமன் தேசத்தில் ஸஹூல்ய்யா என்ற இடத்தில் தயாரிக்கப்பட்ட மூன்று வெண்ணிற ஆடைகளினால் கபனிடப்பட்டார்கள். அவற்றில் சட்டையும் (கமீஸ்) இல்லை, தலைப்பாகையுமில்லை என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ)

மூன்றாவது: வெண்மை அதிகம் கலந்த துணியினால் கபனிட வேண்டும்.

உங்களில் யாராவது மரணமடைந்தால், வசதி இருந்தால் வெண்மை அதிகமுள்ள (ஹிப்ரா) துணியினால் கபனிடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூதாவூத், பைஹகி, அஹ்மத்)

நான்காவது:

கபன் துணியை அல்லது கபனிட்ட மையித்தை வாசனைப்புகை காட்ட வேண்டும். (சாம்பிராணிப் புகை இட வேண்டும்). மையித்திற்கு வாசனைப் புகை காட்டினால் மூன்று முறை செய்யுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அஹ்மத், ஹாகிம், பைஹகி)

ஆனால் இவ்வாறு வாசனைப்புகை இடுவது இஹ்ராம் கட்டி மரணித்தவருக்குக் கூடாது (இதன் விபரம் 17ம் இலக்கம் (இ) கூறப்பட்டுள்ளது.

**42.** கபனுக்காக அதிகச் செலவு செய்வது கூடாது.

மூன்று துணியை விட அதிகப்படுத்துவதும் கூடாது. ஏனெனில் அது நபி வழிக்கு மாற்றமானதாகும். நபி (ஸல்)

அவர்கள் மூன்று துணியிலேயே கபனிடப்பட்டுள்ளார்கள் என்பதை ஆதாரப் பூர்வமாக அறிந்துள்ளோம். அவருடைய சமுதாயத்ினரும் அதனையே பின்பற்ற வேண்டும்.

அன்றியும் பணச்செலவை அது அதிகப்படுத்தவும் கூடும். வீண் விரயம் செய்வதை மார்க்கம் தடுத்துள்ளது. நிச்சயமாக அல்லாஹ் மூன்று விஷயங்களை வெறுக்கின்றான்.

1. சொன்னார், சொல்லப்படுகிறது (என்ற வார்த்தை)
2. பொருட்களை வீண் விரயம் செய்தல்.
3. கேள்விகளை அதிகப்படுத்துதல். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

இந்த நபிமொழிக்கு பேரறிஞர் 'ஆயூத்தைப் ' அவர்கள் தமது ''ரௌலத்துன்னதிய்யா'' என்னும் நூலில் விளக்க மளித்திருப்பது என்னை வியப்பிலாழ்த்துகிறது.

அதில் (1ம் பாகம் 165ம் பக்கம்) அவர்கள் கூறு கிறார்கள்.

கபனுக்கு அதிக விலையுள்ள துணி எடுப்பதும் அதிகப் படுத்துவதும் சிறப்புக்குரியதல்ல. கபனிடப்பட வேண்டும் என்ற மார்க்கச் சட்டம் இல்லையாயின் மரணித்தவருக்கு கபனிடுவது வீண் விரயத்தைச் சேர்ந்ததேயாகும். ஏனெனில் அதனால் மையித்திற்கு எவ்விதப் பயனும் இல்லை. உயிருட னிருப்பவனுக்கும் அதன் பயன் கிடைக்காது. அபூபக்கர் ஸித்திக் (ரழி) அவர்களுக்கு அல்லாஹ் ரஹ்மத் செய்வா னாக! அன்னாரின் மரண வேளையில் புதிய கபன் துணி ஆயத்தப்படுத்தியுள்ளோம் என்று கூறப்பட்ட போது உயிருடன் இருப்பவருக்கே அது தேவை; (என்னுடைய மரணத்தின் பின்) எனக்குக் கந்தைத் துணியே போதும் எனக் கூறினார்கள் (என்ற விளக்கம் கொடுத்துள்ளார்).

**43.** கபனிடும் விஷயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே சட்டம்தான். ஆணுக்கு வேறாகவும் பெண்ணுக்கு வேறாகவும் கபனிடும் சட்டத்திற்கு ஆதாரம் எதுவுமில்லை.

# 13. ஜனாஸாவை தூக்கிச் செல்லல்

**44.** மையித்தைச் சுமந்து செல்வதும், அதைப்பின் தொடர்ந்து செல்வதும் முஸ்லிம்கள் மீது கடமையாகும். ஒரு முஸ்லிம் மையித்திற்காக மற்ற முஸ்லிம்கள் மீதுள்ள கடமையாகும். இது தொடர்பாக பல நபிமொழிகள் வந்துள்ளன. அவற்றில் இரண்டை மட்டும் தருகிறேன்.

**ஒன்று:** ஒரு முஸ்லிமுக்கு, மற்ற முஸ்லிமின் மீதுள்ள கடமைகள் ஐந்து.

*சலாம் கூறப்பட்டால் பதில் கூறுதல், நோயாளியைக் கண்டு நலம் விசாரித்தல், (இறந்தால்) ஜனாஸாவில் கலந்து கொள்ளுதல், விருந்துக்கு அழைக்கப்பட்டால் ஏற்றுக் கொள்ளல், தும்மியவன் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால் பதில் கூறுதல் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

(புகாரி, முஸ்லிம், இப்னுமாஜா, அபூதாவூத்)

**இரண்டு:** நோயாளியிடம் சென்று நலம் விசாரியுங்கள்.

*ஜனாஸாவை தொடர்ந்து செல்லுங்கள். அது உங்களுக்கு மறுமையை நினைவூட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அஹ்மத், இப்னுஹிப்பான், தயாலிஸ்)

**45.** ஜனாஸாவைத் தொடர்வதில் இரண்டு வகைகள் உண்டு.

**ஒன்று:** மரணித்தவரின் வீட்டிலிருந்து தொழுவிக்கும் இடம் வரை தொடர்தல்.

**இரண்டு:** வீட்டிலிருந்து அடக்கம் செய்யும் வரை தொடர்தல். இவ்விரண்டு முறையாகவும் நபியவர்கள் செய்துள்ளார்கள்.

*அபூஸயீதுல் குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் மதீனாவுக்கு வந்த புதிதில் எங்களில்*

யாருக்காவது மரணவேளை வந்தால் நபியவர்களுக்கு அறிவிப்போம். அவர்கள் மரணிப்பவருக்காகப் பிழை பொறுக்கத் தேடுவார்கள். அவர் மரணித்து விட்டால் அவரை நல்லடக்கம் செய்யும் வரை கூடவே இருப்பார்கள்.

சில வேளை மரணப் போராட்டம் நீடித்து விட்டால் நெடு நேரமாக அங்கு நபியவர்களைக் காக்க வைப்பது எங்களுக்கு வேதனையைத் தந்து விடும். இனிமேல் ஒருவர் மரணித்த பின்பு தான் நபியவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என தீர்மானித்து அப்படியே செய்தோம்.

ஒருவர் மரணித்த பின்பே நபியவர்களிடம் கூறுவோம். நபியவர்கள் வந்து மரணித்தவருக்கு தொழுகை நடத்தி விட்டு வீட்டுக்குச் சென்று விடுவார்கள். சிலவேளை அவரை அடக்கம் செய்யும் வரை கூடவே இருப்பார்கள்.

இதுவும் நபியவர்களுக்குக் கஷ்டம் கொடுப்பதாக எண்ணிய நாங்கள் ஜனாஸாவைத் தூக்கிச் சென்று நபியவர்களின் வீட்டருகில் வைத்து விட்டு நபியவர்களுக்குக் கூறுவோம். நபியவர்கள் தொழுகை நடத்துவார்கள். இதுவே கடைசி வரை பின்பற்றப்பட்ட முறையாகும்.

(ஹாகிம், அஹ்மத், பைஹகி)

**46.** இதில் இரண்டாவது வகை சிறந்தது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எவன் ஒரு ஜனாஸாவில் கலந்து கொண்டு நம்பிக்கையுடனும், நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்துடனும், தொழுகை நடத்தும் வரை கூடவே செல்வானாயின் அவனுக்கு உஹத் மலையளவு நன்மை கிடைக்கும். அந்த ஜனாஸாவை நல்லடக்கம் செய்யும் வரைத் தொடர்வானாயின் இரண்டு உஹத் மலையளவு நன்மை கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, அஹ்மத், பைஹகி)

**47.** ஒரு முஸ்லிம் ஜனாஸாவைப் பின்பற்றும் இந்த நன்மை (கூலி) ஆண்களுக்கு மட்டும்தான். பெண்களுக்கில்லை. ஏனெனில் ஜனாஸாவைத் தொடர வேண்டாம் என நபியவர்கள் பெண்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்.

உம்மு அதிய்யா (ரழி) அவர்கள்,

நாங்கள் ஜனாஸாவைத் தொடர்ந்து செல்லக்கூடாது என்று நபியவர்களால் தடுக்கப்பட்டுள்ளோம். எங்களைப் போகவே கூடாது என நபியவர்கள் வலியுறுத்தினார்கள் என அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், அஹ்மத்)

**48.** மார்க்கத்திற்கு விரோதமான செயல்களோடு ஜனாஸாவைத் தொடர்ந்து செல்லக்கூடாது. இரண்டு விஷயங்களை மட்டும் மார்க்கம் தடுத்துள்ளது.

ஒப்பாரி வைத்து அழுது கொண்டும், நெருப்புச் சட்டி (சாம்பிராணிச் சட்டி) எடுத்துக் கொண்டும் செல்லக்கூடாது. "சத்தம், நெருப்பு ஆகியவற்றுடன் ஜனாஸாவைத் தொடரக்கூடாது என நபியவர்கள் கூறியுள்ளார்கள்

(அபூதாவூத், அஹ்மத்)

ஜனாஸாவுடன் ஊதுவத்தி கொண்டு செல்வதும், நல்லடக்கம் செய்த பின் கப்ரின் மீது ஊதுவத்தியைப் பற்ற வைப்பதும் இந்தச் சட்டத்தையே சாரும். (கூடாது.!

**49.** ஜனாஸாவுக்கு முன்னால் சத்தமிட்டு திக்ரு செய்து கொண்டும், குர்ஆன் வசனங்களை ஓதிக் கொண்டும் செல்லக் கூடாது. இது பித்அத் ஆகும். ஜனாஸாவுடன் சத்தமிட்டு (திக்ருகள் செய்து) செல்வதை நபித்தோழர்கள் வெறுத்தனர் என்று கைல் இப்னு உப்பாதத் (ரழி) தெரிவிக்கிறார்கள்.

(பைஹகி)

ஏனெனில் இது கிறிஸ்தவர்களுக்கு ஒப்பான செயலாகும். அவர்கள் மரண ஊர்வலத்தில் இன்ஜீல் வேதத்திலிருந்து சில வசனங்களை சத்தமிட்டுச் சோக கீதமாய்ப் பாடிச் செல்வார்கள். மேலும் சிலர் இசைக் கருவிகள் மூலமும், சோக இசையை மீட்டுவார்கள். இவற்றை முஸ்லிம்களில் சிலரும் பின்பற்றி தங்கள் ஜனாஸாவைக் கொண்டு செல்கின்றனர். இது மாபெரும் தவறாகும்.

இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் தமது ''அல் அக்தார்'' எனும் நூலில் (பக்கம்:203) ''அறிந்துகொள். ஜனாஸாவுடன் செல்பவர்கள் மௌனமாகச் செல்வதே சரியானதாகும். ஏற்புடையதுமாகும். இவ்வாறுதான் முன்னோர்கள் செய்தனர். குர்ஆன் வசனங்களை ஓதிக் கொண்டும் திக்ருகள் செய்து கொண்டும், சத்தத்தை உயர்த்தக் கூடாது. அமைதியாகச் செல்வதன் மூலம் ஜனாஸாவைப் பற்றிய சிந்தனையும் மரணத்தைப் பற்றிய சிந்தனையும் ஏற்பட வழி பிறக்கிறது. இதுதான் இந்த இடத்தில் தேவையாகிறது. இதுதான் உண்மை நிலை. (சிலர் சத்தமிட்டு ஏதாவது கூறிக் கொண்டிருந்தால் அதன் பக்கமே கவனம் திரும்பும்).

''ஜனாஸாவில் அமைதியாகச் செல்ல வேண்டும் என்ற சட்டத்திற்கு மாற்றமாக பல ஊர்களில் அதிக மானோர் நடப்பதைக் கண்டு யாரும் மயங்கி விட வேண்டாம். அபூ புழைல் இப்னு இயாழ் (ரஹ்) அவர்கள், நேர்வழியில் வாழ்ந்தவர்கள். அவர்களின் வழியைப் பற்றிப் பிடித்துக்கொள்! அவர்கள் குறைவானவர்கள் என்பதை எண்ணி தடுமாறி விடாதே! வழி கெட்டவர்களை இனம் கண்டு கவனமாக இரு! வழிகேட்டினால் அழிபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதைக் குறித்துக் கவலைப் படாதே! மயக்கமடையாதே!'' எனக் கூறியுள்ளார்கள்.

இமாம் பைஹகீ அவர்கள் கைஸ் இப்னு உப்பாத் அவர்கள் மூலம் அறிவித்துள்ள செய்தி நான் கூறியதற்கு ஆதாரமாகவே இருக்கிறது. ஜனாஸாவின் போது அறிவிலிகள் கிராஅத் ஓதிக் கொண்டும், அதனை நீட்டி இழுத்துக் கொண்டும், திமிஷ்கில் (டமஸ்கஸ்) செயற்படுவது ஹராமான வேலையாகும். மத அறிஞர்களின் ஒருமித்த தீர்ப்பின்படி ஹராமான செயலாகும். இதன் உண்மை நிலையையும், இவ்வாறு குர்ஆனை ஜனாஸாவில் பயன்படுத்துவதன் கேட்டையும், அடாத செயலையும், ''அதாபுல் கிரா அத்'' என்ற நூலில் எழுதியுள்ளேன். எந்த மத அறிஞரும் இதனை ஆட்சேபிக்கவில்லை, மறுப்புத் தரவுமில்லை எனக் கூறியுள்ளார்கள்.

**50.** ஜனாஸாவைக் கொண்டு செல்பவர்கள் நடையை விரைவுபடுத்துவது வாஜிபாகும்.

*அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்:*

*"ஜனாஸாவை வேகமாகக் கொண்டு செல்லுங்கள். ஜனாஸாவுக்குரியவர் நல்லவராக இருந்தால் அவரைச் சீக்கிரமாக நல்லடக்கத்திற்குக் கொண்டு சென்றவராவீர்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா)

இந்த நபிமொழி ஓடாமல் வேகமாக நடப்பதும் கட்டாயம் என்றே வலியுறுத்துகிறது. இதனையே "இப்னு ஹஸீம்" (5ம் பாகம், 154, 155ம் பக்கங்களில்) உறுதிப் படுத்துகின்றார். அவ்வாறு வேகமாகச் செல்வது சுன்னத் துத்தான் என்பதற்கு ஆதாரமாகக் கொள்ள முடியாது என்றும் கூறுகின்றனர்.

"ஸாதுல் மஆத்" என்ற ஏட்டில் இப்னுல்கையிம் (ரஹ்) அவர்கள் இன்று மனிதர்கள் (முஸ்லிம்கள்) ஜனாஸாவைக் கொண்டு செல்லும் போது மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைப்பது நபிவழிக்கு மாற்றமானது மட்டுமல்ல யூதர்களுக்கு ஒப்பான கெட்ட பித்அத்துமாகும் எனக் கூறியுள்ளார்கள்.

**51.**. ஜனாஸாவுடன் செல்பவர்கள் ஜனாஸாவுக்கு முன்னாலும், பின்னாலும் வலது பக்கமும், இடது பக்கமும் போவது ஆகும். வாகனத்தில் செல்பவர்கள் ஜனாஸா வுக்குப் பின்னால்தான் செல்ல வேண்டும்.

*முகிரா இப்னு ஹும்ரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*வாகனத்தில் ஜனாஸாவுடன் செல்பவன் பின்னால் செல்ல வேண்டும். நடந்து செல்பவர் ஜனாஸாவுக்குச் சமீபமாக எப்பக்கமும் செல்லலாம். இறந்த குழந்தையும் தொழுவிக் கப்படல் வேண்டும். அதன் பெற்றோருக்குப் பிழை பொறுக்கும்படியும் அருள் செய்யும்படியும் பிரார்த்திக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், நஸயீ. இப்னுமாஜா, இப்னுஹிப்பான், தஹாபி, பைஹகி, தயாலிஸ், அஹ்மத்)

**52.** ஜனாஸாவுக்கு முன்னாலும், பின்னாலும் செல்வது நபியவர்களின் செயல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்களும், அபூபக்கர் (ரழி) அவர்களும், உமர் (ரழி) அவர்களும் ஜனாஸாவுக்கு முன்னாலும், பின்னாலும் நடந்து செல்பவர்களாக இருந்தனர் என அறிவிக்கிறார்கள்.

(தஹாபி)

**53.** எனினும் ஜனாஸாவுக்குப் பின்னால் செல்வது தான் சிறந்ததாகும். ஜனாஸாவைப் பின்பற்றுங்கள் என்ற நபிவாக்கியத்தை வைத்து இதனை சிறந்தது எனக் கூறலாம். மேலும்

"ஜனாஸாவுக்குப் பின்னால் செல்வது முன்னால் செல்வதைவிடச் சிறந்ததாகும். ஜமா அத்தாகத் தொழுவது தனித்துத் தொழுவதைவிடச் சிறந்ததாகும்" என அலி (ரழி) அவர்கள் கூறியிருப்பதும் இதனைப் பலப்படுத்துகின்றது.

(அஹ்மத், பைஹகி, இப்னு அபீசைபா)

**54.** ஜனாஸாவுடன் செல்பவர் வாகனத்திலும் செல்லலாம். ஆனால் (51ம் இலக்கத்திலுள்ள நபிமொழிப் படி) பின்னால் செல்வது நிபந்தனையாகும். எனினும் நடந்து செல்வதே சிறப்புடையதாகும். இதுதான் நபி (ஸல்) அவர்களின் விருப்பமாக இருந்தது என்பதற்கு பின்வரும் நிகழ்ச்சி ஆதாரமாக இருக்கின்றது.

தௌபான் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு ஜனாஸாவில் கலந்துகொள்ள நபியவர்கள் வந்த போது அவர்கள் ஏறிச் செல்ல ஒரு வாகனம் கொண்டு வரப்பட்டது. நபியவர்கள் அதில் ஏறிச் செல்ல மறுத்து விட்டார்கள். ஜனாஸாவை அடக்கம் செய்து விட்டு திரும்பும்போது ஒரு வாகனம் நபியவர்களிடம் கொண்டு வரப்பட்டது. நபியவர்கள் அதில் ஏறிக் கொண்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! ஜனாஸாவுடன் வரும்போது வாகனத்தில் ஏற மறுத்து விட்டீர்கள். திரும்பும்போது ஏறிக் கொண்டீர்களே ஏன்? எனக் கேட்கப்பட்டது
"(இந்த ஜனாஸாவுடன்) வானவர்களும் நடந்து வருவதைக்

கண்டேன். அவர்கள் நடந்து வரும்போது நான் வாகனத்தில் வர விரும்பவில்லை. அடக்கம் செய்தவுடன் அவர்கள் போய் விட்டார்கள். நான் வாகனத்தில் ஏறிக் கொண்டேன்'' என நபி (ஸல்) அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள்.

(அபூதாவூத், பைஹகி, ஹாகிம்)

**55.** ஜனாஸாவை அடக்கம் செய்து விட்டுத் திரும்பும் போது வாகனத்தில் ஏறிக் கொள்வது ஆகுமானதேயாகும். இதற்கு முன் கூறப்பட்ட தௌபான் (ரழி) அவர்களின் அறிவிப்பு இதனை விளக்குகிறது. மேலும் இதனைப் பின்வரும் நபிமொழியும் உறுதிப்படுத்துகிறது.

*ஜாபிர் இப்னு ஸம்ரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*நாங்கள் சென்றிருந்த வேளையில் (மரணமடைந்த) இப்னு தஹ்தாஹ் அவர்களுக்கு நபியவர்கள் தொழுகை நடத்தினார்கள். பின்னர் அடக்கம் செய்யும் இடம் வரை எங்களோடு நடந்து வந்தார்கள். திரும்பும் போது (கடிவாளமில்லாத) சேணமில்லாத ஒரு குதிரை கொண்டு வரப்பட்டு நபியவர்களிடம் நிறுத்தப்பட்டது. (வேகமாக ஓட முடியாதவாறு) அதன் காலை ஒருவர் கட்டிவிட்டார். நபியவர்கள் அதன் மீது ஏறித் திரும்பினார்கள். அது குதித்துக் குதித்து நடந்து சென்றது. நாங்கள் அதன் பின்னால் ஓடிக் கொண்டு வந்தோம். அவ்வேளை ''எத்தனையோ (பழக்) குலைகள் இப்னுதஹ்தாவுக்காக சுவர்க்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றன'' என நபியவர்கள் கூறினார்கள்.*

(முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, அஹ்மத், பைஹகி)

**56.** வண்டியிலோ அல்லது பிரேத ஊர்வலத்திற்காக சிறப்பாக அமைக்கப்பட்ட மோட்டார் வண்டியிலோ ஜனாஸாவைக் கொண்டு செல்வதும், அந்தப் பிரேத வண்டியில் சிலர் அதற்கென்றே கூலி பெற்றுக் கொண்டு அலங்காரம் செய்வதும் சில காரணங்களால் அறவே மார்க்கத்தில் அனுமதிக்கப்படாதவையாகும். (இவை மார்க்கத்தில் கூடாத செயல்களாகும்) அதற்குரிய காரணங் களாவன:

அ) இவை நிராகரிப்போரின் செயல்களாகும். இவர் களின் செயல்களைப் பின்பற்றக் கூடாதெனப் பல நபி

மொழிகள் உள்ளன. அவற்றை நான் எனது "ஹிஜாபுல் மாஅத்தில் முஸ்லிமத்திஃபில் கிதாபி வஸ்ஸுன்னா" என்ற நூலில் விரிவாகச் சொல்லி உள்ளேன். அதில் நிராகரிப்பாளர்களின வணக்க வழிபாடு, மற்றும் ஆடை அணிகள், வழக்கச் செயல்கள் ஆகியவற்றுக்கு ஒப்ப முஸ்லிம்கள் நடந்துகொள்ளக் கூடாது என்கிற கட்டளைகளையும், நபியவர்களின் செயல்களுக்கு விரோதமாக இருப்பவற்றையும் எழுதியுள்ளேன். தேவையானவர்கள் அதனைப் பார்வையிட்டுக் கொள்ளவும்.

ஆ) ஜனாஸாவைக் கொண்டு செல்வது ஒரு இபாதத் ஆகும். (வணக்கமாகும்). இது (எண் 56-இல் சொல்லியுள்ளபடி ஜனாஸாவை கொண்டு செல்வது) நபியவர்கள் காட்டித் தந்த நடைமுறைக்கு விரோதமான "பித்அத்" ஆகும். நபியவர்கள் காட்டித்தந்த முறைக்கு விரோதமான வணக்கங்கள் யாவும் பித்அத்களாகும். இது இமாம்களின் ஒருமித்த கருத்துப்படி வழிகேடாகும்.

இ) இவ்வாறு வாகனத்தில் ஜனாஸாவைக் கொண்டு செல்வது மறுமையின் நினைவையூட்டுவதற்குப் பதிலாக (ஆடம்பர) வேறு ஊர்வலத்தையே நினைவுக்கு கொண்டு வரும். அன்றியும், தோளில் சுமந்து செல்வதின் உயிரோட்டமும் வணக்கத்திலீடுபட்டுள்ளோம் என்ற நினைவையும் அகற்றி விடும். ஜனாஸாவைப் பின்பற்றிச் செல்லுங்கள். அது உங்களுக்கு மறுமையின் நினைவைத் தரும்...... எனும் நபிமொழியையும் அலட்சியப்படுத்துகிறது.

ஐரோப்பியர் இவ்வாறுதானே கொண்டு செல்கிறார்கள்? எனக் கேட்பீர்களாயின் அவர்கள் மரணத்திற்குப் பயந்தவர்கள். மறுமையை நம்பாதவர்கள். இறந்தவனை அப்புறப்படுத்தி விட்டால் போதும் என்ற எண்ணமுடையவர்கள் என்பதைப் பதிலாக எடுத்துக் கொள்ளுங்கள்.

ஈ) இவ்வாறு பிரேத வண்டியை வாடகைக்கு அமர்த்துவதற்கும், பிரேத அலங்காரங்களைச் செய்பவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும் எல்லோரும் வசதி படைத்தவர்கள் அல்லர். மரணம் எல்லோருக்கும் பொதுவானது,

சமமானது, எல்லோரும் மரணக் கடமைகளை இலகுவாகவும் நன்மை கிடைக்கக்கூடியதாகவும் செய்ய வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

**57.** ஜனாஸாவைக் கண்டால் எழுந்து நிற்க வேண்டும் என்ற சட்டம் மாற்றப்பட்டு விட்டது. (யாரும் எழுந்து நிற்கக் கூடாது). இது இரண்டு வகைப்படும்.

அ) தனக்குப் பக்கத்தில் ஜனாஸா ஊர்வலம் சென்றால் எழுந்து நிற்பது, மையித்தைக் குளிப்பாட்டிக் கபனிட்டு அதனைக் கப்ருஸ்தானத்திற்கு எடுத்துச் செல்வதற்கு உதவியவர்கள் மையித்தைக் கப்ரில் வைக்கும் வரை (உட்காராது) நின்று கொண்டேயிருப்பது இந்த இரண்டு நிலைகளும் மாற்றப்பட்டுள்ளது.

அலீ (ரழி) அவர்கள் மூலம் வந்துள்ள நபிமொழி இதற்கு ஆதாரமாக இருக்கிறது.

''ஒரு ஜனாஸா கொண்டு செல்வதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். நாங்களும் எழுந்து நின்றோம். அதன்பின் அவர்கள் ஜனாஸாவுக்கு (எழுந்து நிற்காது) உட்கார்ந்திருந்தார்கள். நாங்களும் உட்கார்ந்து விட்டோம்.''

இன்னொரு அறிவிப்பில்-

ஜனாஸாவைக் கண்டால்

''எழுந்து நில்லுங்கள்'' என எங்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் உட்கார்ந்து விட்டு எங்களையும் உட்காரும்படி கட்டளையிட்டார்கள்.
(முஸ்லிம், இப்னுமாஜா, அஹ்மத், தயாலிஸீ, துஹாவி)

ஜனாஸாவைச் சுமந்து சென்றவர்கள் ஒளுச் செய்வது விரும்பத்தக்கதாகும். (சுன்னத்தாகும்) ஏனெனில், இதற்குரிய ஆதாரம் நபிமொழி 31ம் இலக்கம் பிரிவில் குறிக்கப்பட்டுள்ளது (பார்வையிடுக)

# 14. ஜனாஸா தொழுகை

**58.** முஸ்லிம் மையித்தின் மீது தொழுகை நடத்துவது பொதுக் கடமையாகும். (சில முஸ்லிம்கள் இதனை நிறைவேற்றினால் எல்லோர் கடமையும் நீங்கி விடும்). இதற்கு ஆதாரமாக பல நபிமொழிகள் உள்ளன. அவற்றில் 'ஜைத் இப்னு காலித் ஜஹ்னி' (ரழி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியைக் காண்போம்.

*நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவர் 'கைபர்' போரின்போது மரணமடைந்துவிட்டார். இது நபியவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. 'உங்கள் தோழரை நீங்களே தொழுவியுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நபியவர்கள் தொழுவிப்பார்கள் என்று எதிர்பார்த்த தோழர்களின் முகங்கள் நபியவர்களின் சொற்களினால் வாட்டம் அடைந்துவிட்டன. இதனைக் கண்ட நபியவர்கள் (இறந்த) உங்கள் தோழர் தலைவரின் அனுமதியின்றி போர்ப் பொருளை மோசடி செய்து விட்டார் என நபியவர்கள் தான் தொழுவிக்க மறுத்ததற்குரிய காரணத்தை விளக்கினார்கள்.*

*உடனே நாங்கள் இறந்த தோழரின் பொருட்களை சோதனை இட்டோம். அங்கு ஒரு யூதனுக்குச் சொந்தமான (தோலைத் துளை போடும்) கருவி இருந்ததைக் கண்டோம். அதன் மதிப்பு இரண்டு திர்ஹம் கூட இல்லை.*

(முஅத்தா, அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத்)

இந்த நபிமொழியில் "உங்கள் தோழரை நீங்கள் தொழுவியுங்கள்" என்ற வசனம் மரணமடைந்தவரை தொழுவிக்க வேண்டும் என்ற கடமையை வலியுறுத்து கின்றது.

**59.** இரு சாரார் இத்தொழுகையிலிருந்து நீக்கப் படுகிறார்கள். இவ்விருசாராரும் இறந்தால் தொழுகை நடத்துவது கடமையல்ல.

*அ. பருவமடையாத குழந்தை:* நபி (ஸல்) அவர்கள் தங்கள் மகன் இப்ராஹிம் மரணமடைந்த பின் அவருடைய மையித்திற்குத் தொழுகை நடத்தவில்லை.

*"நபி (ஸல்) அவர்களின் மகன் இப்ராஹிம் பதினெட்டு மாதத்தில் (ஒன்றரை வருடம்) மரணமடைந்து விட்டார். அவருக்காக நபியவர்கள் தொழுகை நடத்தவில்லை" என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.*

(அபூதாவூத், அஹ்மத்)

*ஆ. ஷஹீத்: (இஸ்லாத்திற்காக உயிர் துறந்த தியாகி) இவர்களுக்கும் நபியவர்கள் தொழுகை நடத்தவில்லை என்பதை முன்பே படித்து விட்டோம்.*

*எனினும், இவ்விரு சாராருக்கும் தொழுகை நடத்த மார்க்கத்தில் அனுமதியுண்டு என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். ஆனால் கடமையல்ல.*

**60.** *பின்வருபவர்களுக்குத் தொழுகை நடத்துவது மார்க்க கடமையாக்கப்பட்டுள்ளது.*

*அ. குழந்தை: (இன்னொரு அறிவிப்பின்படி மரித்துப் பிறந்த குழந்தை) இக்குழந்தைக்காகத் தொழுகை நடத்தி அதன் பெற்றோருக்கு மன்னிப்பையும், அருளையும் கொடுக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும்.*

*மரித்துப் பிறந்த குழந்தை என்பதின் கருத்து என்னவெனில் கர்ப்பத்தில் நான்கு மாதம் பூர்த்தியாகி உயிரூட்டப்பட்டிருந்தால் (கர்ப்பத்தில் அசைவு ஏற்படாமல்) அது மரணித்துப் பிறந்தாலும் தொழுகை நடத்தப்படும். அதற்கு முன் பிறந்தால் தொழுவிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அது குழந்தையல்ல. (சதைப் பிண்டம்)*

*இதற்கு ஆதாரமாக இப்னுமஸ்ஊத் (ரழி) அவர்கள் மூலம் வந்துள்ள நபிமொழியை எடுத்துக் கொள்ளலாம்.*

*"உங்களின் உருவ அமைப்பு 40 நாள்களுக்கு தாயின் வயிற்றில் ஒன்று சேர்க்கப்படும். அதன்பின் அடுத்த நாற்பது நாளில் சதைக் கட்டியாக மாற்றப்படும். (3 x 40 = 120 நாட்கள், 4 மாதம்) இதன்பின் ஒரு வானவரை அனுப்பி அல்லாஹ் உயிரூட்டுவான்.."*

(புகாரி, முஸ்லிம்)

ஆ. ஷஹீத்: (இஸ்லாத்திற்காக உயிர் துறந்த தியாகி) இது தொடர்பாக அனேக நபிமொழிகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

அ. அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உஹதுப் போரின்போது கொல்லப்பட்ட ஹம்ஸா (ரழி) அவர்களைக் கொண்டு வரும்படி நபியவர்கள் கட்டளையிட்டார்கள். அவர் சடலத்தை ஒரு போர்வையினால் சுருட்டி எடுத்துக் கொண்டு வந்து நபியவர்கள் முன்னே வைத்தார்கள். நபியவர்கள் ஒன்பது முறை தக்பீர் கட்டித் தொழுவித்தார்கள்.

அதன்பின் ஏனைய ஷுஹதாக்களை எல்லாம் எடுத்து வந்து (வரிசையாக) வைக்கப்பட்டது. அவர்களுக்கு தொழுவிக்கப்பட்டதுடன் இவர்களோடு சேர்த்து ஹம்ஸா (ரழி) அவர்களுக்கும் தொழுவிக்கப்பட்டது.

(தஹாவி)

இந்த நபிமொழியில் கூறப்பட்ட ஒன்பது முறை தக்பீர் கட்டினார்கள் என்பது நபி (ஸல்) அவர்கள் தங்கள் சிறிய தந்தை ஹம்ஸா (ரழி) அவர்களுக்கு மட்டும் செய்த சிறப்புப் பிரார்த்தனையாகும். இதன் பின் யாருக்கும் நபியவர்கள் 9 முறை தக்பீர் கட்டவில்லை.

ஆ. உக்பா இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"ஒரு நாள் நபி (ஸல) அவாகள (எட்டு வருடஙகளுககு முன்) ஷஹீதான உஹதுத் தியாகிகளுக்காக தொழுகை நடத்தினார்கள். (அது உயிருடனிருப்பவரிடத்தில் விடை பெறும் செயலின் தோற்றத்தைக் கொண்டிருந்தது) அதன்பின் திரும்பி வந்து மிம்பரில் ஏறிக் கொண்டு அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்த பின், "நான் உங்களை பிரிபவனாக இருக்கிறேன். உங்களுக்கு சாட்சியாக இருக்கிறேன். (உங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள இடம் ஹவ்லுல் கவ்தராகும்). நான் இப்போது என் ஹவ்லுல் கவ்தரைக் காண்கிறேன். அதன் அகலம் அய்லாவுக்கும், ஜுஹ்பாவுக்கும் இடைப்பட்டதாக (மிகத் தூரமாக

இருக்கிறது). நான் பூமியில் செல்வங்களை எடுத்துக் கொள்ள சாவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனக்குப்பின் நீங்கள் இணைவைப்பவர்களாக மாறி விடுவீர்கள் என்று நான் பயப்படவில்லை. எனினும் இவ்வுலகையே அஞ்சுகிறேன். அதன் சுகபோகங்களில் மயங்கி (போட்டி, பொறாமையால்) உங்களுக்கிடையில் அழிவுகளை ஏற்படுத்தி உங்களுக்கு முன் வந்த கூட்டத்தினரும் அழிந்ததைப் போன்று அழிந்து விடுவீர்கள்'' எனப் பிரசங்கம் புரிந்தார்கள். இதனைக் கூறிய பின் இதுதான் நான் நபி (ஸல்) அவர்களைக் கடைசியாக கண்ட நிலை என உக்பா இப்னு ஆமீர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், அஹ்மத், பைஹகி)

இ. குற்றப் பரிகாரத்திற்காக உயிர் துறந்தவர்: ஆமிர் இப்னு ஹஸன் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஜுஹைனா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் விபச்சாரத்தின் மூலம் கர்ப்பமடைந்து நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! (விபச்சாரம் செய்ததன் மூலம்) நான் தண்டனைக்குரியவளாகி விட்டேன். எனக்குரிய தண்டனையை நிறைவேற்றுங்கள்'' எனக் கூறினாள். உடனே நபியவர்கள் அப்பெண்ணின் பொறுப்பாளரை, இவரை வீட்டுக்கழைத்துச் சென்று நல்ல முறையில் கவனித்துக்கொள்ளும்! இவர் குழந்தை பெற்றெடுத்த பின் அழைத்து வாருங்கள் எனக்கூறி அனுப்பி விட்டார்கள்.

பிரசவம் முடிந்த பின் அப்பெண் அழைத்து வரப்பட்டார். நபியவர்களின் கட்டளைப்படி, ஆடைகளையெல்லாம் அவர் மீது சுற்றிக் கட்டப்பட்டு நிறுத்தப்பட்டார். அதன்பின் நபித் தோழர்கள் அவரைக் கல்லால் அடித்துக் கொன்று விட்டார்கள். இப்பெண்ணின் பிரேதம் கொண்டு வரப்பட்ட போது நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! விபச்சாரிக்குத் தொழுகை நடத்துகிறீர்களா?'' என உமர் (ரழி) அவர்கள் கேட்டார்கள்.

"இப்பெண் தான் செய்த குற்றத்திற்காக பிராயச்சித்தம் (பரிகாரம்) தேடிக்கொண்டாள். இந்தப் பிராயச்சித்தத்தை இம்மதீனாவிலுள்ள 70 பேருக்குப் பங்கிட்டாலும் அது விசாலமாகவே இருக்கும். தன்னுயிரைத் தண்டனைக்காக தந்ததை விட அதி உன்னத பாவமீட்சி வேறு உண்டா?''

என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, திர்மிதி, இப்னுமாஜா, தாரமி, பைஹகி)

ஈ. இஸ்லாம் விலக்கிய கொடிய பாவங்களிலும், வேறு கெட்ட செயல்களிலும் மூழ்கியிருந்து இறந்த முஸ்லிம், உதாரணமாக தொழுகை, நோன்பு, ஸகாத் ஆகியவை தன்மீது கடமை எனப் புரிந்து கொண்டு அவற்றைச் செய்யாமலும் குடி, சூது, விபச்சாரம் ஆகியவற்றைச் செய்து கொண்டும் இருந்து இறந்த கெட்ட முஸ்லிம்.

இத்தகையவன் இறந்தால் அவனையும் தொழுகை நடத்தி அடக்கம் செய்ய வேண்டும். எனினும் மார்க்க அறிஞர்கள் இத்தொழுகையில் கலந்து கொள்ளாமல் இருப்பது நன்று. இதன் மூலம் மற்றவர்கள் படிப்பினைப் பெற்று திருந்தி வாழ வழி பிறக்கும். இதற்கு ஆதாரமாக பல நபிமொழிகள் உண்டு. அவற்றில் ஒன்றை மட்டும் இப்போது நாம் காணலாம்.

அபூகத்தாதா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்காக ஒரு ஜனாஸா கொண்டு வரப்பட்டால் அந்த ஜனாஸாவுக்குரியவரைப் பற்றி விசாரணை செய்வார்கள். அந்த ஜனாஸாவுக் குரியவர் (நல்லவர்) எனப் புகழப்பட்டால் எழுந்து சென்று தொழுகை நடத்துவார்கள். மாற்றமாக (கெட்டவர்) எனக் கூறப்பட்டால் நீங்கள் தொழுகை நடத்திக் கொள்ளுங்கள் எனக் கூறி விலகிவிடுவார்கள். அந்த மையித்திற்காக தொழுகை நடத்த மாட்டார்கள்.

(அஹ்மத், ஹாகிம்)

உ. கடனாளி கடன்பட்ட பின் அதனைத் திருப்பிக் கொடாமலும் திருப்பிக் கொடுக்கக்கூடிய பொருட்களை விட்டுச் செல்லாமலும் இறந்த முஸ்லிமுக்கு தொழுகை நடத்தலாம்.

அ. சலமதிப்னுல் அக்வல் (ரழி) அவர்கள் அறிவிக் கிறார்கள்:

''நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தபோது ஒரு ஜனாஸா கொண்டுவரப்பட்டது. கொண்டு வந்தவர்கள் நபியவர்களை தொழுவிக்கும்படி கூறினார்கள். இவருக்கு ஏதேனும் கடனுண்டா என நபியவர்கள் கேட்டார்கள். 'இல்லை' எனக் கூறப்பட்டது. 'ஏதாவது விட்டுச் சென்றுள்ளாரா?' என நபியவர்கள் மீண்டும் கேட்டார்கள். 'இல்லை' எனக் கூறப்பட்டது. நபியவர்கள் இந்த ஜனாஸாவுக்கு தொழுகை நடத்தினார்கள்.

அதன்பின் இன்னுமொரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. நபியவர்களைத் தொழுகை நடத்தும்படி வேண்டினார்கள். நபியவர்கள், 'இவருக்கு கடன் ஏதும் உண்டா?' எனக் கேட்டார்கள். 'ஆம்' எனக் கூறப்பட்டது. 'ஏதேனும் விட்டுச் சென்றுள்ளாரா?' என நபியவர்கள் மீண்டும் கேட்டார்கள். 'மூன்று தினார்களை விட்டுச் சென்றுள்ளார்' எனப் பதிலளிக்கப்பட்டதும் நபியவர்கள் அந்த மையித்திற்குத் தொழுகை நடத்தினார்கள். அதன்பின் மூன்றாவதாகவும் ஒரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. நபியவர்களைத் தொழுகை நடத்தும்படி வேண்டினார்கள். நபியவர்கள், 'இவர் ஏதேனும் விட்டுச் சென்றுள்ளாரா?' எனக்கேட்டார்கள். 'இல்லை' என பதிலளித்தார்கள். ''இவருக்கு கடன் ஏதும் உண்டா? என நபி அவர்கள் கேட்டார்கள். ஆம்; மூன்று தினார்கள் கடன் உண்டு என பதிலளித்தார்கள். உங்கள் தோழருக்கு நீங்களே தொழுகை நடத்துங்கள் (நான் கடனாளிக்குத் தொழுகை நடத்தமாட்டேன்) என நபியவர்கள் கூறினார்கள். உடனே (அங்கிருந்த அபூகத்தாதா (ரழி) அவர்கள் ''அல்லாஹ்வின் தூதரே, நான் அக்கடனுக்குப் பொறுப்பேற்கிறேன். இவருக்குத் தொழுகை நடத்துங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார். நபியவர்கள் அந்த மையித்திற்கு தொழுகை நடத்தினார்கள்

(புகாரி, அஹ்மத், நஸயீ)

ஆ. அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்களிடம் தொழுகை நடத்தும்படி ஒரு மையித் கொண்டு வரப்பட்டால் ''இவருக்கு ஏதேனும் கடன் உண்டா?'' எனக் கேட்டு 'ஆம்' எனக் கூறப்பட்டால் அதை நிறைவேற்ற ஏதேனும் விட்டுச் சென்றுள்ளாரா? எனக் கேட்பார்கள். ''ஆம்'' என்று கூறப்பட்டால் அந்த

மையித்தை தொழுவிப்பார்கள். ''இல்லை'' எனக் கூறப்பட்டால் நீங்களே உங்கள் தோழருக்கு தொழுகை நடத்திக் கொள்ளுங்கள் என்று கூறி விலகிக் கொள்வார்கள்.

**இந்த நபி முஃமீன்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார்.....**

(அல் குர்ஆன்: 33: 6)

என்ற குர்ஆன் வசனத்தை ஓதிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு விசுவாசிகளில் யாராவது கடனாளியாக மரணித்தால் அவருடைய கடனுக்கு நான் பொறுப்பாளியாவேன். அவர் எதனையும் விட்டுச் செல்லாமல் இருந்தாலும் அவர் கடனுக்குப் பொறுப்பாவேன் எனக் கூறினார்கள். அது அவரின் வாரிசுக்குரியதாகும்'' எனக் கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத், தயாலிஸி, தாரமி)

இ. தொழுவிப்பதற்கு முன் அடக்கம் செய்யப்பட்டவருக்கும் அல்லது சிலர் தொழுகை நடத்திச் சிலர் தொழுகை நடத்த முடியாத நிலையிலிருந்தாலும் மையித்தை அடக்கம் செய்த இடத்தில் தொழுகை நடத்தலாம். தொழுகை நடத்த முடியாத நிலையில் இமாமும் இருந்திருக்க வேண்டும். இதற்கு ஆதாரமாகப் பல நபிமொழிகள் உள்ளன. அவற்றில் ஒன்றை மட்டும் இங்கு காணலாம்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''நோயுற்றிருந்த ஒரு நபித் தோழரை நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி சென்று நலம் விசாரிப்பவராக இருந்தார்கள். இவர் மரணித்து விட்டபின் உடனே (இரவில்) அடக்கம் செய்து விட்டு காலையில் நபியவர்களிடம் வந்து சொன்னார்கள். இரவாகவும் கடும் இருட்டாகவும் இருந்ததனால் உங்களுக்கு கஷ்டம் தர நாங்கள் விரும்பவில்லை. அதனால் தான் நாங்களே தொழுகை நடத்தி அடக்கம் செய்தோம்'' எனத் தோழர்கள் கூறினார்கள்.

உடனே நபி (ஸல்) அவர்கள் அடக்கஸ்தலத்திற்கு வந்து தொழுகை நடத்தினார்கள். இதனை அறிவிக்கும் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: "எங்களில் சிலர் நபியவர்களுக்குப் பின்னால் வரிசையாக நின்றோம். நபியவர்கள் இமாமத் செய்தார்கள். நான்கு முறை தக்பீர் கூறினார்கள்".

(புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸயீ, அஹ்மத், பைஹகி)

ஈ. ஒரு முஸ்லிம், அவரைத் தொழுவிப்பதற்கு யாரும் இல்லாத ஊரில் இறந்து விட்டால் அவருக்காக ஏனைய முஸ்லிம்கள் மறைவான ஜனாஸா தொழுகையை நடத்தலாம். அபிசீனியாவில் மரணித்த அந்நாட்டு மன்னர் நஜ்ஜாஷி அவர்களுக்கு இவ்வாறு நபியவர்கள் தொழுகை நடத்தினார்கள்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள், மதீனாவில் இருந்த போது அபிசீனிய மன்னர் நஜ்ஜாஷியின் மரணச் செய்தியைக் கூறினார்கள். "உங்கள் சகோதரர் ஒருவர் இன்று மரணித்து விட்டார். அவர் உங்கள் (முஸ்லிம்கள்) மத்தியில் இல்லை" எனக் கூறியதும், "அவர் யார்?" எனத் தோழர்கள் கேட்டனர். "நஜ்ஜாஷ" எனப் பதிலளித்த நபியவர்கள் "உங்கள் சகோதரனுக்குப் பிழை பொறுக்கத் தேடுங்கள்" எனக் கூறினார்கள்.

பின்பு தோழர்களுடன் தொழுமிடம் (இன்னொரு அறிவிப்பில் பகீஃ கப்ருஸ்தானம்) சென்று இமாமத் செய்தார்கள். தோழர்கள் இரண்டு வரிசையில் நின்றார்கள். ஜனாஸா எங்களுக்கு முன்னிலையில் இருப்பதைப் போன்ற உணர்வுடன் நாங்கள் தொழுதோம். நபியவர்கள் 4 முறை தக்பீர் கட்டித் தொழுவித்தார்கள்.

தொழுகை முடிந்ததும் அல்லாஹ்வின் தூதரே! ஒரு அபிசீனிய அடிமைக்கா தொழுகை நடத்தினீர்கள்? எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இவ்வேளை அல்லாஹ் பின்வரும் வசனத்தை வஹீ அறிவித்துக் கொடுத்தான்.

மேலும் நிச்சயமாக வேதமுடையோரில் சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் மீதும் உங்களுக்கு அருளப்பட்ட (வேதத்)திலும், அவர்களுக்கு

**அருளப்பட்ட (மற்ற)வற்றிலும் நம்பிக்கை வைக்கிறார்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை அற்ப விலைக்கு விற்கமாட்டார்கள்; இத்தகையோருக்கு நற்கூலி அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; நிச்சயமாக அல்லாஹ் கணக்கு வாங்குவதில் மிகவும் தீவிரமானவன்.**

(அல் குர்ஆன்: 3:199)

குர்ஆன் வசனம் தவிர்த்த ஏனைய செய்திகளுக்கு புகாரி முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, பைஹகி, தயாலிஸ், அஹ்மத் ஆகிய ஏடுகளில் ஆதாரம் உள்ளது.

இப்னு கையிம் (ரஹ்) அவர்கள் தமது 'ஸாதுல் மஆத்' என்ற நூலில் 1ம் பாகம் 205, 206ம் பக்கத்தில் கூறுவதாவது:

''நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலிலும், சுன்னாவிலும் ஜனாஸாக்களுக்கு சலாத்துல் காயிப் (மறைவான ஜனாஸா தொழுகை) என்று இருக்கவில்லை. நபியவர்கள் உயிருடன் இருக்கும் போது எத்தனையோ முஸ்லிம்கள் தூர இடங்களில் மரணித்துள்ளனர். அவர்கள் யாருக்கும் மறைவான ஜனாஸா தொழுகை நடைபெற்றதாக ஆதாரமில்லை. நஜ்ஜாஷி அவர்களுக்கு மட்டும்தான் தொழுகை நடத்தியுள்ளார்கள். ஏனெனில் அவர் நிராகரிப்பாளர்களுக்கு மத்தியில் மரணித்திருந்தார். தொழுவிப்பதற்கு யாரும் இருக்கவில்லை.

''இதுமட்டுமல்ல நேர்வழி சென்ற கலீஃபாக்கள் (குலபாஉர் ராஷிதீன்கள்) மரணித்த வேளை எப்பகுதியிலும் மறைவான ஜனாஸா தொழுகையை முஸ்லிம்கள் தொழுததாக ஆதாரமில்லை. அபூபக்கர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோர் மதீனாவில் மரணமடைந்தனர். பாரசீகம், ரோமாபுரி ஆகிய நாடுகளுக்குச் சென்ற யாரும் இவர்களுக்கு மறைவான ஜனாஸா தொழுகை நடத்தவில்லை.

அலீ (ரழி) அவர்கள் கூபாவில் மரணமடைந்தார். மதினாவிலுள்ள எந்த முஸ்லிமும் இவ்வாறான தொழுகை நடத்தவில்லை. இப்போது இது ஒரு சர்வசாதாரணமான நிகழ்ச்சியாகிவிட்டது. ஒரு அரசியல்வாதி, ஜனாதிபதி போன்றோர் எங்காவது மரணித்து விட்டால் உலகிலுள்ள

அத்தனை பள்ளிவாசல்களிலும், ஜனாஸா தொழுகை நடைபெற்றுவிடும். மரணித்தவர் இஸ்லாமிய நெறியில் வாழ்ந்தாரா? இஸ்லாத்தின் உயர்வுக்காக பாடுபட்டாரா? என்பதையும் கவனிப்பதில்லை.

ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றச் சென்றவர் மக்காவில் மரணித்தாலும் ஆயிரக்கணக்கான ஹஜ்ஜாஜிகள் தொழுவித்திருந்தாலும் கூட அவருடைய சொந்த ஊரில், தெரிந்த ஊர்களில் எல்லாம் மறைவான ஜனாஸா தொழுகை நடைபெற்று வரும். இது நபி (ஸல்) அவர்களின் வழிமுறையும் அல்ல; நேர்வழி சென்ற கலீஃபாக்களின், நபித்தோழர்களின் வழிமுறையும் அல்ல. இது பித்அத்தான செயலாகும்.

**61.** நிராகரிப்பாளர்களுக்காகவும் நயவஞ்சகர்களுக்காகவும் தொழுகை நடத்துவதும் பாவமீட்சி தேடுவதும் இரக்கப்படுதலும் ஹராமாகும். ஏனெனில்

*அவர்களில் யாராவது ஒருவர் இறந்து விட்டால் அவருக்காக நீர் ஒருக்காலும் (ஜனாஸா) தொழுகை தொழவேண்டாம்; இன்னும் அவருடைய கப்ரில் (பிரார்த்தனைக்காக) நிற்க வேண்டாம்; ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் நிராகரித்துப் பாவிகளாகவே இறந்தார்கள்.*

(அல் குர்ஆன்: 9:84)

என அல்லாஹ் கூறியிருக்கிறான்.

அலீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

*''இணைவைப்பாளர்களான தன் பெற்றோருக்கு பிழை பொறுக்கும்படி பிரார்த்தித்துக் கொண்டிருந்த ஒரு மனிதரைக் கண்டு இணைவைப்பாளர்களுக்காக பிரார்த்திக்கின்றாயா?'' எனக் கேட்டேன். அதற்கு அவர் இப்ராஹீம் (அலை) இணைவைக்கும் தமது தந்தைக்காக பிரார்த்திக்கவில்லையா? (பிரார்த்தித்ததாக அல்லாஹ் கூறுகிறானே) என்று என்னைத் திருப்பிக் கேட்டார்.*

நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்று இதனைக் கூறினேன். அப்போது

*இப்ராஹீம் (நபி) தம் தந்தைக்காக மன்னிப்புக் கோரியதெல்லாம் அவர் தம் தந்தைக்குச் செய்திருந்த ஒரு வாக்குறுதிக்காகவேயன்றி வேறில்லை; மெய்யாகவே, அவர் (தந்தை) அல்லாஹ்வுக்கு விரோதி என்பது தெளிவாகியதும் அதிலிருந்து அவர் விலகிக் கொண்டார் -நிச்சயமாக இப்ராஹீம் பொறுமையுடையவராகவும் இரக்கமுள்ளவராகவும் இருந்தார்.*

(அல் குர்ஆன்: 9:114)

என்ற வசனத்தை அல்லாஹ் இறக்கி வைத்தான்.

(திர்மிதி, நஸயீ, அஹ்மத், ஹாகிம்).

நிராகரிப்பாளருக்காக தொழுகை நடத்துவது, பிழை பொறுக்கத் தேடுவது குர்ஆன் கூற்றுப்படியும் 'இஜ்மாவு' வின்படியும் ஹராம் என இமாம் நவவி அவர்கள் தமது 'மஜ்முஉ' என்ற நூலில் (5ம் பாகம் 144, 250ம் பக்கங்களில்) குறிப்பிட்டுள்ளார்கள்.

இன்று முஸ்லிம்கள் மத்தியில் இந்தச் செயல் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக முஸ்லிம் நாடுகள் என்று பெயரெடுத்த பல தேசங்களிலுள்ள செய்தித் தாள்களில் இதனைப் பரவலாக காணலாம். ஒரு மார்க்கப் பற்றுள்ள அரபு நாட்டுத் தலைவர் 'ஸ்டாலின்' இறந்ததற்கு இரங்கல் செய்தி கொடுத்திருந்தார். அவருக்கு நன்றாகத் தெரியும் 'மதம்' இருக்கக்கூடாதெனப் போரிட்டவர்தான் ஸ்டாலின். அப்படிப் போரிட்டவருக்காக இரங்குகிறார் இந்த முஸ்லிம்!

இந்தியாவில் காந்தியின் சவ ஊர்வலத்திற்கு முன்னால் குர்ஆனை ஓதிக் கொண்டு பல முஸ்லிம்கள் சென்றார்கள். ஒரு முஸ்லிம் பத்திரிகையில் 'பெர்னாட்ஷாவுக்கு அல்லாஹ் கிருபை செய்வானாக' என்று எழுதப்பட்டிருந்தது.

தொழுகை, ஹஜ் போன்றவை கடமையில்லை; மனித வழிபாடு போதும் என்ற நம்பிக்கையுள்ள இஸ்மாயில் (ஷியாக்களில் ஒரு பிரிவினரின்) தலைவர் (ஆகாகான்) இறந்ததற்கு தொழுகை நடத்திய ஆலிம்களும் இன்றுள்ளனர்.

அல்லாஹ்விடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லை. அல்லாஹ் போதுமானவன்.

**62.** மையித்துத் தொழுகைக்கு ஜமாஅத் கட்டாயமாகும். ஏனைய பர்ளுத் தொழுகைகளைப் போன்று ஜமாஅத்தாகவே தொழ வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து ஜமாஅத்தாகவே தொழுவித்து உள்ளார்கள் என்பதும் 'நான் தொழுவதைப் போன்றே நீங்களும் தொழுங்கள்' என்ற நபிமொழிப்படி செய்வதும் ஆதாரங்களாக இருக்கின்றன.

நபி (ஸல்) அவர்கள் இறந்ததும் நபித் தோழர்கள் தனித்தனியேதான் தொழுகை நடத்தினார்கள் என்ற வாதம் இதற்கு ஏற்புடையதல்ல. அது நிறைவேற்றப்பட்டு விட்ட நபியவர்களின் விசேச தனித்துவத்தை உடையது. நாம் ஆதாரத்திற்கு எடுக்கக் கூடியதல்ல. நபியவர்கள் நமக்குச் செய்து காட்டிய ஜமாஅத் தொழுகைதான் முக்கியம். நபியவர்கள் உயிருடன் இருந்த வேளையில் மையித்துத் தொழுகையை ஜமாஅத்தாகவே நடத்தியுள்ளார்கள்.

தனித்தனியாக மையித்துத் தொழுகை நடத்தினால் கடமை (பர்ளு) விடுபட்டுப் போகிறது. கடமையை விட்ட பாவமும் சேர்கிறது. (மையித்துத் தொழுகை கூட்டாக நடைபெற்ற பின் வந்து சேர்பவர்கள் தனியாகத் தொழுகை நடத்தலாம்).

மையித்துத் தொழுகையை தனியாகத் தொழுதாலும் கூடும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. எனினும் நபிவழி என்பது கூட்டாகவே தொழுவதாகும் என்பதற்கு பல நம்பத்தகுந்த நபிமொழிகள் உள்ளன என்று இமாம் நவவி அவர்கள் தமது 'மஜ்மூஉ' (பாகம்.5, பக்கம் 314) நூலில் தீர்ப்பளித்துள்ளார்கள்.

**63.** ஜமாஅத் தொழுகைக்குக் குறைந்த பட்சம் 3 பேர்களாவது இருப்பது அவசியம்

அப்துல்லாஹ் இப்னு அபிதல்ஹா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உமைர் இப்னு அபூதல்ஹா மரணித்த போது தல்ஹா அவர்கள் நபி (ஸல்) அவர்களை தொழுகை நடத்த அழைத்து வந்தார்கள். வீட்டிலேயே மையித்துத் தொழுகை நடத்தப்பட்டது. நபியவர்கள் இமாமத் செய்ய அபூதல்ஹா அவர்கள் பின்னால் நின்றார்கள். அபூதல்ஹாவுக்குப் பின்னால் உம்மு ஸுலைம் (மரணித்தவரின் தாய்) நின்றார்கள். இம்மூவரையும் தவிர வேறு யாரும் தொழுகையில் இருக்கவில்லை.

(ஹாகிம், பைஹகீ, தப்ரானி)

**64.** மையித்துத் தொழுகையில் அதிகமானோர் கலந்து கொள்வது ஏற்றமும் பலனுள்ளதும் ஆகும்.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:
''எந்த மையித்திற்காவது ஒரு குழுவாக நூறு பேர் சேர்ந்து அல்லாஹ்விடம் பரிந்துரைத்தால் அப்பரிந்துரைகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். (இன்னொரு அறிவிப்பின்படி) மையித்திற்கு பிழை பொறுக்கப்படும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம், நஸயீ, பைஹகீ, அஹ்மத்)

ஷிர்க் (இணை) வைக்காது வாழும் முஸ்லிம்கள் நூறு பேருக்குக் குறைவாக இருந்தாலும் அந்த மையித்திற்குப் பிழை பொறுக்கப்படும்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''ஒரு முஸ்லிம் இறந்த பின் அவனுடைய மையித்துத் தொழுகைக்காக அல்லாஹ்வுக்கு எவ்வித இணையும் வைக்காது நாற்பது பேர் கலந்து கொள்வார்களாயின் அவர்கள் பரிந்துரையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா, பைஹகீ, அஹ்மத்)

**65.** மையித்துத் தொழுகைக்காகக் கூடுபவர்கள் இமாமுக்குப் பின்னால் குறைந்த பட்சம் மூன்று வரிசைகளாக நின்று தொழுவது விரும்பத்தக்கதாகும். அதற்கு மேல் எத்தனை வரிசைகளிலும் தொழுது கொள்ள முடியும்.

அபூ உமாமா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்குத் தொழுகை நடத்தினார்கள். அத்தொழுகையில் (ஏழு) 7 பேர் மட்டும் கலந்து கொண்டார்கள். மூன்று பேரை ஒரு வரிசையிலும் இரண்டு பேரை இரண்டாம் வரிசையிலும் மற்ற இருவரையும் மூன்றாம் வரிசையிலும் நிறுத்தி தொழுகை நடத்தினார்கள்.

(தப்ரானி, பைஹகீ)

**66.** ஜனாஸா தொழுகைக்கு இமாமுடன் ஒருவர் மட்டும் இருந்தால் அவர் ஏனைய தொழுகைக்குப் போன்று அருகில் நிற்காமல் பின்னாலேயே நிற்க வேண்டும். இதற்குரிய ஆதாரம் 63ம் இலக்கத்தில் வந்திருப்பதைக் காணலாம்.

**67.** ஜனாஸா தொழுகை நடத்துவதற்கு சொந்தக் காரனை விட தலைவன் அல்லது அவரின் பிரதிநிதிதான் உரிமையுடையவராவர்.

அபூஹாஸிம் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"நான் அலீ (ரழி) அவர்களின் மகன் ஹஸன் (ரழி) அவர்களின் ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டேன். அப்போது ஹுஸைன் (ரழி) அவர்கள் மதீனாவில் பிரதிநிதியாக இருந்த ஸயீத் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்களைத் தொழுகை நடத்துமாறு அவரின் பிடரியைப் பிடித்துத் தள்ளினார்கள். (அவர்களிருவருக்கு மிடையில் பிணக்கு இருந்தும்) இதுதான் சுன்னத் என்பதை வலியுறுத்தினார்கள்.

(ஹாகிம், பைஹகீ)

**68.** தலைவர் அல்லது அவர் பிரதிநிதி வந்திருக்க வில்லையானால் அங்கு வந்திருப்பவர்களில் குர்ஆனை அதிகம் விளங்கியவர் இமாமத் செய்யலாம். அவருமில்லை யாயின் பின்வரும் நபிமொழியில் உள்ளவாறு தகுதி யானவர் தொழுகை நடத்த வேண்டும்.

அபூ மஸ்ஊதில் பத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

தொழுகைக்கு இமாமத் செய்பவர் குர்ஆனை ஓத நன்கு அறிந்தவராயிருக்க வேண்டும். அங்கு குழுமியிருப்பவர்கள் அனைவரும் சரிசமமாக ஓதக்கூடியவர்களாக இருந்தால் அவர்களில் (சுன்னத்தை) நபி மொழியை நன்கு அறிந்தவர் செய்யலாம்.
சுன்னாவை அறிந்தவர்களும் சரிசமமாக இருந்தால் அவர்களில் முதலில் 'ஹிஜ்ரத்' சென்றவர் செய்யலாம். ஹிஜ்ரத் சரிசமமாக இருந்தால் வயதில் (முதிர்ந்தவர்) முதியவர் செய்யலாம். எவரும் ஒருவருடைய அதிகார எல்லையில் தொழ வைக்க வேண்டாம். மேலும் அவர் அனுமதியின்றி அவர் அமரும் இடத்தில் அமர வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ)

பருவ வயதை அடையாத சிறுவராக இருப்பினும் குர்ஆனை நன்றாக ஓதத் தெரிந்தவரே இமாமத் செய்யத் தகுதியுடையவராவர்.

அம்ரு இப்னு ஸல்மா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

தனது கூட்டத்தினர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாமைக் கற்றுக் கொண்டு தாயகம் திரும்ப முடிவு செய்து ''இறைத்தூதர் அவர்களே! எங்களுக்கு இமாமத் செய்பவர் யார்?'' என வினவினார்கள். 'உங்களில் குர்ஆனை அதிகம் ஓதத் தெரிந்தவர்களே இமாமத் செய்ய வேண்டும்' என நபியவர்கள் பதிலளித்தார்கள். எங்கள் கூட்டத்தில் என்னைத் தவிர வேறு யாரும் குர்ஆனை நன்கு கற்றவர்கள் இருக்கவில்லை. அப்போது நான் பருவ வயதை அடையாத சிறுவனாக உடையை போர்த்திக் கொண்டிருந்தேன். என்னையே இமாமத் செய்ய வைத்தார்கள். எல்லாத் தொழுகைகளுக்கும் நானே இமாமத் செய்தேன். இன்று வரை ஜனாஸாக்களையும் நானே தொழுவித்தேன் எனக் கூறினார்கள்.

(அபூதாவூத், பைஹகீ)

**69.** ஆண்களும் பெண்களுமாகப் பல ஜனாஸாக்களை ஒரே நேரத்தில் தொழுவிக்க நேர்ந்தால் ஒரே தொழுகையில் தொழலாம். ஜனாஸாக்களை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆண்களை இமாமுக்கு அடுத்ததாக முன்னாலும் அதன்பின் பெண் களையும் வைத்து தொழுவிக்க வேண்டும். ஆண் மையித்து சிறுவனாக இருந்தாலும் இமாமுக்குப் பக்கத்திலேயே முன்னால் வைக்கப்பட வேண்டும்.

*இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*(ஒரே தடவையில்) ஒன்பது ஜனாஸாக்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றில் அலீ (ரழி) அவர்களின் மகளும் உமர் (ரழி) அவர்களின் மனைவியுமான உம்மு குல்தூம் (ரழி) அவர்களுடையவும், அவர் மகனுடையவும் ஜனாஸாக்களிருந்தன. ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்வதற்காக இப்னு அப்பாஸ், அபூஹுரைரா, அபூஸயீத், அபூகதாதா (ரழி) போன்ற பெரும் நபித் தோழர்களும் இருந்தனர். இமாமுக்கு அடுத்ததாக முன்னால் உம்மு குல்தூம் அவர்களின் மகன் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு நான் ஆட்சேபனை தெரிவித்தேன். இது சரிதானா? என இப்னு அப்பாஸ், அபூஹுரைரா, அபூஸயீத், அபூகதாதா ஆகியோரிடம் கேட்டேன். ஆம். சரிதான். இதுதான் சுன்னத் (நபிவழி) என்று பதிலளித்தார்கள்.*

*அப்போது ஸயீத் இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் மதீனாவின் தலைவராக இருந்தார். எனினும் நானே அவர் அனுமதியுடன் தொழுகையை நடத்தினேன்.*

(நஸயீ, பைஹகீ, தாரகுத்னி)

**70.** பல ஜனாஸாக்கள் இருந்தாலும் ஒவ்வொரு ஜனாஸாவையும் தனித்தனியே தொழுவிப்பது ஆகும். உஹதுச் சண்டையில் கொல்லப்பட்ட ஷுஹதாக்களை நபி (ஸல்) அவர்கள் தொழுவித்ததை இதற்கு ஆதாரமாகக் கொள்ள முடியும். (60ம் இலக்க சட்டத்தைப் பார்க்க)

**71.** பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகையை நடத்தலாம். அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக் கிறார்கள்:

ஸஃதிப்னு அபீ வக்காஸ் அவர்கள் வபாத்தானவுடன் நபியவர்களின் மனைவியர் அவரின் ஜனாஸாவைப் பள்ளி வாசலுக்கு கொண்டு வரும்படிக் கூறினார்கள். பள்ளி வாசலினுள் ஜனாஸா கொண்டு வரப்பட்டதும் நபியவர்களின் மனைவியர் தங்கள் அறைகளில் இருந்தவாறு தொழுகையை நடத்தினார்கள்.

இவ்வாறு ஜனாஸா பள்ளி வாசலுக்குக் கொண்டு வரப்பட்டது பித்அத்தான செயல் என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். இச்செய்தி அன்னை ஆயிஷா (ரழி) அவர்களுக்குக் கிடைத்தது. "மக்கள் எங்கள் மீது ஏன் குறை கூறுகின்றனர்? அல்லாஹ் மீது ஆணையாக! ஸுஹைல் இப்னு பைலாவுக்கும் அவர் சகோதரருக்கும் நடுப்பள்ளியில் வைத்தே நபி (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்" எனக் கூறினார்கள்.

(முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ)

**72.** எனினும் பள்ளிவாசலுக்குள்ளே வைத்து ஜனாஸா தொழுவதை விட வெளியே அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலே வைத்துக் கொள்வதுதான் சிறந்தது. அதிகமான ஜனாஸாக்களை இவ்வாறு வெளியில் வைத்துதான் நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள்.

நபியவர்கள் தொழுகை நடத்திய இடம் பள்ளி வாசலை ஒட்டியதாக கிழக்குப்பக்கம் அமைந்திருந்தது. பெருநாள் தொழுகைகளையும் ஜனாஸா தொழுகை களையும் இங்குதான் நபியவர்கள் நடத்திக் கொண்டிருந் தார்கள் என ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் 'அல்பத்ஹு' (12ம் பாகம் 108ம் பக்கம்) என்ற நூலில் குறித்துள்ளார்கள்.

60ம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட நஜ்ஜாஷி அவர்களுக்கும் இங்குதான் தொழுகை நடத்தப்பட்டது.

**73.** கப்ருஸ்தானங்களில் ஜனாஸா தொழுகை நடத்துவது கூடாது.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

கப்ருஸ்தானத்தில் ஜனாஸா தொழுவதை நபி (ஸல்)

அவர்கள் விலக்கியுள்ளார்கள்.

(தப்ரானி, இப்னு அபீஷைபா)

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: கப்ருஸ் தானங்களில் பள்ளிவாசல் கட்டுவதை நபியவர்கள் வெறுத்தார்கள்.

இதற்கு ஆதாரமாக பல தொடர் நபிமொழிகள் வந்துள்ளன. விபரமாக "தஹ்தீருஸ் ஸாஜித் மின் இத்திஹாதில் குபூரி மஸாஜித்" என்ற எனது நூலில் விவரித்துள்ளேன். இந்நூலிலும் 126ம் சட்டத்தில் அவற்றில் சிலவற்றைத் தருவேன்.

**74.** ஆண் ஜனாஸாவுக்குத் தலைப்பக்கமும் பெண் ஜனாஸாவுக்கு நடுப்பகுதிக்கு நேராகவும் நின்றுதான் இமாம் தொழுகை நடத்த வேண்டும்.

அபூஹாலிப் கையாத் அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் அனஸ் (ரழி) அவர்கள் ஒரு ஆண் மையித்தைத் தொழுவிக்கும் போது மையித்தின் தலைப்பக்கம் நின்று தொழுவிப்பதைக் கண்டேன். சற்று நேரத்திற்குப் பின் அன்சாரிகளில் உள்ள ஒரு பெண்ணின் ஜனாஸா வந்தது. அதனையும் தொழுவிக்கும்படி வேண்டினார்கள். அனஸ் (ரழி) அவர்கள் அப்பெண் மையித்தின் நடுப்பகுதிக்கு (மற்றொரு அறிவிப்பின்படி இடுப்புக்கு) நேராக நின்று தொழுகை நடத்தினார்கள்.

பின்னால் எங்களுடன் நின்று தொழுத அலாஉ இப்னு ஸியாத் (ரழி) அவர்களும் இருந்தார்கள். ஆணுக்கொரு இடத்திலும் பெண்ணுக்கொரு இடத்திலும் நின்று தொழுவித்ததைக் கண்ட அலாஉ அவர்கள் அபூஹம்ஸாவே (அனஸே) இப்படித்தானா நபி (ஸல்) அவர்கள் நின்று தொழுவித்தார்கள்? எனக் கேட்டார். ஆம் என அனஸ் (ரழி) அவர்கள் விடையளித்தார்கள். அலாஉ அவர்கள் எங்களைப் பார்த்து இதனை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள் எனக் கூறினார்.

(அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, பைஹகி, அஹ்மத்)

# 15. ஜனாஸா தொழுகை தொழும் முறை

**75.** ஜனாஸா தொழுகைக்காக 4 அல்லது 5 தக்பீர் கூற வேண்டும். இவை அனைத்தும் நபி (ஸல்) அவர்கள் செயலை அடிப்படையாகக் கொண்டதாகும். இவற்றில் எதைக் கடைப்பிடித்தாலும் சரியாகிவிடும். நபியவர்கள் நான்கு முறையாகவும் ஐந்து முறையாகவும் தக்பீர் கட்டியுள்ளார்கள். தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் பாத்திஹா சூரா ஓதுவதற்கு முன் ஓதும் துஆக்கள், அத்தஹியாத்தில் ஸலவாத்தில் இப்ராஹீமிய்யா என்பன வித்தியாசப்பட்டது போன்று இவ்வித்தியாசமும் நபியவர்களின் நடைமுறையையொட்டியே எழுந்ததாகும்.

ஒரு முறையையே பின்பற்ற வேண்டும் என நினைத்தால் 4 தக்பீர்களை வழமைப்படுத்திக் கொள்வது நன்று. ஏனெனில் நான்கு முறை தக்பீர் கட்டுவதற்குத்தான் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

இமாம் எத்தனை தக்பீர்கள் கட்டுகின்றாரோ அதனையே பின்னால் நின்று தொழுபவர்களும் (மஃமூம்களும்) பின்பற்ற வேண்டும்.

**76.** முதலாவது தக்பீரின் போது கையை உயர்த்த வேண்டும்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸா தொழுகை நடத்தும்போது முதலாவது தக்பீரில் கையை உயர்த்தினார்கள். வலது கையை இடது கையின் மீது வைத்துக் கொண்டார்கள்.

(திர்மிதி, பைஹகி, தாரகுத்னி)

**77.** பின்பு வலது கையை இடது கை மணிக்கட்டு அல்லது முன்னங்கை அல்லது விரல்கள் அடுத்துள்ள பகுதியின் மீது வைத்து நெஞ்சில் கட்டிக்கொள்ள வேண்டும். இதற்குப் பல ஆதார நபிமொழிகள் உள்ளன.

இமாம்களாகிய நவவி, ஸைலயி ஆகியோரின் கூற்றுப்படி தொப்புளுக்குக் கீழே தக்பீர் கட்டுவது பற்றி வந்துள்ள நபிமொழி ஒருமித்த கருத்துப்படி பலவீன மானதாகும்.

**78.** தக்பீர் கட்டியவுடன் பாத்திஹா சூராவும் வேறொரு சூராவும் ஓத வேண்டும்.

*அப்துல்லாஹ் இப்னு அவ்ப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*நான் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களுக்குப் பின்னால் நின்று ஜனாஸா தொழுதேன். அப்போது அவர்கள் பாத்திஹா சூராவையும் இன்னொரு சூராவையும் சப்தமிட்டு ஓதித் தொழுவித்தார்கள். தொழுகை முடிந்ததும் நான் அவர் கையைப் பிடித்துக் கொண்டு (ஏன் இப்படிச் செய்தீர்கள் என) கேட்டேன். இதுதான் "உண்மையும் நபி வழியும்" என்பதை உங்களுக்கு அறியத்தருவதற்கே இவ்வாறு தொழுவித்தேன் என்றார்கள்.*

(புகாரி, அபூதாவூத், நஸயீ, திர்மிதி, ஹாகிம்)

**79.** ஜனாஸா தொழுகையில் சூராக்களும், பிரார்த் தனைகளும் மௌனமாக ஓத வேண்டும்.

*அபூஉமாமா இப்னு ஸஹ்ல் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

ஜனாஸா தொழுகையில் முதலாவது தக்பீருக்குப்பின் பாத்திஹா சூராவை மௌனமாக ஓதுவதுதான் நபி வழி (சுன்னத்) ஆகும்.

**80.** பின்னர் இரண்டாம் தக்பீர் கட்டியபின் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூற வேண்டும்.

அபூஉமாமா இப்னு ஸஹ்லி அவர்கள் அறிவிக் கிறார்கள்: "ஜனாஸா தொழுகையின் நபிவழி என்னவென் றால் இமாம் முதலாவது தக்பீர் கட்டியபின் மெதுவாக பாத்திஹா சூராவை ஓத வேண்டும். பின்பு (இரண்டாம் தக்பீருக்குப் பின்) நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூற வேண்டும். பின்னர் (மூன்றாம் தக்பீருக்குப்பின்)

மையித்திற்காகத் தூய்மையுடன் பிரார்த்தனை செய்தல் வேண்டும். இவ்விரண்டிலும் (குர்ஆன் வசனங்கள்) எதுவும் ஓதக்கூடாது. அதன்பின் (நான்காம் தக்பீருக்குப்பின்) மௌனமாக ஸலாம் கூறி முடிக்க வேண்டும்.

மஃமூம்களும் இவ்வாறே இமாமைப் பின்பற்றுவது சுன்னத்தாகும். இரண்டாம் தக்பீருக்குப் பின் கூறும் ஸலவாத்தின் வசனங்கள் பற்றி எந்த நபிமொழியையும் காணமுடியவில்லை. ஜனாஸா தொழுகையில் குறிப்பிட்ட ஸலவாத்து இதுதான் எனக் கூறுவதற்கில்லை. எனினும் அத்தஹிய்யாத்தில் கூறப்படும் ''ஸலவாத்துல் இப்ராஹீமிய்யா''வை ஓதுவது சிறந்ததாகும்.

**81.** அடுத்துள்ள (மூன்றாவது) தக்பீர் மையித்திற்காக தூய உள்ளத்துடன் பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

**82.** மூன்றாம் தக்பீருக்குப் பின் ஜனாஸாவுக்காக ஓதும் பிரார்த்தனைகள் பற்றி ஸஹீஹான நபிமொழிகள் இருக்கின்றன. அவற்றில் நான்கை மட்டும் இங்கு தருகிறோம். இவற்றிலொன்றைக் கூறி பிரார்த்திக்கலாம்.

1. *''அல்லாஹும்மஃபிர்லஹு, வர்ஹம்ஹு, வஆஃபிஹி, வஃபுஅன்ஹு வஅக்ரிம் நுஸ்லஹு வவஸ்ஸில் மத்கலஹு, வஹ்சிலீஹு பில்மாஇ, வ்ததலஜி வல்பர்தி, வநக்கிஹி மின்ஹதாயாஹு கமா நக்கைத்த (யுனக்கா)த் தௌபுல் அப்யழு மினத்தனஸி, வஅப்தில்ஹு தாரன் ஹைரன் மின்தாரிஹி, வஅஹ்லன் கைரன்மின் அஹ்லிஹி, வஸவ்ஜன் ஹைரன் மின் ஸவ்ஜிஹி, வஅத்ஹில்ஹுல் ஜன்னத, வஅஇத்ஹு மின் அதாபிகல்கப்ரி வமின் அதாபின்னார்''.*

 (முஸ்லிம், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத், பைஹகி)

2. *''அல்லாஹும்மக்பிர் லிஹையினா வமையிதினா வஷாஹி தினா வஹாஇபினா, வஸயீரினா, வகபீரினா, வதகரினா, வஉன்தானா, அல்லாஹும்ம மன்அஹ்யைத் தஹுமின்னா பஅஹ்யிஹி அலல் இஸ்லாம், வமன் தவஃப் பைத்தஹுமின் அஜ்ரஹு வலா தளில்லனா பஹ்தஹு''.*

 (அபூதாவூத். திர்மிதி. இப்னுமாஜா. பைஹகி, ஹாகீம்)

3. ''அல்லாஹும்ம இன்ன புலானப்னிபுலான் பீ திம்மதி
சுவஹப்ஸி ஜவாரிக, ஃபகிஹில்பித்னத் தல்கப்ரி,
வஅதாபின்னார் வஅன்த அஹ்லுல் வபாஇ வல்ஹக்கி
ஃபஹ்பிர்லஹு வர்ஹம்ஹு இன்னக அன்தல் கபூருர்
ரஹீம்.

(அபூதாவூத், இப்னுமாஜா, அஹ்மத், இப்னுஹிப்பான்)

4. ''அல்லாஹும்ம அப்துக வப்னு அமதிக இஹ்தாஜ
இலாரஹ்மதிக, வஅன்த ஹனிய்யுன் அன் அதாபிஹி,
இன்கான முஹ்ஸினன் ஃபஸித்ஃபீ ஹஸனாதிஹி,
வஇன்கான முஸீஅன்ஃ பதஜாவிஸ்அன்ஹு''

(ஹாகிம், தப்ரானீ)

**83.** கடைசித் தக்பீருக்கும் ஸலாம் கொடுப்பதற்கு முன்னால் பிரார்த்தனை புரிவது மார்க்க அனுஷ்டான மாகும்.

அபூயஹ்பூர் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''நான் அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்பா (ரழி) அவர்கள் ஒரு ஜனாஸாவைத் தொழுவிக்கும்போது அதில் கலந்து கொண்டேன். நான்கு முறை தக்பீர் கட்டியபின் தாமதித்து விட்டு சலாம் கொடுத்தார்கள். அதன் பிறகு எங்களைப் பார்த்து நான் ஐந்தாவது முறையும், தக்பீர் கட்டுவேன் என எதிர்பார்த்தீர்களா? எனக் கேட்டார். நாங்கள் 'இல்லை' என்று கூறினோம். நபி (ஸல்) அவர்கள் நான்கு முறைதான் தக்பீர் கட்டினார்கள் எனக் கூறினார்.

(பைஹகீ, அஹ்மத், இப்னுமாஜா, ஹாகிம்)

**84.** பிறகு ஏனைய தொழுகைகள் முடிந்து இரண்டு ஸலாம் கொடுப்பது போன்று மையித்துத் தொழுகைக்கும் இரண்டு ஸலாம் கூற வேண்டும்.

இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.

''நபி (ஸல்) அவர்கள் செய்த மூன்று செயல்களை இப்போது முஸ்லிம்கள் விட்டு விட்டார்கள். அதில் முதலாவது மற்ற தொழுகைகளுக்குப் போன்று ஜனாஸா தொழுகையின் முடிவிலும் இரண்டு ஸலாம் கொடுப்பதாகும்.

(முஸ்லிம், பைஹகி, தப்ரானீ)

**85.** ஒரு சலாமுடன் முடித்துக் கொள்வதும் ஆகும்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவைத் தொழுவித்தார்கள். நான்கு தக்பீர் கட்டினார்கள். ஒரு ஸலாம் மட்டும் கொடுத்தார்கள்.

(பைஹகி, ஹாகிம், தாரகுத்னீ)

இவ்விரண்டு ஹதீஸ்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஜனாஸா தொழுகையின் முடிவில் ஒரு ஸலாம் கொடுப்பதே போதுமானது என்பது புலனாகிறது. ஏனெனில் இதற்கு ஆதாரமாகவே இப்னு அப்பாஸ், இப்னு உமர், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், அலீ இப்னு அபீதாலிப், அபூஹுரைரா (ரழி) ஆகியோரின் செயல்களும் இருக்கின்றன. இதனையே இமாம் அஹ்மது அவர்களும் தீர்ப்பளித்துள்ளார்கள்.

**86.** நபிவழி யாதெனில் ஸலாம் கொடுப்பது மௌனமாக இருக்க வேண்டும் என்பதாகும். 74ம் இலக்கத்திலுள்ள அபூஉமாமாவின் நபிமொழி இதற்கு ஆதாரமாக இருக்கிறது. இமாம் மௌனமாக ஸலாம் கொடுப்பது போன்றே மஃமூம்களும் மௌனமாக ஸலாம் கொடுக்க வேண்டும்.

**87.** போதிய காரணமின்றி தொழுவதற்கு விலக்கப் பட்ட மூன்று நேரங்களில் ஜனாஸா தொழுவது கூடாது.

உக்பா இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

சூரியன் உதிக்கும்போதும், அது உச்சியிலிருக்கும் போதும், மறையும் போதும் தொழுவதையும், மரணித்தவர்களை நல்லடக்கம் செய்வதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்து உள்ளார்கள்.

நல்லடக்கம் செய்வதையும் என்பதன் அர்த்தம் மையித்துத் தொழுகையையும் உள்ளடக்கும் என்பதுதான் கருத்தாகும்.

(முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத்)

# 16. நல்லடக்கம் செய்தல்

**88.** மையித்தை அடக்கம் செய்வது (அது நிராகரிப்பவன் பிரேதமாயினும் சரியே) கடமையாகும். இதற்கு ஆதாரமாக இரண்டு நபிமொழிகள் உள்ளன.

1. அபூதல்ஹா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பத்ருப் போர் முடிந்தபின் கொல்லப்பட்ட இருபத்திநான்கு குறைஷித் தலைவர்களின் சடலங்களையும் இழுத்து வந்து 'துவா' என்னும் (பாழடைந்த) கிணற்றினுள் போடும்படி நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வாறு செய்யப்பட்டது எனினும் 'உமைய்யா'வின் சடலம் அவர் அணிந்திருந்த இரும்புக் கவசச் சட்டையினுள் ஊதிப் பெருத்திருந்தது. அச்சட்டையைக் கழற்ற முயன்றும் முடியாது போகவே தூக்கி உதறினார்கள். அப்போது அவர் சடலப் பகுதிகள் துண்டு துண்டாகக் கழன்று விழத் தொடங்கின. இதைக் கண்ட நபித்தோழர்கள் அச்சட்டையுடனேயே போட்டு மண்ணினாலும், கல்லினாலும் சடலத்தை மூடிவிட்டனர். (இவர்தான் பிலால் (ரழி) அவர்களைச் சுடு மணலில் படுக்க வைத்து நெஞ்சிலே பெரிய கல்லை வைத்து இஸ்லாத்தை விட்டுவிடும்படி கட்டளையிட்டுத் துன்புறுத்தியவராவார்).

   (புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

2. அலீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது தந்தை அபூதாலிப் அவர்கள் இறந்தவுடன் நான் நபியவர்களிடம் வந்து வழிகேட்டிலிருந்த உங்கள் பெரியப்பா இறந்துவிட்டார். அவரை அடக்கம் செய்வது யார்? எனக்கேட்டேன். "நீங்களே சென்று அடக்கம் செய்யுங்கள். அதன்பின் எதுவும் செய்யாது என்னிடம் வாருங்கள்!" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

   இஸ்லாத்தில் இணையாமல் முஷ்ரிக்காக இறந்தவரை நான் புதைக்க வேண்டுமா? எனக்கேட்டேன். "சென்று அடக்கம் செய்து விட்டு வாரும்!" என நபியவர்கள் பணித்தார்கள். நான் சென்று அடக்கம் செய்துவிட்டு நபியவர்களிடம் வந்தேன். "சென்று குளித்துவிட்டு வாரும்!" என்று நபியவர்கள் கட்டளையிட்டார்கள்.

குளித்துவிட்டு நபியவர்களிடம் வந்தேன். எனக்காக நபியவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். இந்தப் பிரார்த்தனை எனக்கு கால்நடைச் செல்வங்கள் அதிகமாக இருப்பதை விட மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இதன் பின்னர் அலீ (ரழி) அவர்கள் மையித்தைக் குளிப்பாட்டினால் தாமும் குளிப்பவர்களாகவே இருந்தார்கள்.

(அஹ்மத், நஸயீ)

**89.** முஸ்லிமை நிராகரிப்பாளருடனும், நிராகரிப்பாளரை முஸ்லிமுடனும் அடக்கம் செய்வது கூடாது. முஸ்லிமை முஸ்லிம் கப்ருஸ்தானங்களிலும், நிராகரிப்பாளரை முஷ்ரிக்குகளின் கப்ருஸ்தானங்களிலும்தான் அடக்கம் செய்ய வேண்டும். இவ்வாறுதான் நபி (ஸல்) அவர்கள் காலமுதல் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாக பஷீர் இப்னு ஹஸாஸிய்யா (ரழி) அவர்கள் அறிவித்துள்ள செய்தி அமைகிறது.

"ஒரு நாள் நபி (ஸல்) அவர்களின் கையைப் பிடித்தவனாக நடந்து சென்றேன். அப்போது பஷீரே! அல்லாஹ்வில் குற்றம் காணுகிறீரா? என நபியவர்கள் கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! என் மாதா பிதா தங்களுக்கு அர்ப்பணம் ஆவார்களாக. அவ்வாறு நான் அல்லாஹ்வில் குற்றம் காணவேயில்லை. அல்லாஹ் எனக்குச் செய்தவையெல்லாம் நல்லவையாகவே இருக்கின்றன" என்று கூறினேன்.

பின்னர் முஷ்ரிக்குகளின் கப்ருஸ்தானத்திற்கு வந்தோம். இவர்கள் அதிகம் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதைத் தவற விட்டு முந்தி விட்டனர் என்று மூன்று முறை நபியவர்கள் கூறினார்கள். பின்னர் முஸ்லிம்களின் கப்ருஸ்தானத்திற்கு வந்தார்கள். இந்தக் கப்ருக்குரியவர்கள் தவறுகளை விட்டு அதிகம் நன்மைகளைப் பெற்றுக் கொண்டார்கள் என மூன்று முறை கூறினார்கள்.

அப்பொழுது ஒரு மனிதர் செருப்புடன் கப்ருஸ்தானத்துள் நடந்து வந்தார்.

இதனைக் கண்ட நபியவர்கள் செருப்புக்காரனே! உனக்குப் பிடித்த கேடென்ன? செருப்பைக் கழற்றி விடு! எனக் கூறினார்கள். அம்மனிதர் நபியவர்கள்தான் கூறினார்கள்

என்பதை அறிந்தவுடன் தனது செருப்புகளைக் கழற்றி எறிந்து விட்டார். (இச்செய்தியின் முழுவிபரம் பின்னால் தரப்படும்)

(அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத், ஹாகிம்)

**90.** மரணித்தவர்களைப் பொது கப்ருஸ்தானத்தில் அடக்கம் செய்வதுதான் நபிவழியாகும். இதனைப் பல நபி மொழிகள் வலியுறுத்துகின்றன. முன்னர் கூறப்பட்ட பஷீர் (ரழி) அவர்களின் அறிவிப்பு இதற்கு ஆதாரமாக அமைகிறது. நபித்தோழர்களோ, தாபியீன்களோ, அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களோ யாரும் பொது கப்ருஸ்தானத்தைத் தவிர சொந்த இடங்களில் மையித்தை அடக்கம் செய்ததாக எந்தத் தகவலும் தரவில்லை.

எனினும் நபி (ஸல்) அவர்கள் அவருடைய சொந்த இடத்தில்தான் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இது நபியவர்களுக்கு மட்டுமுள்ள சிறப்பு அனுமதியாகும்.

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் இறந்தவுடன் அவர்களை எங்கே நல்லடக்கம் செய்வது? என்பது பற்றி தோழர்களிடம் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அப்போது அபூபக்கர் (ரழி) அவர்கள் "எந்த இடத்தில் ஒரு நபியின் உயிர் பிரிகிறதோ அவ்விடத்திலே தான் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என நபியவர்கள் கூறியதை நான் மறக்கவில்லை" என்று கூறினார்கள்.

(இப்னுமாஜா, இப்னுஸஹ்து, இப்னுஆதீ)

ஆகவே நபி (ஸல்) அவர்களின் கட்டில் இருந்த இடத்திலேயே கப்ரு தோண்டப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

**91.** இஸ்லாத்திற்காக உயிர் நீத்த வீரத்தியாகிகளுக்கும் விதிவிலக்கு உண்டு. எந்த இடத்தில் போர் நடைபெற்றதோ அவ்விடத்திலேதான் அவர்களையும் நல்லடக்கம் செய்ய வேண்டும். பொது கப்ருஸ்தானத்திற்கு கொண்டு செல்வது கூடாது.

ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து முஷ்ரிகீன் களுடன் (இணைவைப்போர்களுடன்) போர் செய்வதற்காகப் புறப்பட்டார்கள். அதிலே என் தந்தை அப்துல்லாஹ் அவர்களும் பங்காற்றினார்கள். அப்போது அவர்கள் என்னை நோக்கி ஜாபிரே! எனக்குச் சில பெண் குழந்தைகள் (உன் சகோதரிகள்) இருப்பது உனக்குத் தெரியும். அவர்களின் நலன்களுக்காக உன்னைவிட்டு நான் போர்க்களம் செல்கிறேன். (அல்லாஹ்வின் நாட்டப்படி) போரில் நான் இறந்து விடவும் கூடும். என் கண்ணெதிரே நீ போர் செய்து வீரனாக மடிவதைப் பார்ப்பதுதான் என் ஆசை. எனினும் (குழந்தைகளுக்காக) உன்னை விட்டுச் செல்கிறேன். அவர்கள் நலனில் கவனமாக இரு! என்று கூறி போர்க்களம் சென்று அதிலே ஷஹீதாகி விட்டார்கள்.

என் தந்தையின் உடலையும், என் மாமாவின் உடலையும், என் சாச்சா கொண்டு வந்தார். அவர்களிருவரையும் நாங்கள் எங்களுக்குச் சொந்தமான கப்ருஸ்தானத்தில் அடக்கம் செய்ய ஆயத்தமான போது ஒருவர் வந்து போரில் கொல்லப்பட்டவர்களை யுத்தம் நடைபெற்ற இடத்திலேதான் அடக்கம் செய்ய வேண்டும் என்று ரசூலுல்லாஹ் கட்டளை பிறப்பித்து உள்ளார்கள் எனக் கூறினார்.

உடனே நாங்கள் அவ்விருவரின் உடல்களையும் திரும்பவும் போர் நடந்த இடத்திற்கு கொண்டு சென்று அடக்கம் செய்தோம்.

(அஹ்மத், அபூதாவூத்)

**92.** தவிர்க்க முடியாத காரணமின்றிப் பின்வரும் நேரங்களில் மையித்துக்களை அடக்கம் செய்வது கூடாது.

அ. விலக்கப்பட்ட மூன்று நேரங்களில் அடக்கம் செய்வது கூடாது.

இதற்குரிய ஆதாரம் 87ம் இலக்க சட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஆ. இரவிலே அடக்கம் செய்வது கூடாது.

இதற்கு ஆதாரமாக 35ம் இலக்கச் சட்டத்திலுள்ள நபி மொழியைக் காண்க!

**93.** இரவிலே அடக்கம் செய்வது அவசியப்பட்டால் அடக்கம் செய்வது ஆகும். அவ்வேளை விளக்கை கப்ருக் குள்ளும் வைத்துக் கொண்டு நல்லடக்கம் செய்யலாம்.

*இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*''ஒரு ஆண் மையித்தை நபி (ஸல்) அவர்கள் இரவிலே நல்லடக்கம் செய்தார்கள். அப்போது கப்ருக்குள் விளக்கேற்றிக் கொண்டார்கள்''.*

(திர்மிதி, இப்னுமாஜா)

**94.** கப்ரை ஆழமாகவும், அழகாகவும், விசால மாகவும் தோண்டுவது அவசியமாகும். இதற்கு ஆதாரமாக இரண்டு நபிமொழிகளைக் காணலாம்.

அ. *ஹிஷாம் இப்னு ஆமீர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*உஹதுச் சண்டையின் போது முஸ்லிம்களில் ஷஹீதானவர்களும் காயமடைந்தவர்களும் இருந்தார்கள். அப்போது நாங்கள் ''இறைத்தூதர் அவர்களே! ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கப்ரு தோண்டுவது கஷ்டமாக இருக்கிறது. உங்கள் கட்டளை என்ன?'' என்று கேட்டோம். குழியை ஆழமாகவும், அழகாகவும் விசாலமாகவும் தோண்டுங்கள். ஒரு கப்ரில் இரண்டு பேர் மூன்று பேராக அடக்கம் செய்யுங்கள். குர் ஆனைக் கற்றவர்களை முதலில் அடக்கம் செய்யுங்கள்! என நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள்.*

இந்த நபிமொழியை அறிவிப்பவர்,

*''எனது தந்தை மூன்று பேருடன் முதலில் அடக்கம் செய்யப்பட்டார்கள். ஏனெனில் அவர் அதிகம் குர்ஆனைக் கற்றிருந்தார்'' என அறிவிக்கின்றார்.*

(அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத், பைஹகி)

ஆ. அன்ஸாரித் தோழர் ஒருவர் அறிவிக்கிறார்:

"ஒரு அன்ஸாரித் தோழரின் ஜனாஸா நல்லடக்கத்தில் இறைத்தூதருடன் நானும் சென்றேன். அப்போது நான் சிறுவனாக இருந்தேன். என் தந்தையுடன் சென்றேன். நபி (ஸல்) அவர்கள் கப்ரின் ஓரத்தில் இருந்து கொண்டார்கள். கப்ரு தோண்டுபவரை நோக்கி "தலைப்பக்கம் விசாலமாக்கு! கால்பக்கம் விசாலமாக்கு! எத்தனையோ இன்பங்கள் அவருக்குச் சுவர்க்கத்தில் இருக்கின்றன" என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

(அபூதாவூத், அஹ்மத், பைஹகி)

**95.** கப்ரில் அருகுக்குழி, ஆழக்குழி தோண்டுவது ஆகும். நபி (ஸல்) அவர்கள் காலமுதல் நடைபெறும் செயலாகவே இவை இருக்கின்றன. எனினும் அருகுக்குழி தோண்டிக்கொள்வதே சிறப்பாகும். இதற்கு ஆதாரமாக இரண்டு நபிமொழிகளைக் காணலாம்.

அ. அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

"நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது மதீனாவில் அருகுக்குழி தோண்டுபவர் ஒருவரும், ஆழக்குழி தோண்டுபவர் ஒருவரும் இருந்தார்கள். நபியவர்களுக்கு எந்தக் குழியை அமைப்பது என்று தோழர்கள் விவாதித்தபோது இருவருக்கும் செய்தியனுப்புவோம். யாரை முதலில் அல்லாஹ் அனுப்பி வைக்கிறானோ அவரைக் கொண்டே குழி அமைப்போம் எனத் தீர்மானித்து இருவருக்கும் செய்தியனுப்பினார்கள்.

அருகுக்குழி தோண்டுபவரே முதலில் வந்தார். எனவே கப்ரில் அருகுக்குழி அமைத்து நபி (ஸல்) அவர்களை நல்லடக்கம் செய்தார்கள்.

(இப்னுமாஜா, அஹ்மத், தஹாவீ)

ஆ. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"அருகுக்குழி எங்களுக்குரியது. ஆழக்குழி மற்றவர்களுக்குரியது" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா)

(அருகுக்குழி என்பது கற்பூமியில் கப்ரு தோண்டிய பின் அதன் ஒரு பக்கச் சுவரில் மையித்தை வைக்கக் கூடியதாக ஒரு குழி அமைப்பதாகும். கடினமான பூமிகளில்தான் இது சாத்தியமாகும். ஆழக்குழி என்பது கப்ரு தோண்டிய பின் அதனடிப்பாகத்தில் மையித்தை வைக்குமளவுக்கு ஒரு குழி அமைப்பதாகும். இது மணற்பாங்கான பூமியில் செய்து கொள்வது இலகுவாகும். மணற்பாங்கான கப்ருகளில் அருகுக்குழி அமைக்க முடியாது)

**96.** தேவையேற்படும் போது ஒரு கப்ரில் இரண்டு மையித்துக்களையோ அல்லது அதற்கதிகமாகவோ நல்ல டக்கம் செய்யலாம். இவ்வேளை அம்மையித்துக்களில் உள்ள சிறப்பு வாய்ந்தவர்களை முற்படுத்துவது அவசிய மாகும்.

இதற்கு ஆதாரமாகப் பல நபிமொழிகள் உள்ளன. 37ம் இலக்கச் சட்டத்திலும், 94ம் இலக்கச் சட்டத்திலும் அவற் றில் சில குறிக்கப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

**97.** கப்ரில் மையித்தை வைப்பதற்கு மையித்தின் நெருங்கிய உறவினரே தகுதியானவர்கள். அவர்கள் ஆண்க ளாகவே இருக்க வேண்டும். பெண் மையித்தாயினும் ஆண்கள்தான் இந்த வேலையைச் செய்தல் வேண்டும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. நபி (ஸல்) அவர்கள் காலத்திலிருந்து இதுவரை இவ் வாறுதான் நடந்து வருகிறது. (பெண்கள் கப்ருக்குள் இறங்கி மையித்தை வைத்தார்கள் என்ற சம்பவம் இதுவரை இல்லை) 99ம் இலக்கச் சட்டத்தில் இதற்குரிய நபி மொழியைப் பார்க்கலாம்.

2. ஆண்கள்தான் இதற்குத் தகுதியானவர்கள். பலசாலி கள். (பயங்கர மையித்துக்களைக் கண்டாலும் அஞ்சமாட் டார்கள்)

3. பெண்கள் கப்ருக்குள் இறங்கி இந்த வேலையைச் செய்யும் வேளையில் அவர்கள் ஆடைகள் விலகி அன்னிய ஆண்களின் கண்களுக்குத் தெரியலாம். இது குர்ஆன், ஹதீஸ் மூலம் தடுக்கப்பட்டதாகும்.

**98.** மையித்தைக் கப்ரில் வைப்பதற்குத் தகுதியானவர்கள் "மையித்தின் சொந்தக்காரராகவே இருக்க வேண்டும்" அல்லாஹ்வின் வேதக் கட்டளைப்பிரகாரம்

*இதன் பின்னரும், எவர்கள் ஈமான் கொண்டு, தம் ஊரைத் துறந்து, உங்களுடன் சேர்ந்து (மார்க்கத்திற்காகப்) போர் புரிகின்றார்களோ, அவர்களும் உங்களைச் சேர்ந்தவர்களே. இன்னும் அல்லாஹ்வின் வேத விதிப்படி உங்கள் உறவினர்களே ஒருவர் மற்றொருவருக்கு மிக நெருக்கமுடையவர்களும் ஆவார்கள் - நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.*

(அல் குர்ஆன்: 8:75)

என அல்லாஹ் பொதுப்படையாகக் கூறியபடி இது நடைபெற வேண்டும்.

(உரிமையாளர்கள் தரம் எப்படியெனில் மையித்தின் தகப்பன், பாட்டன், பூட்டன், இப்படியானவர்கள் முதலாம் இடத்தையும், மகன், பேரன் ஆகியோர் இரண்டாம் இடத்தையும், மையித்தின் கூடப்பிறந்த சகோதரர்கள் மூன்றாம் இடத்தையும், தகப்பனுக்குப் பிறந்த சகோதரர்கள் நான்காம் இடத்தையும், தாய் தந்தையுடன் பிறந்த மாமாமார், சாச்சாமார், பெரியப்பாமார் ஐந்தாம் இடத்தையும் பெறுகிறார்கள்.)

நெருங்கிய உறவினர்தான் மையித்தை நல்லடக்கம் செய்ய கப்ரில் இறங்க வேண்டும் என்பதற்கு இரண்டு நபிமொழிகளை மட்டும் இங்கு காணலாம்:

1. அலீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

 நான் நபி (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டினேன். மையித்துக்குரிய அடையாளங்கள் ஏதாவது உண்டா? என நான் கவனித்தேன். எதையுமே நான் காணமுடியவில்லை. உயிருடனிருக்கும்போது இருந்தவாறே மரணித்த பின்பும் மணமாகக் காணப்பட்டார்கள்.

 நானும் அப்பாஸ் அவர்களும் அவர் மகன் பழ்லு அவர்களும் நபியவர்களின் அடிமை ஸாலிஹ் அவர்களும் ஆக நான்கு பேர்கள் நபியவர்களின்

உடம்பைக் கப்ரில் வைத்தோம். அருகுக்குழி தோண்டப்பட்டு அதிலே தான் வைத்தோம். (சுடாத) பச்சைக் கற்களை வைத்து மூடினோம்.

(பைஹகி, ஹாகிம்)

2. அப்துர்ரஹ்மான் இப்னு அப்ஸா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னை ஸைனப் பின்து ஜஹ்ஸ் (ரழி) அவர்கள் இறந்தபோது உமர் (ரழி) அவர்கள் தொழுவித்தார்கள். நானும் தொழுகையில் கலந்து கொண்டேன். நான்கு முறை தக்பீர் கட்டினார்கள். அதன்பின் அப்போது உயிருடனிருந்த நபி (ஸல்) அவர்களின் மனைவியரிடம் இவரை நல்லடக்கம் செய்ய யார் கப்ருக்குள் இறங்க வேண்டும்? என்று கேட்டு அனுப்பினார்கள். தானே கப்ரில் இறங்க வேண்டுமென்ற அவாவும் உமர் (ரழி) அவர்களிடமிருந்தது.

''யார் அந்த மையித்தை உயிருடனிருக்கும்போது பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டனரோ அவர்கள்தான் கப்ருக்குள்ளும் இறங்க வேண்டும்'' என்று பதில் கூறி அனுப்பினார்கள். உண்மையே உரைத்தார்கள் என்று உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

(பைஹகி, தஹாவீ)

**99.** கணவன் தன் மனைவியைத் தானே கப்ரில் இறங்கி நல்லடக்கம் செய்வதற்கு அதிகாரம் பெறுகூது கூடும்.

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

மரண நோய் ஆரம்பித்த தினத்தன்று இறைத்தூதர் அவர்கள் என் வீட்டுக்கு வந்தார்கள். அப்போது நான் என் தலையே (தலைவேதனையே!) எனக் கூறினேன். நான் உயிருடனிருக்கும் பொழுது இது ஏற்படுவதை விரும்பினேன். அப்போது நானே உன்னைக் குளிப்பாட்டி கபனிட்டு நல்லடக்கம் செய்து விடுவேன் என்று நபியவர்கள் கூறினார்கள். ''ஏனைய மனைவிகளில் ஒருவரிடம் மாப்பிள்ளையாக இருப்பதை எனக்கு உரோசப் படுத்துகிறீர்கள்'' என்று கூறினேன். ''எனக்கும் தலைவேதனை பீடித்துவிட்டது. (இதிலிருந்து மீளமாட்டேன் போலிருக்கிறது) உனது தகப்பனையும்,

*சகோதரனையும் கூட்டி வரச்சொல். நான் அபூபக்கருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். எனக்குப் பின்னால் அதிகாரம் பெற ஏனையவர்கள் முயலக்கூடும். அல்லாஹ்வும், விசுவாசிகளும் அபூபக்கரையே விரும்புவார்கள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

(சில வசன வித்தியாசங்களுடன் புகாரி, முஸ்லிம் அஹ்மத், தாரமீ, நஸயீ)

**100.** கப்ரில் இறங்கி மையித்தை நல்லடக்கம் செய்பவர் அன்றிரவு மனைவியுடன் உடலுறவு வைத்துக் கொள்ளாதவராக இருப்பது நிபந்தனையாகும். மையித்தின் நெருங்கிய உறவினர் அன்றிரவு உடலுறவு வைத்திருந்தால் அவரைவிட அன்னியர் இந்த வேலைக்குச் சிறப்புடைய வராவர். இந்த நிபந்தனை நிறைவேற்றுவதற்கு அதுதான் வழியாகும்.

*அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*''நபி (ஸல்) அவர்களின் மகள் ஒருவரின் நல்லடக்கத்தின் போது நாங்களும் இருந்தோம். நபி (ஸல்) அவர்கள் கப்ரின் அருகே அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்களுடைய இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. நபியவர்கள் எங்களை நோக்கி யாராவது இன்றிரவு தன் மனைவியுடன் உடலுறவு வைக்காதவர் உண்டா? எனக் கேட்டார்.*

*அபூதல்ஹா (ரழி) அவர்கள் ''நான் இருக்கிறேன்'' என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் அவரைக் கப்ரில் இறங்கும்! என்று கூறினார்கள். எனவே அவர் கப்ரில் இறங்கி மையித்தை நல்லடக்கம் செய்தார்கள்.*

(புகாரி, அஹ்மத், பைஹகி, தஹாவி, ஹாகிம்)

(இது தொடர்பாக மூல ஆசிரியர் ஷைகு நாஸிருத்தீன் அல்பானீ அவர்கள் தந்துள்ள குறிப்பை இங்கு தருகிறோம்)

இந்த நபிமொழியில் உள்ளவாறு அன்றிரவு மனைவி யுடன் உடலுறவு கொள்ளாதவர்தான் கப்ரில் இறங்கு வதற்குத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

இந்த நபிமொழி எவ்விதக் குறைபாடுமில்லாத வலுவான நபிமொழியாகும். இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் நான் பார்வையிட்ட பல மத்ஹபு சட்ட (பிக்ஹு) நூற்களில் இந்த விஷயம் காணப்படாததேயாகும். அவர்கள் இதனை ஆகும் என்றோ ஆகாது என்றோ எதனையும் குறிப்பிடவில்லை.

ஏனோ தற்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும் இந்த நபிமொழி கண்ணில்படவில்லை. நபிமொழிக்கு முதலிடமும் முக்கியத்துவமும் அளிக்காத தற்போதைய மார்க்கச் சட்ட நிபுணர்களின் செயல் மிகவும் வேதனைக்குரியதாகும்.

மகளின் மையித்தைக் கப்ரில் வைப்பதற்கு முதல் உரிமையாளராயிருந்த இறைத்தூதர் அவர்கள் கப்ரின் ஓரத்தில் அமர்ந்திருந்தார்கள். ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் இறங்கவில்லை. அருகிலிருந்த இன்னொரு மகளின் கணவரான அலீ (ரழி) அவர்களையும் இறங்கச் சொல்லவில்லை. இன்றிரவு மனைவியுடன் உடலுறவு கொள்ளாதவருண்டா? என்றுதான் கேட்டார்கள். அபூதல்ஹா (ரழி) அவர்கள் முன்வந்தார்கள். அவர் அன்னியராக இருந்தும் தன் மகளைக் கப்ரில் வைப்பதற்கு அனுமதியளித்துள்ளார்கள். கப்ரில் இறங்கும்படி கட்டளையிட்டார்கள்.

சில ஊர்களில் மையித்தைக் கப்ரில் வைப்பதற்கு சிலர் நிரந்தரமாகவே இருக்கின்றனர். அவர்கள்தான் கப்ரில் இறங்க வேண்டும். சொந்தக்காரர் யாவரும் விலகி நின்று வேடிக்கை பார்க்க வேண்டும். இது எந்த ஷரீயத் சட்டமோ தெரியாது. நிரந்தரமாக இறங்குபவர்கள் யாவரும் அன்றிரவு மனைவியுடன் உடலுறவு வைத்திருந்தாலும் சரியே! அவர்கள்தான் அந்த வேலையைச் செய்ய வேண்டும். நபிமொழி எப்படி உதாசீனம் செய்யப்படுகிறது பார்த்தீர்களா?

எனவே, மேற்கண்ட நம்பத்தகுந்த (ஸஹீஹான) நபிமொழிகளை (ஐந்து நபி மொழி தொகுப்புகளின் வாயிலாக) அறிந்த நாம் நம் உயிரினும் மேலான நபி (ஸல்) அவர்களின் உத்திரவுக்கிணங்கி, இனி நபிவழியில் மையித்தை நல்லடக்கம் செய்வோமாக.

**101.** கப்ரின் கால் பக்கத்திலிருந்துதான் மையித்தை கப்ருக்குள் எடுத்து வைக்க வேண்டும். (மையித்தை அடக்கும் போது மையித்தின் கால் எப்பக்கம் இருக்கிறதோ அதுதான் கப்ரின் கால் பக்கமாகும்).

*தாபியீன்களில் ஒருவரான அபூஇஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*ஹாரித் என்பவர் மரணிக்கும்போது தன்னை அப்துல்லாஹ் இப்னுயஸீத் அவர்கள் தான் தொழுவிக்க வேண்டும் என வஸிய்யத் செய்து விட்டு மரணித்து விட்டார். அப்துல்லாஹ் இப்னு யஸீத் அவர்கள் அம்மையித்தைத் தொழுவித்த பின் அதனை கப்ரின் கால் பக்கத்திலிருந்து எடுத்துக் கப்ரில் வைத்தார். இதுதான் நபிவழியாகும் எனவும் கூறினார்.*

(அபூதாவூத், பைஹகி, இப்னுஅபீஷைபா)

*தாபியீன்களில் சிறந்த அறிஞர்களில் ஒருவராகிய இப்னு ஸீரீன் அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*நான் அனஸ் (ரழி) அவர்களுடன் ஒரு ஜனாஸாவில் கலந்து கொண்டேன். அப்போது அம்மையித்தை கப்ரின் கால் பக்கத்திலிருந்து எடுக்கும்படி அனஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள்.*

(அஹ்மத், இப்னு அபீஷைபா)

**102.** மையித்தைக் கப்ரில் வைக்கும்போது மையித்தின் வலது பக்கம் (சாய்வாக) வைக்க வேண்டும். மையித்தின் முகம் கிப்லாவை முன்னோக்கியதாக இருக்க வேண்டும். தலையும் இரு கால்களும் கிப்லாவுக்கு வலப்பக்கமும் இடப் பக்கமும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறுதான் நபி (ஸல்) அவர்கள் காலம் முதல் இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பூமியிலுள்ள எல்லா முஸ்லிம்களின் கப்ருகளும் இவ்வாறுதான் இருக்கின்றன.

**103.** மையித்தைக் கப்ரில் வைக்கும் போது

*''பிஸ்மில்லாஹி அலா சுன்னதி ரஸூலில்லாஹ்'' என்றோ அல்லது ''பிஸ்மில்லாஹி அலா மில்லத்தி ரஸூலில்லாஹ்''*

என்றோ அல்லது ''பிஸ்மில்லாஹ் வபில்லாஹ் வஅலா மில்லத்தி ரஸூலில்லாஹ்'' என்றோ கூற வேண்டும். இவையாவும் நபி (ஸல்) அவர்களின் கட்டளையாகும்.

(அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, ஹாகிம், பைஹகி)

**104.** மையித்தை நல்லடக்கம் செய்து முடியவுடன் அடக்கஸ்தலத்திற்கு வந்திருப்பவர்கள் யாவரும் இரு கைகளினாலும் மூன்று முறை மண்ணை அள்ளிப்போடுவது நபிவழியாகும்.

(முஸ்தஹப்பு)

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்காகத் தொழுவித்தார்கள். அதன்பின் கப்ரடியில் மையித்தின் தலைப்பக்கத்தில் மூன்று முறை மண் அள்ளிப் போட்டார்கள்.

(இப்னுமாஜா)

**105.** மையித்தை நல்லடக்கம் செய்து முடித்தபின் சில வேலைகள் செய்வது சுன்னத்தாகும்.

1. பூமி மட்டத்திலிருந்து ஒரு சாண் அளவு கப்ரை உயர்த்த வேண்டும். பூமி மட்டத்துடன் சமனாக்கக் கூடாது. ஒரு மையித் அடக்கப்பட்டுள்ளது என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்வதற்காக இவ்வாறு செய்தல் வேண்டும்.

ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்குக் கப்ரில் அருகுக்குழி தோண்டி அதில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். (சுடாத) பச்சைக் கற்களினால் அதனை அடைக்கப்பட்டது. பின்னர் பூமி மட்டத்தில் இருந்து ஒரு சாண் அளவுக்கு அவருடைய கப்ரு உயர்த்தி வைக்கப்பட்டது.

(பைஹகி, இப்னுஹிப்பான்)

2. கப்ரின் மேற்பாகம் பூமி மட்டத்திலிருந்து ஒரு சாண் அளவு கப்ரின் நீளத்திற்குக் கோபுரம் மாதிரி மண்ணினால் அமைக்கப்படல் வேண்டும்.

தாபியீன்களில் ஒருவரான சுபியானுத்தம்மார் அறிவிக்கிறார்கள்:

நான் நபி (ஸல்) அவர்களுடைய கப்ரையும், அபூபக்கர் (ரழி) அவர்களுடைய கப்ரையும், உமர் (ரழி) அவர்களுடைய கப்ரையும் பூமி மட்டத்தில் இருந்து ஒரு சாண் அளவு கோபுரம் மாதிரி மண்ணினால் உயர்த்தப்பட்டிருப்பதைக் கண்டேன்.

(புகாரி, பைஹகி, இப்னுஅபீஷைபா)

3. மையித்தை அடக்கம் செய்து முடித்தபின் ஒரு கல் வைத்து அது போன்றவற்றை அடையாளத்திற்கு வைத்துக் கொள்ளலாம். தன் இனத்தவர்களை அதன் பக்கத்தில் அடக்கம் செய்ய இது உதவும்.

முத்தலிப் இப்னு அபீவதாஆ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உதுமான் இப்னு மஸ்ஊது (ரழி) அவர்கள் மரணமடைந்தபோது நபி (ஸல்) அவர்கள் நல்லடக்கத்தில் கலந்து கொண்டார்கள். அடக்கம் செய்து முடிந்ததும் ஒருவரிடம் ஒரு கல்லை எடுத்து வரும்படி கட்டளை யிட்டார்கள். அவரால் அக்கல்லைச் சுமந்து வர முடியவில்லை. இறைத்தூதர் அவர்கள் சென்று தன் கைச்சட்டையை ஒதுக்கி விட்டு தூக்கி வந்தார்கள். அப்பொழுது அவர்கள் கையின் மேற்பகுதியிலுள்ள வெண்மை விளங்கக் கூடியதாக இருந்தது.

தூக்கி வந்த கல்லை அக்கப்ரின் தலைப்பக்கம் வைத்தார்கள். ''என் அன்புச் சகோதரனின் கப்ரை அடையாளம் காண்பதற்காகவும் எனது குடும்பத்தில் யாராவது மரணித்தால் இவருக்குப் பக்கத்தில் நல்லடக்கம் செய்வதற்குமே இவ்வாறு செய்தேன்'' எனக் கூறினார்கள்.

(அபூதாவூத், பைஹகி)

4. தல்கீன் என்ற பெயரில் இன்று பரவலாக நடை ..றும் விஷயம் கூடாது. இதைப்பற்றி வந்துள்ள நபி ..ாழி சரியானதல்ல. எனினும் நல்லடக்கத்தில் கலந்து ..காண்டவர்கள் அனைவரும் அடக்கஸ்தலத்தில் நின்று அம்மையித்திற்காகப் பிரார்த்திக்க வேண்டும். மையித் திற்குக் கலிமாவைத் துரிதப்படுத்தும்படியும் அதாவது கப்ரில் விசாரணையின்போது தூய கலிமாவைத் தடை யின்றி, தயக்கமின்றி கூறுகின்ற சக்தியையும் உறுதியையும்

கொடுக்கும்படியும் பிழை பொறுக்கும்படியும் அல்லாஹ் விடம் பிரார்த்திக்கும்படி தலைவர் கூறவேண்டும். (ஒருவர் துஆ ஓத மற்றவர்கள் ஆமீன் கூறுவதல்ல) கலந்து கொண்டவர்கள் அனைவரும் தூய உள்ளத்துடன் (தெரிந்த மொழியில்) பிரார்த்திக்க வேண்டும். அன்றி பூமியின் மேற்பரப்பிலிருந்து கலிமாவைச் சொல்லிக் கொடுக்கக் கூடாது. அது பயனுமளிக்காது.

*உதுமான் இப்னு அஃப்பான் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*ஒரு மையித்தை அடக்கம் செய்தபின் நபி (ஸல்) அவர்கள் அடக்கஸ்தலத்தில் நின்று "உங்கள் சகோதரனுக்காகப் பிழை பொறுக்கப் பிரார்த்தியுங்கள். கலிமாவை உறுதிப்படுத்தப் பிரார்த்தியுங்கள். ஏனெனில் இப்போது அவர் கேள்வி கேட்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்" எனக் கூறினார்கள்.*

(அபூதாவூத், பைஹகி, ஹாகிம்)

**106.** ஒரு மையித்தை அடக்கம் செய்து கொண் டிருக்கும் போது (மற்றவர்கள்) உட்கார்ந்து மரணத்தை நினைவு கூர்வது ஆகும்.

*பராஉ இப்னு ஆஸிப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*"நாங்கள் ஒரு அன்ஸாரித் தோழரின் ஜனாஸாவில் நபி (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டோம். அடக்கஸ் தலத்திற்குச் சென்று மையித்தை அடக்கம் செய்யும்போது நபி (ஸல்) அவர்கள் கிப்லாவை முன்னோக்கியவர்களாக உட்கார்ந்தார்கள். அவரைச் சூழ்ந்து நாங்களும் உட்கார்ந்து கொண்டோம். எங்கள் தலைகளில் பறவைகள் உட்கார்ந்திருந்தால் எப்படி ஆடாமல் அசையாமல் இருப்போமோ அவ்வாறு உட்கார்ந்திருந்தோம்.*

*இறைத்தூதரின் கையில் ஒரு குச்சி இருந்தது. அதைப் பூமியில் குத்திக் கொண்டிருந்தார்கள். வானத்தையும் பூமியையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்வை மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் மூன்று மு[illegible]யதார்கள். "அல்லாஹ்விடம் கப்ரின் வேதனையிலிருந்து பாதுகாப்புத் தேடுங்கள்" என்று இரண்டு அல்லது மூன்று முறை கூறினார்கள். அதன்பின் "யாஅல்லாஹ்! கப்ரின்*

வேதனையிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்'' என்று மூன்று முறை கூறினார்கள். அதன்பின் இவ்வாறு கூறினார்கள்:

''ஒரு நம்பிக்கையுள்ள அடியான் இம்மையிலிருந்து மறுமையை நோக்கிப் போகும் போது சூரியனைப் போன்று பிரகாசமுள்ள வெண்மை முகத்துடைய வானவர்கள் வானிலிருந்து இறங்குவார்கள். அவர்களிடம் சுவர்க்கத்துணியிலான கபன் துணியும், சுவர்க்கத்துக் கஸ்தூரியும் இருக்கும். அவ்வடியானின் பார்வைக்கு எட்டும் தூரத்தில் வந்து அந்த வானவர்கள் அமர்ந்து கொள்வார்கள். அதன்பின் உயிரைக் கைப்பற்றும் வானவர் 'மலக்குல் மவ்த்' (அலை) வந்து அவ்வடியானின் தலைப்பக்கம் உட்கார்ந்து கொள்வார். 'நல்லாத்மாவே! (அல்லது அமைதியுடைய ஆத்மாவே) அல்லாஹ்வின் மன்னிப்பிலும் பொருத்தத்திலும் வெளியேறுவாயாக!' என்று மலக்குல் மவ்த் (அலை) கூறுவார்கள்.

உடனே அவ்வடியானின் உயிர் தண்ணீர்ப் பாத்திரத்தில் இருந்து தண்ணீர் சொட்டு விழுவதைப் போன்று (எவ்வித கஷ்டமுமின்றி) வெளியேறிவிடும். அதனை அவர் எடுத்துக் கொள்வார். (இன்னொரு செய்தியின்படி, அவ்வடியானின் உயிர் பிரிந்தவுடன் வானத்திற்கும் பூமிக்குமிடையிலுள்ள வானவர்களும் வானத்திலுள்ள எல்லா வானவர்களும் அவ்வாத்மாவுக்குப் பிரார்த்தனை புரிவார்கள். அத்தனை வானர்களும் தங்களுக்கு முன்னால் அவ்வாத்மாவைக் கொண்டு செல்லும்படி அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள்)

மலக்குல் மவ்த் (அலை) அவர்கள் கையில் உயிர் கிடைத்தவுடன் கணமும் தாமதியாது மணங்கமழும் அந்தச் சுவர்க்கத்துக் கபனில் அதனைப் பத்திரப்படுத்தி வைப்பார்கள். இதனையே அல்லாஹ் குர்ஆனில்...

**அவன் தன் அடியார்களை அடக்கியாளுபவனாக இருக்கிறான்; அன்றியும், உங்கள் மீது பாதுகாப்பாளர்களையும் அனுப்புகிறான்; உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிடுமானால், நம் வானவர்கள் அவர் ஆத்மாவை எடுத்துக் கொள்கிறார்கள் - அவர்கள் (தம் கடமையில்) தவறுவதில்லை.**

(அல் குர்ஆன்: 6:61)

என்று எடுத்துக் கூறுகின்றான். அதன்பின் பூமியில்

இருந்ததைவிட அதிக வாசனையுடன் அவ்வுயிரை வானுக்கு எடுத்துச் செல்வார்கள். அதனைக் காணும் வானவர்கள் எல்லாம் இவ்வுயரிய வாசனையுடைய ஆத்மா யாருடையது? எனக் கேட்பார்கள். ''இன்னாருடைய மகன் இன்னார் என்று உலகத்தில் அவனுக்கு வழங்கப்பட்ட அழகிய பெயரைக் கூறுவார்கள்''.

முதல் வானத்திற்குச் சென்றவுடன் வழி திறக்கும்படி வானவர்கள் கேட்பார்கள். அவர்களுக்கு வழி திறக்கப்படும். இவ்வாறே ஒவ்வொரு வானத்திலும் நடைபெறும். ஏழாவது வானத்திற்கு அந்த ஆத்மா சென்றதும் ''எனது நல்லடியானின் பெயரை 'இல்லிய்யூன்' (நன்மை செய்தோரின் பட்டியல்) எனும் ஏட்டில் எழுதுங்கள்'' என்று அல்லாஹ் கூறுவான்.

**''இல்லிய்யூன்'' என்பது என்னவென்று உமக்கு எது அறிவிக்கும்?**

**(அல்லாஹ்விடம்) நெருங்கிய (கண்ணியம் மிக்க வான)வர்கள் அதை பார்ப்பார்கள்.**

(அல் குர்ஆன்: 83:19,21)

அவ்வடியானின் பெயர் அதில் பதியப்பட்டவுடன் அந்த ஆத்மாவைப் பூமிக்குக் கொண்டு செல்லுங்கள் (ஏனெனில் என் வாக்கு நிறைவேற்றப்பட வேண்டும்.) ''பூமியிலிருந்து படைத்தோம். பூமிக்கே மீளச் செய்வோம். பூமியிலிருந்தே மீண்டும் எழுப்புவோம்!'' இதன் பிரகாரம் அந்த ஆத்மா கொண்டு வரப்பட்டு அவ்வடியானின் உடலில் சேர்க்கப்படும். அப்பொழுது அவ்வடியான் கப்ரில் நல்லடக்கம் செய்யப்பட்டு எல்லோரும் வீடுகளுக்குத் திரும்பும் காலடியோசை முடிந்தபின் இரு பயங்கரமான வானவர்கள் வந்து ''உனது அதிபதி யார்?'' எனக் கேட்பார்கள்.

அவ்வடியான் பதற்றப்படாமல் ''எனது அதிபதி அல்லாஹ்தான்'' எனக் கூறுவான். மீண்டும் அந்த வானவர்கள் ''உனது மார்க்கம் என்ன?'' என்று கேட்பார்கள். எனது மார்க்கம் ''இஸ்லாம்'' எனக் கூறுவான். உங்களுக்கு அனுப்பப்பட்ட இந்த மனிதர் யார்? என மீண்டும் கேட்பார்கள். ''அவர் அல்லாஹ்வின் தூதராவார்'' எனப் பதில் கூறுவான். (இதைப்பற்றி) உனது அறிவு (விளக்கம்) யாது எப்படி? எனக்கேட்பார்கள்.

அதற்கு அவன் அல்லாஹ்வின் வேதத்தை (குர்ஆனை) படித்தேன். அல்லாஹ்வை விசுவாசித்தேன். அவனை உண்மைப்படுத்தினேன்'' என பதிலளிப்பான். (மீண்டும் அவனை பயமுறுத்தி) உன் அதிபதி யார்? உனது மார்க்கம் என்ன? உனது நபி யார்? என்று கேட்பார்கள். இதுதான் ஒரு உண்மை விசுவாசிக்கு ஏற்படும் கடைசிச் சோதனையாகும். எனினும்

**எவர்கள் ஈமான் கொள்கிறார்களோ அவர்களை இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதிபடுத்துகின்றான் - இன்னும், அநியாயக்காரர்களை அல்லாஹ் வழி தவறச் செய்து விடுகிறான்; மேலும் அல்லாஹ், தான் எதை நாடுகின்றானோ அதைச் செய்கின்றான்.**

(அல் குர்ஆன் 14:27)

எனும் அல்லாஹ்வின் கூற்றுப்படி எனது அதிபதி அல்லாஹ்; எனது மார்க்கம் இஸ்லாம்; எனது நபி முஹம்மத் (ஸல்) என்று (அச்சப்படாது) பதிலளிப்பான்.

இதன்பின் வானத்தின் பக்கமிருந்து ''எனது அடியான் உண்மையை உரைத்தான். சுவர்க்கத்து விரிப்புகளை அவனுக்கு விரியுங்கள். சுவர்க்கத்து ஆடைகளை அணிவியுங்கள்! சுவர்க்கத்தின்பால் வாசலை அவனுக்குத் திறந்து விடுங்கள்!'' என ஒரு சப்தம் வரும். சுவர்க்கத்து வாடையை அவ்வடியான் அடைவான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவனது கப்ரு விசாலமாக்கப்படும்.

உடனே அழகான ஆடை, அழகான முகத்துடன் நறுமணம் வீச ஒரு மனிதர் அவ்வடியானிடம் வருவார். 'அல்லாஹ்வின் பொருத்தமும் நிலையான சுகங்களின் இருப்பிடமான சுவர்க்கத்தையும் பெற வாழ்த்துகிறேன். இதுதான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாளாகும்'' எனக் கூறுவார். உங்களுக்கும் அல்லாஹ்வின் நல்வாழ்த்துக் கிடைப்பதாக! நீங்கள் யார்? உங்களின் அழகிய முகமே நற்செய்திகளைத் தருகின்றன என்று கப்ரிலுள்ள அடியான் கேட்பார். ''நான்தான் உங்கள் நற்செயல்களாகும். அல்லாஹ்வுக்கு வழிபட்டு நற்செயல்கள் புரிவதில் தீவிரமும் பாவங்களைச் செய்வதில் தாமதமும் காட்டிக் கொண்டிருந்தீர்கள். அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி தருவானாக!'' என்று அந்த அழகிய முகத்துக்குரியவர்

கூறுவார்.

அதன்பின் சுவனத்து வாசலும் நரகத்து வாசலும் திறக்கப்படும். நீ அல்லாஹ்வுக்கு வழிபடாது இருந்திருந்தால் இதுதான் நீ செல்லும் பாதை என்று நரகத்து வாசலைக் காண்பித்து விட்டு "அல்லாஹ் உனக்கு இதனை மாற்றியுள்ளான்" என சுவனத்து வாசல் காண்பிக்கப்படும். சுவனத்தின் சுக போகங்களைக் கண்டதும் அவ்வடியான், "யாஅல்லாஹ்! மறுமையை சீக்கிரம் உண்டாக்குவாயாக!" எனக் கூறுவான். "அமைதியாக இருப்பாயாக" என்று அவனுக்குக் கூறப்படும்.

அல்லாஹ்வை நிராகரித்த ஒருவன் (அல்லது கெட்டவன்) இம்மையிலிருந்து மறுமையை நோக்கிப் போகும் போது கறுப்பு முகத்துடன் மிகவும் கடுகடுப்பான வானவர்கள் வானிலிருந்து இறங்கி அவனிடம் வருவார்கள். அவர்களிடம் நெருப்பினாலான ஆடைகளிருக்கும். அவன் பார்வை எட்டும் தூரத்தில் அமர்ந்து கொள்வார்கள். அதன்பின் மலக்குல் மவுத் (அலை) வந்து அவனது தலைப்பக்கம் அமர்ந்து கொண்டு "கெட்ட ஆத்மாவே! அல்லாஹ்வின் வெறுப்பின்பால், கோபத்தின்பால் செல்வாயாக!" என்று கூறுவார்கள்.

ஈரமான கம்பளிப் புடவையை முள்ளில் போட்டு இழுப்பது போன்ற வேதனையுடன் அவன் உயிர் பிடுங்கப்படும். அவனுடலிலுள்ள நரம்புகளும் மூட்டுகளும் தெறித்து விடுவது போன்று அவனுக்குத் துன்பம் ஏற்படும். வானம் பூமிக்கிடையிலுள்ள வானத்திலுள்ள வானவர்களும் அவனைச் சபித்துக் கொண்டேயிருப்பார்கள். வானத்து வாசல்களெல்லாம் மூடப்பட்டு அங்குள்ள வானவர்கள் எல்லோரும் அவன் உயிர் தங்கள் பக்கம் வந்து விடாதபடி பாதுகாப்புத் தேடி அல்லாஹ்வைப் பிரார்த்திப்பார்கள்.

அவன் உயிர் பிடுங்கப்பட்டவுடன் இமைப்பொழுதும் தாமதமில்லாது நெருப்பு ஆடையில் வைக்கப்படும். பூமியில் செத்த பிணங்கள் தரும் நாற்றத்தை விடக் கடுமையான நாற்றத்தை அவ்வுயிர் கொடுத்துக் கொண்டிருக்கும். வானத்திற்கும் பூமிக்கும் இடையிலுள்ள வானவர்கள் "இந்தக் கெட்ட வாடையுடைய உயிர் யாருடையது?" என வினவுவார்கள். இன்னாருடைய மகன், இன்னாருடையது என அவ்வுயிரை எடுத்துச் செல்லும் வானவர்கள்

கூறுவார்கள். வானத்து வாசலை அடைந்ததும் கதவைத் திறக்கும்படி வானவர்கள் கூறுவார்கள். அவ்வுயிருக்கு வாசல் திறக்கப்பட மாட்டா.

**எவர்கள் நம் வசனங்களை பொய்ப்பித்து இன்னும் (அவற்றைப் புறக்கணித்து) பெருமையடித்தார்களோ நிச்சயமாக அவர்களுக்கு வானத்தின் (அருள்) வாயில்கள் திறக்கப்படமாட்டா - மேலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவனபதியில் நுழைய மாட்டார்கள் - இவ்வாறே குற்றம் செய்பவர்களுக்குக் கூலி கொடுப்போம்.**

(அல் குர்ஆன் 7:40)

என்ற குர்ஆன் வசனத்தை நபியவர்கள் இந்த இடத்தில் ஓதிக் காட்டினார்கள்.

அதன்பின் இவனுடைய பெயரை பாவிகளின் பெயர்களை பதியும் "ஸிஜ்ஜீன்" என்ற ஏட்டில் எழுதிவிடுங்கள். பூமியின் அடிவாரத்திற்கு அந்த உயிரை எடுத்துச் செல்லுங்கள். ஏனெனில் பூமியிலிருந்தே உங்களைப் படைத்தோம். பூமியின் பக்கமே மீளச்செய்வோம். (அடக்கம் செய்வோம்) அதிலிருந்தே மீண்டும் (மறுமையின் விசாரணைக்காக) எழுப்புவோம் என்று வாக்களித்துள்ளேன் என அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உத்தரவு வரும்.

அச்சடலத்தைப் புதைத்தவுடன் அச்சடலத்திற்கு அவ்வுயிர் திருப்பப்படும். புதைத்தவர்களின் கடைசிச் செருப்புச் சத்தம் கேட்டு முடிந்தபின் இரு பயங்கரமான வானவர்கள் அவனிடம் வருவார்கள். அவனை அதட்டி உட்கார வைப்பார்கள். பின்பு உனது 'அதிபதி யார்?' எனக் கேட்பார்கள். "ஹா! ஹா! எனக்குத் தெரியாது" என்று அம்மனிதன் கூறுவான். "உனது மார்க்கம் யாது?" எனக் கேட்பார்கள். "ஹா! ஹா! எனக்குத் தெரியாது" எனக் கூறுவான். உங்களுக்காக அனுப்பப்பட்ட இம்முஹம்மதைப் பற்றி என்ன கூறுகிறாய்? எனக் கேட்பார்கள். "ஹா! ஹா! எனக்குத் தெரியாது. பலர் அவரைப் பற்றி கூறக் கேட்டுள்ளேன்" எனக் கூறுவான். "உனக்கு எதுவும் தெரியாது. (குர்ஆனை) படித்ததுமில்லை" எனக் கூறப்படும். அப்போது அவன் பொய்யுரைக்கிறான். நரகத்து வாசலைத் திறந்து விடுங்கள்! என்று வானத்தில் இருந்து ஒருவர் கூறுவார். எனவே நரகத்து வெப்பமும், நச்சுத்

தன்மையும் அவனை வந்தடையும். இரு விலா எலும்புகளும் பின்னிக் கொள்ளக் கூடியதாக கப்ரு அவனை நெருக்கும்.

அதன் பின் முகம் அவலட்சணமானதாகவும், ஆடை அருவருப்பானதாகவும், கெட்ட நாற்றத்துடனும் ஒருவர் அவன் முன் தோன்றுவார். "நீ வெறுக்கக்கூடிய நிலை (என்றென்றும்) உண்டாவதாக! இதுதான் உனக்கு வாக்களிக்கப்பட்ட தினமாகும்!" எனக் கூறுவார். "உனக்கும் தீங்கு ஏற்படுவதாக! உன் முகத்தைப் பார்த்தாலே துன்பங்களைத் தருபவராகத் தெரிகிறீர். நீர் யார்? எனக் கேட்பான். "நான் உனது கெட்ட செயல்களாவேன். அல்லாஹ்வுக்கு வழிபடுவதற்குத் தாமதமும் கெட்ட செயல்களுக்குத் தீவிரமும் காட்டி வாழ்ந்தாய்! உனக்குத் துன்பங்களையே அல்லாஹ் தருவானாக! எனக் கூறுவார்.

பிறகு குருடு, செவிடு, ஊமையாகிய ஒருவர் அவனுக்கு பொறுப்பாக்கப்படுவார். அவர் கையில் ஒரு இரும்புத்தடி இருக்கும். அத்தடியினால் ஒரு மலையில் அடித்தால் அம்மலை மணலாகி விடும். அவனுக்கு அவர் அத்தடியினால் ஒரு அடி கொடுப்பார். அந்த அடிபட்டவுடன் அவன் (மண்ணோடு) மண்ணாக உருத் தெரியாமலாகி விடுவான். அல்லாஹ் அவனுக்கு மீண்டும் பழைய உருவத்தை அளிப்பான். மீண்டும் அவனுக்கு அடி விழும். அவன் அலறுவான். அவனுடைய அலறலை மனிதர்கள், ஜின்கள் தவிர ஏனைய ஜீவராசிகள் யாவும் கேட்கும். இதனைத் தொடர்ந்து அவனுக்கு நரகவாசல் திறக்கப்பட்டு நரக விரிப்பில் வைக்கப்படுவான். 'அதிபதியே! மறுமையை உண்டாக்காதிருப்பாயாக!' எனக் கூறுவான்.

(இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூறி முடித்தார்கள்)

(அபூதாவூத். ஹாகிம். நஸயீ. தயாலிஸி. இப்னுமாஜா. அஹ்மத் ஆகியோர்களின் தொகுப்பு)

**107.** குளிப்பாட்டுவதற்கு முன் அடக்கம் செய்யப் படுதல், கபனிடாது அடக்கம் செய்யப்படுதல் போன்ற சரியான காரணங்களுக்காக அடக்கம் செய்யப்பட்ட மையித்தை தோண்டி எடுத்து இவற்றை நிறைவேற்றிப் பின் அடக்கம் செய்வது ஆகும்.

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''கப்ருக் குழிக்குள் அப்துல்லாஹ் இப்னு உபையி அவர்களை வைத்த பின் நபி (ஸல்) அவர்கள் அங்கு வந்து அவரைக் கப்ரிலிருந்து வெளியே எடுத்துத் தரும்படி கேட்டார்கள். வெளியே எடுத்த பின் அவரைத் தங்கள் தொடைகளின் மீது வைத்துக் கொண்டு அவரின் மீது தங்களது உமிழ்நீரைத் தடவினார்கள். பின்னர் தாங்கள் அணிந்திருந்த சட்டையை அவருக்கு அணிவித்தார்கள். தொழுகை நடத்தினார்கள் எனவும் ஜாபிர் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் எல்லாம் அறிந்தவன்.

(புகாரி, முஸ்லிம், நஸயீ, அஹ்மத்,பைஹகி)

முனாபிக்குகளின் (நயவஞ்சகர்களின்) தலைவராக இருந்த இந்த அப்துல்லாஹ் இப்னு உபையி அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு மதிப்பளித்தது ஏற்படவிருந்த பெரும் பிளவை அகற்றுவதற்கேயாகும். இச்சம்பவம்

**அவர்களில் யாராவது ஒருவர் இறந்து விட்டால் அவருக்காக நீர் ஒருக்காலும் (ஜனாஸா) தொழுகை தொழவேண்டாம்; இன்னும் அவர் கப்ரில் (பிரார்த்தனைக்காக) நிற்க வேண்டாம்;**

(அல் குர்ஆன்: 9:84)

என்ற குர்ஆன் வசனம் இறங்குவதற்கு முன் ஏற்பட்டதாகும்.

**108.** உயிருடனிருக்கும்போதே தனக்குரிய கப்ரைத் தோண்டிக் கொள்வது விரும்பத்தக்கதல்ல. நபி (ஸல்) அவர்களோ, நபித் தோழர்களோ செய்யாத வேலையாகும். ஒருவனுக்குத் தான் எந்த இடத்தில் (எப்போது) மரணிப்போம் என்பது தெரியாத விஷயமாகும். மரணத்திற்காகத் தயார் செய்து கொள்ள வேண்டும் என நினைப்பவன் நற்செயல்களைச் செய்வதன் மூலம் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்களின் 'இக்தியாராத்துல் இல்மிய்யா' என்ற நூலில் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

# 17. இறந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுதல்

**109.** இறந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுதல் மார்க்கக் கடமைகளிலுள்ளதாகும். மரணித்தவருக்காகப் பிரார்த்திப்பதும், மரணித்தவரின் குடும்பத்தினருக்கு பொறுமையைக் கொண்டு அறிவுறுத்துவதும் இதில் அடங்கும். இதற்குரிய இரண்டு நபிமொழிகளைக் காண்போம்.

அ) குர்ரத்துல் முஸ்னீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

*நபி (ஸல்) அவர்கள் எங்காவது உட்கார்ந்து விட்டால் அவர்களைச் சூழ சில தோழர்களும் உட்கார்ந்து விடுவார்கள். அவர்களில் ஒரு தோழருக்கு நடக்கத் தெரிந்த குழந்தை ஒன்று இருந்தது. அக்குழந்தை தகப்பனோடு வந்து அவரின் முதுகைக் கட்டிப்பிடித்துக் கொள்ளும். அத்தோழர் அக்குழந்தையை தன் முன்னால் எடுத்து வைத்துக் கொள்வார்.*

*இதனைக் கண்ணுற்ற நபியவர்கள் ''இக்குழந்தையை நேசிக்கிறீரா?'' எனக் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! நான் இக்குழந்தையை நேசிப்பதைப் போன்று உங்களை அல்லாஹ் நேசிப்பானாக! எனக் கூறினார்.*

*சில நாட்களுக்குப் பின் அக்குழந்தை இறந்து விட்டது. குழந்தை இறந்த சோகத்தினால் அத்தோழர் நபியவர்களுடன் உட்காருவதை நிறுத்திக் கொண்டார். இதனை கவனித்த நபியவர்கள் அத்தோழரைப் பற்றி விசாரணை செய்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! அவருடன் நீங்கள் பார்த்த குழந்தை இறந்து விட்டது. அந்தத் துக்கத்தினால் அவர் இப்போது இங்கு வருவதில்லை என்று மற்றவர்கள் பதிலளித்தார்கள்.*

*நபியவர்கள் அத்தோழரைச் சந்தித்து மகனைப் பற்றிக் கேட்டார்கள். அக்குழந்தை மரணமடைந்து விட்டது எனத் தோழர் கூறியதும் அத்தோழருக்கு ஆறுதல் கூறினார்கள். அதன்பின் ''தோழரே! அக்குழந்தை யினால் நீர் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சி அடைவதை*

விரும்புகிறீரா? அல்லது அக்குழந்தை உமக்கு முன் சென்று மறுமையில் சுவனத்தின் வாசலை உமக்காகத் திறந்து விடுவதை விரும்புகிறீரா?'' என நபியவர்கள் கேட்டார்கள்.

''அல்லாஹ்வின் தூதரே! அக்குழந்தை எனக்கு முன் சென்று (இறந்து) எனக்காகச் சுவனத்தின் வாசலைத் திறந்து விடுவதைதான் நான் மிகவும் விரும்புகிறேன்'' எனத் தோழர் பதிலளித்தார். அது அப்படியே நிகழவிடும் என்று நபியவர்கள் கூறினார்கள்.

இதனை கவனித்துக் கொண்டிருந்த இன்னொரு அன்ஸாரித் தோழர் ''என்னை அல்லாஹ் உங்களுக்கு அர்ப்பணிப்பானாக! அல்லாஹ்வின் தூதரே! இப்பேறு அவருக்கு மட்டும் சொந்தமா? அன்றி எங்கள் எல்லோருக்கும் கிடைக்குமா?'' எனக் கேட்டார். (முஸ்லிம்கள்) எல்லோருக்கும் இப்பேறு கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நஸயீ, அஹ்மத், ஹாகிம், இப்னுஹிப்பான்)

ஆ) அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''எந்தத் துன்பத்திலாவது பீடிக்கப்பட்ட தன் சகோதர நம்பிக்கையாளனுக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறினால் மறுமையில் பிறர் பார்த்துப் பொறாமைப்படக் கூடியதான பசுமையான ஆடைகளை அல்லாஹ் அவனுக்கு அணிவிப்பான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(இப்னு அபீஷைபா, இப்னு அஸாகிர், கதீப்)

**110.** துக்கம் ஏற்பட்டவர்களின் நிலைக்கேற்ப அனுதாபங்களைத் தெரிவிக்கவேண்டும். துக்கமடைந்திருப்பவர் மனதைத் திருப்திப்படுத்தும் வார்த்தைகளைக் கூற வேண்டும். அது மார்க்கம் அனுமதித்துள்ள வரையறைக்குள் இருத்தல் வேண்டும். ''அவருடைய ஆயுளையும் உங்களுக்கு தருவானாக!'' போன்ற வரையறை கடந்த வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது நன்று. இதற்கு ஆதாரமாகப் பல நபிமொழிகள் வந்துள்ளன.

*அ) உஸாமா இப்னு ஸைத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*நபியவர்களின் மகள்களில் ஒருவர் (இன்னொரு அறிவிப்பின்படி ஸைனப் (ரழி) அவர்கள்) தனது மகன் மரணத்தருவாயிலிருப்பதாகச் சொல்லியனுப்பினார்கள். நபியவர்கள் எங்களைச் சென்று பார்த்துக் கொள்ளும்படி அனுப்பி வைத்தார்கள். அத்துடன் மகளுக்கு ஸலாம் கூறி ''எடுப்பதும் கொடுப்பதும் அல்லாஹ்வுக்குரிய வேலையாகும். ஒவ்வொன்றுக்கும் ஒரு எல்லையை அல்லாஹ் வகுத்துள்ளான். அவன் தரும் சோதனைகளை ஏற்றுப் பொறுமையுடன் இருப்பதுதான் நல்லது'' என்று கூறும்படியும் சொல்லி அனுப்பி வைத்தார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா, அஹ்மத், பைஹகி)

இந்நபிமொழி மரணத்தருவாயில் இருப்பவர்களுக்குச் சொல்வதற்காக வந்திருந்தாலும் மரணித்தபின் சொல் வதற்கு மிகவும் ஏற்புடைய ஆறுதல் வசனங்களாகும்.

இதனால்தான் இமாம் நவவீ அவர்கள் தங்கள் ''அல் அத்கார்'' எனும் நூலில் இந்த நபிமொழி அனுதாபம் தெரிவிப்பதற்கு மிக அழகானது என்று கூறியுள்ளார்கள்.

*ஆ. புரைதா இப்னு ஹஸீப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*மரணித்த தன் மகனுக்காக வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அன்ஸாரிப் பெண் ஒருவருக்கு நபியவர்கள் ஆறுதல் கூறினார்கள். அல்லாஹ்வை அஞ்சும்படியும் அறிவுறுத்தினார்கள். அப்போது அப்பெண் ''அல்லாஹ்வின் தூதரே! நான் வேதனைப்படாது எவ்வாறு இருப்பேன்? பெற்றெடுத்த குழந்தைகள் யாவுமே இறந்த துரதிருஷ்டசாலியாக இருக்கிறேன்!'' என்று கூறினார். ''குழந்தைகள் இருப்பவர்களே துரதிருஷ்டசாலிகள். எந்த முஸ்லிம் பெற்றோருக்கு மூன்று குழந்தைகள் மரணிக்கின்றனவோ அவை மறுமையில் தங்கள் பெற்றோரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லக்கூடியவையாய் இருக்கின்றன என்று நபியவர்கள் கூறினார்கள்.*

*இதனைக் கேட்டதும் நபியவர்களின் வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்த உமர் (ரழி) அவர்கள் "எனது தாய், தந்தையர் தங்களுக்கு அர்ப்பணமாவார்களாக! அல்லாஹ்வின் தூதரே! இரண்டு குழந்தைகள்?" என்று கேட்டார்கள். இரண்டு குழந்தைகள் இறப்பினும் சரி (அவர்கள்) தம் பெற்றோர்களை சுவனத்திற்கு எடுத்துச் செல்வார்கள் என நபியவர்கள் கூறினார்கள்.*

(ஹாகிம், பஸ்ஸார், ஹைதமீ)

*இ) உம்மு சல்மா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*என் கணவர் அபூசல்மா மரணமடைந்தவுடன் நபி (ஸல்) அவர்கள் என் வீட்டுக்கு வந்து யாஅல்லாஹ்! அபூஸல்மாவுக்குப் பிழை பொறுப்பாயாக! நேர் வழியடைந்தவர்களில் அவர் பதவியை உயர்த்துவாயாக! அவர் தமக்குப்பின் விட்டுச் செல்லும் மக்களுக்கு நீயே பிரதிநிதியாக இருந்து காப்பாற்றுவாயாக! எல்லா உலகங்களினதும் அதிபதியே! எங்களுக்கும் அவர்களுக்கும் பிழை பொறுப்பாயாக! அவரின் கப்ரை விசாலப் படுத்துவாயாக! அதிலே ஒளியையும் ஏற்படுத்துவாயாக! எனப் பிரார்த்தித்தார்கள்.*

(முஸ்லிம், அஹ்மத், பைஹகி)

*ஈ) அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*எனது தந்தை ஜஃபர் இப்னு அபீதாலிப் அவர்கள் போரில் ஷஹீதான வேளை அனுதாபம் தெரிவிப்பதற்காக வந்த நபி(ஸல்) அவர்கள் "யா அல்லாஹ்! ஜஃபருக்காக அவர் குடும்பத்திற்கு பிரதிநிதியாக இருப்பாயாக! அப்துல்லாஹ்வுக்கு அவருடைய வியாபாரத்தில் அபிவிருத்தியை அளிப்பாயாக!" எனக் கூறினார்கள்.*

இதனை மூன்று முறை கூறினார்கள் இதன் முழு விபரம் அடுத்துவரும் சட்டத்தில் தெளிவாக்கப்படும்.

**111.** துன்பத்தில் உள்ளானவர்களுக்கு ஆறுதல் கூறுவதை மூன்று நாட்களுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது. எனினும் மூன்று நாட்கள் கழிந்த பின்தான்

ஆறுதல் கூறுவது பயனளிக்குமென்றிருந்தால் பிற்படுத்துவதில் தவறில்லை. அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழி) அவர்கள் அறிவிப்பின் மூலம் வந்துள்ள செய்தி: நபி (ஸல்) அவர்கள் மூன்று நாட்களுக்குப் பின்தான் தங்களிடம் வந்து ஆறுதல் கூறினார்கள் என்று கிடைத்துள்ளது.

அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒரு படையை போருக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்குத் தளபதியாக ஸைத் இப்னு ஹாரிதாவை நியமித்தார்கள். இவர் கொல்லப்பட்டு ஷஹீதானால் ஜஃபர் இப்னு அபீதாலிப் தலைவராகவும், இவரும் ஷஹீதானால் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா தலைவராகவும் இருக்க வேண்டும் என்றும் நபியவர்கள் கூறினார்கள்.

பகைவர்களை எதிர்த்துப் போரிடும் போது ஸைது தலைமை தாங்கி முஸ்லிம்களின் கொடியைப் பிடித்திருந்தார்கள். இவர்கள் கொல்லப்பட்டு ஷஹீதானவுடன் ஜஃபர் அவர்கள் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். இவர்களும் கொல்லப்பட்டு ஷஹீதானவுடன் அப்துல்லாஹ் அவர்கள் கொடியைப் பிடித்துக் கொண்டு போரிட்டார்கள். சிறிது நேரத்தில் அவரும் கொல்லப்பட்டு ஷஹீதானார்கள். அதன்பின் காலித் இப்னு வலீத் அவர்கள் கொடியைத் தூக்கிப் பிடித்தார்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை அருளினான்.

இவர்களுடைய செய்தி நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. உடனே அவர்கள் தோழர்கள் குழுமியிருக்குமிடம் வந்து அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்த பின் ‘போருக்குச் சென்ற உங்கள் தோழர்கள் எதிரிகளுடன் போரிட்டார்கள். அதில் ஸைது கொல்லப்பட்டு ஷஹீதாகி விட்டார். பின்னர் ஜஃபர் கொல்லப்பட்டு ஷஹீதாகி விட்டார். அதன் பின் அப்துல்லாஹ்வும் கொல்லப்பட்டு ஷஹீதாகி விட்டார். அதன்பின் முஸ்லிம்களின் கொடியை அல்லாஹ்வின் வாட்களில் ஒரு வாளாகிய காலித் இப்னு வலீத் தூக்கிப் பிடித்தார். அவர் மூலம் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுத்துள்ளான்'' என்று கூறினார்கள்.

இதன்பின் மூன்று நாட்கள் கழித்து நபி (ஸல்) அவர்கள் ஜஃபர் இப்னு அபீதாலிப் அவர்களின் வீட்டுக்கு வந்து எனது (மரணித்த) சகோதரனுக்காக இன்றிலிருந்து யாரும் அழ வேண்டாம். என் சகோதரனின் மக்களை அழைத்து வாருங்கள்! என்று கூறினார்கள். எங்களை அழைத்துக்கொண்டு நபியவர்களிடம் சென்றார்கள். அப்போது நாங்கள் (சிறகு முளைக்காத) பறவைக் குஞ்சுகளைப் போன்றிருந்தோம். எங்களைக் கண்டவுடன் நாவிதனை அழைத்து வாருங்கள் என்று ஒருவரிடம் கூறினார்கள்.

நாவிதன் வந்ததும் எங்கள் தலைமுடி களையப்பட்டது. அதன் பின் முஹம்மது (ஜஃபர் அவர்களின் மகன்) பாட்டன் அபூதாலிபுக்கு ஒப்பாகவிருக்கிறார். அப்துல்லாஹ் (இச் செய்தியைக் கூறுபவர்) என்னுடைய உருவத்தையும் குணத்தையும் ஒத்திருக்கிறார் என்று கூறி என் கையைப் பிடித்து உயர்த்தினார்கள். பின்பு யா அல்லாஹ்! ஜஃபரின் குடும்பத்தினருக்கு நீயே பிரதிநிதியாக இருப்பாயாக! அப்துல்லாஹ்வின் வியாபாரத்தில் அபிவிருத்தியை அளிப்பாயாக! என்று மூன்று முறை கூறினார்கள்.

(பிற்காலத்தில் இந்த அப்துல்லாஹ் அவர்கள் பெரும் செல்வந்தராக இருந்து தான தர்மங்களுக்காகத் தனது செல்வங்களை வாரி வழங்கியோர் பட்டியலில் இடம் பிடித்ததாக அரபு இலக்கியங்கள் கூறுகின்றன).

அதன்பின் எனது தாயார் வந்து அனாதைகளாகிவிட்ட எங்களைப் பற்றிக் கூறி தனக்குரிய கவலையையும், வேதனையையும் நபியவர்களிடம் கூறினார். ''நீங்கள் வறுமையைப் பற்றிப் பயப்படுகிறீர்களா? நான் இக்குழந்தைகளுக்குப் பொறுப்பாக இம்மையிலும், மறுமையிலும் இருப்பேன்'' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத், அபூதாவூத், நஸயீ, ஹாகிம்)

**112.** இரண்டு செயல்களிலிருந்து தவிர்த்து கொள்வது அவசியமாகும். இன்று முஸ்லிம்களிடையே இவை மலிந்து விட்டன.

1. அனுதாபம் தெரிவிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட இடத்தில் எல்லோரும் கூடி அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றுவது. அத்தீர்மானங்களை உரியவர்களுக்கனுப்பி வைத்தல், வீடு, பள்ளிவாசல், அடக்கஸ்தலம் போன்ற இடத்தில் எல்லோரும் ஒன்று கூடி மரணித்தவரின் புகழ் பாடி பேசத் தெரிந்தவர்களெல்லாம் பேசித் தீர்மானங்கள் நிறைவேற்றுவார்கள். இஸ்லாம் காட்டும் வழி இதுவல்ல.

2. ஆறுதல் கூறுபவர்களுக்கு உணவு, சிற்றுண்டி தயாரித்து மரணித்தவர் வீட்டில் இவ்விருந்து கொடுக்கப் படும். இதுவும் தவிர்க்கப்பட வேண்டியதாகும். இஸ்லாம் கூறும் வழி இதுவல்ல.

*ஜரீர் இப்னு அப்துல்லாஹ் பஜ்வீ (ரழி) அவர்கள்*

*மரணித்தவர் வீட்டில் கூடியிருந்து அவர்கள் உணவை உண்பதை நாங்கள் ஒப்பாரி வைத்து அழுவது போன்ற பாவமாகக் கண்டோம் எனக் கூறுகிறார்கள்.*

(அஹ்மத், இப்னுமாஜா)

'அல்மஜ்மூஉ' என்ற நூலில் (5ம் பாகம், 302ம் பக்கம்) ஆறுதல் கூறுவதற்காக உட்காருவது பற்றி இமாம் ஷாபியீ அவர்களும், 'அலிமுஸன்னம்' ஆசிரியரும் வெறுத்து உள்ளனர். அதாவது மரணித்தவரின் குடும்பத்தினர் அனை வரும் ஓரிடத்தில் குழுமியிருப்பார்கள். ஆறுதல் கூறுவோர் அங்கு சென்று அனுதாபம் தெரிவிப்பார்கள். இது வெறுக் கத்தக்கது. மரணித்தவரின் சொந்தக்காரர்கள் அவரவர் தொழிலுக்குப் போய் விட வேண்டும். அங்கு சந்திக்கும் தெரிந்தவர்கள் ஆறுதல் கூறலாம். அதுதான் இஸ்லாத்தின் வழிமுறை. இதில் ஆணுக்கொரு சட்டம், பெண்ணுக் கொரு சட்டமில்லை.

இதனையே இமாம் ஷாபியீ அவர்களது தமது 'உம்மு' என்ற நூலில் (1/248) வலியுறுத்தியுள்ளார்கள். அழுகைச் சப்தம் இல்லாவிட்டாலும் கூட மரணித்தவரின் குடும்பத் தினருக்குக் கவலையைப் புதுப்பிப்பது வெறுக்கத்தக்க தாகும் என்பதற்கு முன் கூறப்பட்ட ஜரீர் (ரழி) அவர்களின் கூற்று ஆதாரமாகிறது என இமாம் நவவீ அவர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறே "ஷரஹுல் ஹிதாயா" (1/473) என்ற நூலில் மரணித்தவரின் வீட்டார் உணவு சிற்றுண்டிகள் கொடுப்பதும் வெறுக்கத்தக்கதாகும். இது ஒரு அசிங்கமான "பித்அத்" ஆகும் என இப்னு ஹம்மாம் அவர்கள் கூறுகிறார்கள். அல்இன்ஸாப் (2/565) என்ற நூலில் உள்ளபடி இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் அவர்களின் வழிமுறையும் இதுவேயாகும். (மரணித்தவரின் வீட்டுக் குரியவர்கள் உணவு சப்ளை செய்தல் கூடாது)

**113.** மரணித்தவரின் வீட்டாருக்கு சொந்தக்காரர், அடுத்த வீட்டார் ஆகியோர் உணவு தயாரித்துக் கொடுப் பதே நபிவழியாகும்.

*அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*ஜஃபர் அவர்கள் போரில் ஷஹீதான செய்தி கிடைத்தவுடன் ஜஃபரின் வீட்டாருக்கு உணவு தயாரித்துக் கொடுங்கள்! ஏனெனில் அவர்களை வேதனைக்குள்ளாக்கும் செய்தி வந்துள்ளது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

(அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, தாரகுத்னீ, அஹ்மத்)

இமாம் ஷாபியீ அவர்கள் "அல்உம்மு" என்ற நூலில் (1/247) மரணித்தவர் வீட்டின் அண்டை வீட்டார் அல்லது உறவினர்கள் மரணித்தவர் வீட்டாருக்கு அன்று பகலும் இரவும் உணவு தயாரித்துக் கொடுப்பது மிக விருப்ப முடைய செயலாகும். ஏனெனில் அது நபிவழியும் மேலான பண்பும், முன் சென்றவர்களதும் பின் வருவோரினதும் நற்செயலாகும் எனக் கூறியுள்ளார்கள். முன் கூறப்பட்ட நபிமொழியையும் இதற்கு ஆதாரமாகக் குறித்துள்ளார்கள்.

**114.** தந்தையை இழந்த அனாதை(யதீம்)களை தலையைத் தடவி விடுவதும், அவர்களுக்குக் கண்ணியம் கொடுப்பதும் விரும்பத் தக்கது.

*அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*சிறுவர்களான உபைதுல்லாஹ் இப்னு அப்பாஸ் அவர்களும், குதம் இப்னு அப்பாஸ் அவர்களும், நானும்*

விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் ஒரு வாகனத்தின் மீது வந்து கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டதும் என்னைச் சுட்டிக்காட்டி இவரைத் தூக்கி விடுங்கள் எனக் கூறினார்கள். என்னைத் தூக்கி நபியவர்களிடம் கொடுத்தார்கள். நபியவர்கள் என்னைத் தனக்கு முன்னால் வைத்துக் கொண்டார்கள். பிறகு ''குதம்'' அவர்களைச் சுட்டிக்காட்டி இவரையும் தூக்கி விடுங்கள் என்றார்கள். அவரைத் தூக்கிக் கொடுத்தவுடன் நபியவர்கள் தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டார்கள். அப்பாஸ் (ரழி) அவர்களுக்கு விருப்பமான மகன் உபைதுல்லாஹ்வை நபியவர்கள் வாகனத்தில் ஏற்றிக் கொள்ளாததைக் கண்டு அவர் துக்கப்படவில்லை.

முன்னால் வைத்துக் கொண்ட நபியவர்கள் என் தலையைத் தடவி ''யாஅல்லாஹ்! ஜஃபருடைய மகனுக்கு நீயே பிரதிநிதியாக இருப்பாயாக!'' என்று மூன்று முறை கூறினார்கள்.

நபியவர்கள் பின்னால் ஏறிக் கொண்ட ''குதம்'' அவர்களின் பிற்கால முடிவு என்னாயிற்று? என்று கேட்கப்பட்டபோது அவர் யுத்தத்தில் ஷஹீதாகும் பாக்கியம் பெற்றார். நன்மையான விஷயங்களை அல்லாஹ்வும், அவனது தூதருமே நன்கு அறிவர் (என்று கூறி முடித்தார்கள்).

(அஹ்மத், ஹாகிம், பைஹகி)

# 18. மரணித்தபின் அவருக்கு நன்மையளிப்பவை

**115.** சில காரியங்கள் மரணித்தவருக்கு மரணமடைந்த பின்னரும் பயனளிக்கக் கூடியவையாய் இருக்கின்றன.

அ. மரணித்தவருக்காக ஏனைய முஸ்லிம்கள் கேட்கும் பிரார்த்தனைகள். அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

***அவர்களுக்குப்பின் குடியேறியவர்களுக்கும் (இதில் பங்குண்டு). அவர்கள் "எங்கள் இறைவனே! எங்களுக்கும், ஈமான் கொள்வதில் எங்களுக்கு முந்தியவர்களான எங்கள் சகோதரர்களுக்கும் மன்னிப்பு அருள்வாயாக; அன்றியும் ஈமான் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் பகையை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன்; கிருபை மிக்கவன்" என்றும் (பிரார்த்தித்துக்) கூறுவர்.***

(அல் குர்ஆன் 59:10)

என அல்லாஹ் கூறியிருப்பது ஆதாரமாகின்றது.

*முன்சென்ற முஸ்லிம்களுக்காக உயிருடனிருப்பவர்கள் பிரார்த்தனை செய்யலாம் என்பது இவ்வசனத்தின் மூலம் தெளிவாகின்றது. இது தொடர்பாக நபிமொழிகளும் ஏராளமாக இருக்கின்றன. சிலவற்றை இதில் முன்னர் அறிந்திருப்பீர்கள். இன்னும் சில "கப்ருஸ்தானத்தை தரிசித்தல்" என்ற பாடத்தில் காண முடியும். அதிலொன்றுதான் ஆபூதர்தா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மறைந்துள்ள தன் முஸ்லிம் சகோதரனுக்காக ஒரு முஸ்லிம் கேட்கும் பிரார்த்தனை அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படும். பிரார்த்தனை புரிபவனின் தலைப்பக்கம் இதற்காக ஒரு வானவர் இருந்து கொண்டிருப்பார். தன் சகோதரனுக்குப் பிரார்த்தனை செய்யும் பொழுதெல்லாம் அந்த வானவர் ஆமீன் கூறுவதுடன் உனக்கும் அவை கிடைப்பதாக! எனக்*

கூறுவார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(முஸ்லிம், அபூதாவூத், அஹ்மத்)

மேலும் ஜனாஸா தொழுகையும் இதற்குப் பலமான ஆதாரமாகின்றது. ஏனெனில் அதில் மரணித்தவருக்காகப் பிரார்த்தனைகளும், பிழை பொறுக்கத் தேடுவதுமே அடங்கியுள்ளன. இதன் விபரத்தை முன்னர் அறிந்துள்ளீர்கள்.

ஆ) மரணித்தவர் ஏதேனும் நேர்ச்சை நோன்பு பிடிக்காமல் மரணித்து விட்டால் அவருக்குப் பொறுப்பாகவுள்ளவர் அந்த நோன்பை நிறைவேற்ற வேண்டும். இதற்கு இரண்டு நபிமொழிகளை மட்டும் ஆதாரமாகத் தருகிறோம்.

*அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*''யாராவது நோன்பு நோற்பதாக நேர்ச்சை செய்து அதை நிறைவேற்றுமுன் இறந்து விட்டால் அந்த நோன்புகளை மரணித்தவரின் உரிமையாளன் நிறைவேற்ற வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்''.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், பைஹகி, அஹ்மத்)

(நபியவர்களின் இந்தக் கட்டளை நேர்ச்சை நோன்பிற்கு மாத்திரம்தான். பர்ழான ரமழான் மாதத்து நோன்பை நோற்காமல் மரணித்தவருக்காக அந்த நோன்பை யாரும் நோற்க வேண்டியதில்லை. பர்ழான நோன்பை விட்டதற்குரிய தண்டனையை மரணித்தவரே பெற்றுக் கொள்வார்).

*இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*ஒரு பெண் கடற்பயணம் செய்தாள். அப்போது ''எல்லாம் வல்ல அல்லாஹ், எனது இப்பயணத்தை எவ்விதச் சிரமமுமின்றிக் காப்பாற்றிக் கரை சேர்த்தால் ஒரு மாதம் நோன்பு வைப்பேன்''. என நேர்ச்சை செய்தாள். இறையருளால் அவள் நல்லவிதமாக, எந்தக் கஷ்டமுமின்றி கரை சேர்ந்தாள். எனினும் அவள் அந்த நோன்பை நிறைவேற்றுவதற்கு முன் இறந்து விட்டாள். அப்பெண்ணின் மகள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இவ்விஷயங்களைக் கூறினார். உன்னுடைய தாய் யாரிடமாவது கடன்பட்டு இறந்து விட்டால் அக்கடனை நீ நிறை வேற்றுவாயா? இல்லையா? என நபியவர்கள்*

*கேட்டார்கள். ஆம்! நான் நிறைவேற்றுவேன் என அப்பெண் கூறினார். அல்லாஹ்வின் கடன் நிறைவேற்றுவதற்கு மிகவும் உரிமையுடையது. அதனை உன் தாயாருக்காக நிறைவேற்றி விடு! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, நஸயீ, பைஹகி, தஹாவீ, தயாலிஸீ, அஹ்மத்)

இ. மரணித்தவர் யாரிடமாவது கடன்பட்டிருந்தால் அதனை அவருடைய பொறுப்பாளர் அல்லது வேறு யாராவது நிறைவேற்ற வேண்டும். இதன் விபரம் முன்னர் கூறப்பட்டுள்ளது.

ஈ. நற்செயல்கள் புரியும் நல்லொழுக்கமுடைய மகனின் செயல்களும் இறந்தவருக்குப் பயனளிக்கும் அம்மகன் செய்யும் ஒவ்வொரு நற்செயலுக்குரிய கூலிகள் பெற்றோருக்கும் கிடைக்கும். இதில் பெற்றோருக்கோ மகனுக்கோ எவ்விதக் குறைபாடும் இருக்க மாட்டா. ஏனெனில் பெற்றோரின் முயற்சியும், உழைப்பும்தான் அந்த நல்லொழுக்கம் உள்ள மகன் உருவாகக் காரணமாக யிருக்கின்றன.

**இன்னும், மனிதனுக்கு அவன் முயல்வதல்லாமல் வேறில்லை.**

(அல் குர்ஆன் 53:39)

என அல்லாஹ் கூறியுள்ளான்.

*தன் உழைப்பால் உண்பதே மனிதனுக்கு மிக நல்லது. அவன் மகனும் அவனது உழைப்பில் உள்ளவர்தான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், நஸயீ, திர்மிதி, இப்னுமாஜா, தாரமி)

இந்தக் குர்ஆன் வசனமும், நபிமொழியும் இன்னும் சில தனிப்பட்ட நபிமொழிகளும் தன் மகன் மூலம் பெற்றோருக்கு அவர்கள் மரணித்த பின்பும் நன்மைகள் கிடைக்கின்றன என்பதை வலியுறுத்துகின்றன. தர்மம், நோன்பு, அடிமையை விடுதலை செய்தல் போன்ற மகனின் நற்செயல்கள் பெற்றோருக்குப் பயனளிக்கின்றன. அவற்றில் இரண்டு நபிமொழிகளை இங்கு தருகின்றோம்.

அ) அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து என் தாய் திடீரென மரணமடைந்து விட்டார். (தான் மரணமடைந்து விடுவேன் என எண்ணி) கூறியிருந்தால் தர்மம் செய்யும்படி கூறியிருப்பார். நான் அவருக்காக தர்மம் செய்தால் அவருக்கும் எனக்கும் கூலி (நன்மை) கிடைக்குமா? எனக் கேட்டார். ஆம்! கிடைக்கும். அவருக்காக தர்மம் செய்வீராக! என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், நஸயீ, பைஹகி)

ஆ. அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரழி) அவர்கள் அறிவிக் கிறார்கள்:

"(என் தந்தை) ஆஸ் இப்னு வாயில் ஸஹ்மி அவர்கள் மரணத் தருவாயில் நூறு அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும் எனக் கூறிவிட்டு இறந்து விட்டார். அவர் மகன் ஹிஸாம் ஐம்பது அடிமைகளை விடுதலை செய்தார். இன்னொரு மகன் (என் தந்தை) அம்ரு மீதி ஐம்பது அடிமைகளை விடுதலை செய்ய எண்ணம் கொண்டு நபியவர்களிடம் வந்து தந்தையின் மரண உபதேசத்தைக் கூறிவிட்டு மீதி ஐம்பது அடிமைகளை நான் விடுதலை செய்ய முடியுமா?" எனக் கேட்டார்.

"அவர் முஸ்லிமாக இருந்தால் நீங்கள் அடிமைகளை விடுதலை செய்வதும், அவருக்காக தர்மம் செய்வதும், ஹஜ்ஜுச் செய்வதும் அவருக்குச் சேரும். (இன்னொரு அறிவிப்பின்படி) அவர் (அல்லாஹ்வுக்கு இணை வைக்காது) ஏகத்துவவாதியாகயிருந்தால் அவருக்காக நீ தர்மம் செய்வதும், நோன்பு வைப்பதும் அவருக்கு நன்மையளிக்கும்" என நபீ (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூத், அஹ்மத், பைஹகி)

உ. நல்ல அடையாளங்களும் (அடிச்சுவடுகளும்), நிலையான தர்மங்களும் மரணித்த பின்பும் நன்மையளிக்கும்.

நிச்சயமாக மரணமடைந்தவர்களை நாமே உயிர்ப்பிக்கிறோம்; அன்றியும் (நன்மை, தீமைகளில்)

**அவர்கள் முற்படுத்தியதையும், அவர்கள் விட்டுச் சென்றவற்றையும் நாம் எழுதுகிறோம்; எல்லாவற்றையும், நாம் ஒரு விளக்கமான ஏட்டில் பதிந்தே வைத்துள்ளோம்.**

(அல் குர்ஆன் 36:12)

என அல்லாஹ் கூறுகின்றான்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனது புண்ணியம் நின்று விடுகிறது. ஆனால் அவன் செய்து விட்டுச் சென்ற மூன்று காரியங்களால் உண்டாகும் புண்ணியம் நின்று விடுவதில்லை.

1. நிலையாக நடைபெறும் தர்மஸ்தாபனம்.
2. பயனுள்ள கல்வி.
3. பிரார்த்திக்கும் நன் மகன் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, அஹ்மத், பைஹகி)

ஜரீர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நாங்கள் (ஒரு நாள்) மதிய வேளையில் நபி (ஸல்) அவர்களுடன் உட்கார்ந்திருந்தோம். அப்போது காலுக்குச் செருப்பு இல்லாதவர்களாக ஆடைகள் குறைந்தவர்களாக வாட்களைத் தொங்கவிட்டுக் கொண்டு ஒரு கூட்டத்தினர் வந்தனர். இவர்கள் ''முளர்'' கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாகவும் ஒரேயொரு கம்பளிப் போர்வையைத் தவிர வேறு எவ்வித ஆடைகளுமின்றி காணப்பட்டார்கள்.

இவர்களின் இவ்வறுமைக் கோலத்தைக் கண்ட நபியவர்களின் முகம் வாடிவிட்டது. வேதனையால் வீட்டுக்குள் நுழைந்த நபியவர்கள் உடனே வெளியே வந்து பிலாலை பாங்கு சொல்லும்படி பணித்தார்கள். பின்னர் ளுஹர் தொழுதுவிட்டு ஒரு சிறிய மேடையில் ஏறி நின்று கொண்டு அல்லாஹ்வை போற்றிப் புகழ்ந்து விட்டுப் உரை நிகழ்த்தினார்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் தனது வேதத்தில் கூறுகிறான்:

''மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும், பெண்களையும் வெளிப்படுத்தி உலகில் பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உடமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

(அல் குர்ஆன் 4:1)

ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; மேலும், ஒவ்வொருவரும் (மறுமை) நாளைக்காக தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்; இன்னும். நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; நீங்கள் செய்பவற்றை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்.

அன்றியும், அல்லாஹ்வை மறந்துவிட்டவர்கள் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள்; ஏனெனில் அவர்கள் தங்களையே மறக்கும்படி (அல்லாஹ்) செய்துவிட்டான்; அத்தகையோர் தாம் ஃபாஸிக்குகள் - பெரும்பாவிகள் ஆவார்கள்.

நரகவாசிகளும், சுவர்க்கவாசிகளும் சமமாக மாட்டார்கள்; சுவர்க்கவாசிகளே பெரும் பாக்கியம் உடையோர்.

(அல் குர்ஆன் 59:18-20)

தர்மம் செய்யுங்கள். தர்மத்திற்கும் உங்களுக்குமிடையில் திரை விழுவதற்கு முன்பே தர்மம் செய்யுங்கள்! (இதைக் கேட்ட தோழர்கள் சிலர் வீட்டுக்குச் சென்றார்கள், சிலர்) தங்கள் வசமிருந்த தீனார்களையும், திர்ஹம்களையும் கொடுத்தார்கள். சிலர் கோதுமை, ஈத்தம்பழம், துணி ஆகியவற்றைக் கொடுத்தார்கள். (இதனைக் கண்ட நபியவர்கள்) யாரும் அவர்கள் கொண்டு வரும் பாதி ஈத்தம் பழமாயினும் அதைடபற்றி குறைவாக மதிப்பிட வேண்டாம் எனக் கூறினார்கள். (வீட்டுக்குச் சென்ற) தோழர்கள் வருவதற்கு தாமதமடைந்ததைக் கண்ட நபியவர்கள் முகத்தில் கோபம் தோன்றியது.

அப்போது ஒரு அன்ஸாரித் தோழர் தூக்க முடியாத ஒரு பையில் தங்கத்தைக் கொண்டு வந்து நபியவர்களிடம் ''இறைத்தூதர் அவர்களே! இது அல்லாஹ்வுக்காக நான் தரும் அன்பளிப்பு'' எனக் கூறிக் கொடுத்தார். நபியவர்கள் அதனைக் கைநீட்டிப் பெற்றுக் கொண்டார்கள். அதன்பின் அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) ஆகியவர்கள் அன்பளிப்புகளை வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து முஹாஜிரீன்களும், அன்ஸாரிகளும், ஏனையோரும் தங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்த தீனார்களையும், திர்ஹம்களையும், கோதுமை, ஈத்தம்பழம், துணி ஆகியவற்றையும் நபியவர்கள் முன் கொண்டு வந்து குவித்தார்கள். இரண்டு மலையளவு அவை நிறைந்து விட்டன. இதனைக் கண்ட நபியவர்களின் முகம் (மகிழ்ச்சியால்) தங்கம் போன்று மின்னியது.

இதன்பின் நபியவர்கள் இஸ்லாத்தில் எவர் ஒரு நல்வழியைச் செய்து காட்டினாரோ, அதற்குரிய நற்கூலி அவருக்கும் அதனைச் செய்தவர்களுக்கெல்லாம் கிடைக்கக் கூடிய கூலியும் கிடைத்து விடும். இதில் யாருக்கும் எவ்விதக் குறையும் ஏற்படமாட்டா. எவன் இஸ்லாத்தில் ஒரு கெட்ட செயலை உற்பத்தி செய்கிறானோ அதற்குரிய பாவமும் அதனை யாரெல்லாம் செய்கிறார்களோ, அவர்களுக்குக் கிடைக்கும் பாவங்களெல்லாம் உற்பத்தி செய்தவனுக்கும் கிடைக்கும். இதில் யாருக்கும் குறைவு ஏற்படமாட்டா என்று கூறிவிட்டு...

நிச்சயமாக மரணமடைந்தவர்களை நாமே உயிர்ப்பிக்கிறோம்; அன்றியும் (நன்மை, தீமைகளில்) அவர்கள் முற்படுத்தியதையும், அவர்கள் விட்டுச் சென்றவற்றையும் நாம் எழுதுகிறோம்; எல்லாவற்றையும், நாம் ஒரு விளக்கமான ஏட்டில் பதிந்தே வைத்துள்ளோம்.

(அல் குர்ஆன் 36:12)

என்ற குர்ஆன் வசனத்தையும் ஓதிக்காட்டினார்கள்.

பின்பு அன்பளிப்பாக (தர்மமாக) கிடைத்த அத்தனை பொருட்களையும் அக்கூட்டத்தினருக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

(முஸ்லிம், பைஹகி, நஸயீ, அஹ்மத், தாரமீ, தயாலிஸி)

# 19. அடக்கஸ்தலங்களை ஸியாரத் (தரிசனம்) செய்தல்

**116.** படிப்பினை பெறுவதற்காகவும், மரணத்தை (மறுமையை) நினைவு கூறுவதற்காகவும் அடக்கஸ் தலங்களை தரிசிப்பதை மார்க்கம் அனுமதித்துள்ளது. அல்லாஹ் வெறுக்கக்கூடிய செயல்கள் அங்கு நடைபெறா திருப்பது நிபந்தனையாகும். மரணித்தவரிடம் பிரார்த் திப்பது, உதவி தேடுவது, புகழ்பாடுவது, சுவன வாதியெனக் கூறுவது போன்றவை அங்கு இடம் பெறக்கூடாது. இவை தொடர்பான நபிமொழிகள் நிறைய வந்துள்ளன. தேவையானவர்கள் கேட்டுப் படித்துக் கொள்ளலாம்.

**117.** பல காரணங்களால் கப்ருகளை 'ஸியாரத்' செய்வது ஆகும் என்ற பதில். ஆண்களுக்குள்ள அனுமதி போன்றே பெண்களுக்கும் அனுமதியுண்டு. இவ்விஷயத்தில் ஆணுக்கொரு சட்டம், பெண்ணுக்கொரு சட்டம் கிடையாது. கீழ்க்காணும் ஆதாரங்கள் சான்று பகர்கின்றன.

1. "கப்ருகளை தரிசியுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பது முஸ்லிம்களாகிய ஆண், பெண் இருசாரா ரையும் உள்ளடக்கும் பொதுச் சொல்லாகும். இதனை இன்னும் விபரமாகப் பார்ப்போம்.

"நான் கப்ருகளை 'ஸியாரத்' செய்வதைத் தடுத் திருந்தேன்" என்ற நபியவர்களின் கூற்று ஆண், பெண் இரு பாலாரையுமே குறித்திருந்தது. எனவே ஆண், பெண் இரு பாலரும் கப்ருகளை "ஸியாரத்" செய்வது தடுக்கப் பட்டிருந்தது. அதன்பின் அதனை ஸியாரத் செய்யுங்கள் என்ற நபியவர்களின் கட்டளை ஆண், பெண் இருபால ருக்குமே உரியதாகும். சிலர் விளக்கம் கொடுப்பது போன்று ஆண்கள் மட்டுந்தான் ஸியாரத் செய்யலாம், பெண்கள் செய்யக்கூடாது என்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லை.

இதனை வலியுறுத்தும் இன்னும் இரண்டு ஆதாரங்களைத் தருகின்றோம். மூன்று நாட்களுக்கு மேல்

'உழ்ஹியா' இறைச்சியை யாரும் வைத்திருக்கக் கூடாது என விலக்கியிருந்தேன். இப்போது உங்களால் முடிந்த காலத்திற்குச் சேமித்துக் கொள்ளுங்கள் என்ற நபி (ஸல்) அவர்கள் கூற்று ஆண், பெண் இருபாலரையுமே குறிக்கிறது.

"திராட்சை, ஈத்தம் பழங்களைத் துருத்தியில் வைத்துக் குடிக்காதீர்கள் என விலக்கியிருந்தேன். இப்போது குடியுங்கள்! ஆனால் அதில் போதையிருப்பின் குடிக்காதீர்கள்" என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்று ஆண், பெண் இருபாலருக்குமே உரியதாகும்.

எனவே இவற்றிலுள்ள (செய்யாதீர்கள்! செய்யுங்கள்) என்ற வசனம் ஆண், பெண் இருபாலரையும் குறிக்குமே தவிர அறிஞர்கள் கூறுவது போன்று ஆண்களுக்கு மட்டுமே உரியதல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

2. இந்த 'ஸியாரத்' விஷயத்தில் ஆண்களோடு பெண்களையும் இணைத்தது ஏனெனில் மரணித்தவர்களை நினைத்து அச்சமுறவும், மறுமை வாழ்வொன்றுண்டு என எண்ணிக் கண்ணீர் விடுவதற்கேயாம்.

3. பெண்களுக்கு நபி (ஸல்) அவர்கள் 'ஸியாரத்' செய்வதற்குத் தனிப்பட்ட முறையிலும் அனுமதியளித்து உள்ளார்கள். இதற்கு ஆதாரமாக அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் மூலம் வந்துள்ள இரண்டு நபிமொழிகளை இங்கு தருகின்றோம்.

*அப்துல்லாஹ் இப்னு அபீ முலைக்கா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*"ஒரு நாள் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கப்ருஸ்தானத்தின் பக்கமிருந்து வந்தார்கள். தாயே! எங்கிருந்து வருகின்றீர்கள்? எனக் கேட்டேன். "(எனது தமையன்) அப்துர் ரஹ்மான் இப்னு அபீபக்கர் அவர்களின் அடக்கஸ்தலத்தை "ஸியாரத்" செய்து விட்டு வருகின்றேன்" எனக் கூறினார். கப்ருஸ்தானத்தைத் தரிசிக்க வேண்டாமென்று நபியவர்கள் தடுத்துள்ளார்களல்லவா? எனக் கூறினேன். ஆம் (தடுத்திருந்தார்கள்) பின்னர்*

எங்களுக்கு ''ஸியாரத்'' செய்யும்படி அனுமதியளித்து உள்ளார்கள் எனக் கூறினார்கள்.

(இப்னுமாஜா, பைஹகி, ஹாகிம், இப்னு அபித்துன்யா)

முஹம்மத் இப்னுகைஸ் இப்னு மஹ்ரமா இப்னு முத்தலிப் அவர்கள் "ஒரு நாள் எனக்கும், என் தாய்க்கும் நடந்த சம்பவத்தை கூறட்டுமா?" எனக் கேட்டார். அவருடைய பெற்ற தாய்க்கும், அவருக்குமிடையில் நடைபெற்ற சம்பவத்தைக் கூறப்போகின்றார் என நினைத்து ஆம்! கூறுங்கள் என்று கூறினோம்.

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் எங்களிடம் எனக்கும் நபி (ஸல்) அவர்களுக்குமிடையில் நடந்த சம்பவத்தைக் கூறட்டுமா? எனக் கேட்டார்கள். நாங்கள் ஆம்! கூறுங்கள் என்றோம். அன்னையவர்கள்: ''என்னுடைய வீட்டில் தங்கும் நாளன்று நபி (ஸல்) அவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். போர்வையும் செருப்புகளையும் கழற்றித் தனது கால்பக்கம் வைத்துக் கொண்டார்கள். படுக்கையில் தங்களது ஆடையின் ஒரு பகுதியை விரித்துப் படுத்துக் கொண்டார்கள். சிறிது நேரம் சென்றதும் நான் தூங்கிவிட்டேன் என நினைத்துக் கொண்டு எழுந்து தங்கள் போர்வையைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். சற்றுத் தாமதித்து செருப்புகளையும் அணிந்து கொண்டார்கள். அதன் பிறகும் சற்று தாமதித்து கதவைத் திறந்து வெளியேறிச் சாத்தி விட்டுச் சென்றார்கள். உடனே நானும் எழுந்து ஆடையணிந்து முகச்சீலையும் போட்டுக் கொண்டு இறைத்தூதரைப் பின் தொடர்ந்து சென்றேன்.

''ஜன்னதுல் பகீஹ்'' (மதீனாவின் கப்ருஸ்தானம்) வந்தடைந்த நபியவர்கள் நெடுநேரம் நின்று கொண்டிருந்தார்கள். பின்னர் மூன்று முறை கையை உயர்த்தினார்கள் (பிரார்த்தித்தார்கள்). பிறகு திரும்பி நடந்தார்கள். நானும் நடந்தேன். வேகமாகச் சென்றார்கள். நானும் வேகமாகச் சென்றேன். நின்றபோது நானும் நின்றேன். (வீடு நெருங்கிய வேளை) மெதுவாக இறைத்தூதரை முந்திக் கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்டேன். (எனினும் வேகமாக நடந்ததினால் ஏற்பட்ட மூச்சிரைப்பை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை).

வீட்டுக்குள் நுழைந்த நபியவர்கள் நான் மூச்சிரைப்பதைக் கண்டு ''ஆயிஷாவே! உனக்கு என்ன ஆயிற்று?'' எனக் கேட்டார்கள். நான் 'ஒன்றுமில்லை' எனக் கூறினேன். நீ உண்மையைக் கூறிவிட வேண்டும். இல்லையேல் கிருபையாளனும், நுட்பமாக அறியக்கூடியவனுமாகிய (அல்லாஹ்) எனக்கு அறிவித்து விடுவான் எனக் கூறினார்கள். நான் உடனே ''இறைத்தூதர் அவர்களே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாவார்களாக! எனக் கூறிவிட்டு, நடந்தவற்றையெல்லாம் கூறினேன். அப்படியானால் ''நான் திரும்பி வரும் வேளை எனக்கு முன்னால் நான் கண்ட கறுப்பு (உருவம்) நீதானா? எனக் கேட்டார்கள். நான் ஆம்! என்றேன். உடனே தன் கையினால் என் நெஞ்சில் அடித்தார்கள். அது எனக்கு மிக வேதனையைத் தந்தது. அல்லாஹ்வும், அவன் தூதரும் உன் செயல்களை அறிந்து கொள்ள மாட்டார்கள் என எண்ணிக் கொண்டாயா? எனக் கேட்டார்கள். ''மனிதர்கள் எதை மறைத்தாலும் அல்லாஹ் அறிந்து கொள்வான்'' எனக் கூறினேன். ஆம்! என நபியவர்கள் கூறினார்கள்.

நீ ஆரம்பத்தில் பார்த்தபடி நான் எழுந்த போது ஜிப்ரீல் (அலை) என்னிடம் வந்து மறைந்து நின்று அழைத்தார்கள். நானும் உனக்குத் தெரியாமல் நழுவினேன். நீ மேலாடையின்றி படுக்கையிலிருந்ததால் ஜிப்ரீல் (அலை) என்னை மறைந்திருந்து அழைத்தார். நீ தூங்கிவிட்டாய் என நினைத்து உன்னை எழுப்ப நான் விரும்பவில்லை. ''உமது அதிபதி ஜன்னதுல் பகீஃ (கப்ருஸ்தானம்) செல்லும்படியும் அங்குள்ளவர்களுக்கு (மரணித்தவர்களுக்கு) பிழை பொறுக்கத் தேடும்படியும் ஏவுகின்றான்'' என ஜிப்ரீல் (அலை) என்னிடம் கூறி விட்டுச் சென்றார். இதற்காகவே நான் வெளியேறினேன் என நபியவர்கள் கூறினார்கள்.

நான் (கப்ருஸ்தானம் சென்றால்) அங்கு என்ன கூற வேண்டும்? எனக் கேட்டேன்.

''அஸ்ஸலாமு அலா அஹ்லித்தியாரி மினல் முஃமினீன வல்முஸ்லிமீன், வயர்ஹமஹுல்லாஹுல் முஸ்தக்தமீன மின்னா வல்முஸ்தஃகிரீன வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்''.

(விசுவாசிகளாகிய, முஸ்லிம்களாகிய - மண்ணறை - வீட்டுக்குரியவர்கள் மீது சாந்தியுண்டாவதாக! எங்களில் முன் சென்றவர்களுக்கும் பின்னால் செல்லவிருப்பவர்களுக்கும் அல்லாஹ் கிருபை செய்வானாக! அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களை வந்தடைவோம்.) எனக் கூறுவீராக! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்லிம், நஸயீ, அஹ்மத்)

**118.** எனினும் பெண்கள் அதிகமாக மீண்டும், மீண்டும் 'ஸியாரத்' செய்வது கூடாது. ஏனெனில் அது மார்க்கச் சட்டங்களை துஷ்பிரயோகம் செய்வதாகவும், வீட்டை விட்டு வெளியே செல்வதற்குரிய காரணியாகவும் அமைந்துவிடும். அது மட்டுமல்ல, கப்ருஸ்தானங்களை உல்லாச விடுதிகளாகவும், ஏனைய பெண்களுடன் அரட்டையடிக்கும் இடமாகவும் மாற்றி விடுகிறார்கள். இப்போது பல இஸ்லாமிய நாடுகளில் இதனை நாம் காணலாம். இதுதான் ஒரு பிரபல்யமான நபிமொழியின் கருத்தாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கப்ருகளை ''ஸியாரத்'' செய்யும் பெண்களைச் சபித்துள்ளார்கள். (இன்னொரு அறிவிப்பின்படி) அல்லாஹ் கப்ருகளை 'ஸியாரத்' செய்யும் பெண்களைச் சபித்துள்ளான் என அந்த நபிமொழி கூறுகிறது.

இந்த நபிமொழி அபூஹுரைரா (ரழி), ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி) ஆகியோர் மூலமாக, திர்மிதி, இப்னுமாஜா, இப்னுஹிப்பான், பைஹகி, தயாலிஸி, அஹ்மத், ஹாகிம், இப்னுஷைபா ஆகிய கிரந்தங்கள் ஆதாரம் தருகின்றன.

இந்த நபிமொழியை ஆதாரங்காட்டியே பல அறிஞர்கள் (பெண்கள் 'ஸியாரத்' செய்யக் கூடாது என) வாதிடுகின்றனர்

இந்தச் சம்பவம் ஸியாரத்தை அதிகப்படுத்தும் பெண்களுக்குரியதாகும். இந்தக் கடும் எச்சரிக்கை

இதனையே குறிக்கிறது. சிலவேளை கணவனின் கட்டுப்பாட்டை மீறுவதற்கும் வீட்டை விட்டு அதிகம் வெளியேறுவதற்கும் இந்தச் சாபம் காரணமாக அமையலாம். மேலும் மரணித்த சொந்தக்காரனை நினைத்து கப்ரடியில் ஒப்பாரி வைத்து அழுவதற்காகவும் இருக்கலாம். இவை ஏதுமில்லாமல் பெண்கள் கப்ரை ஸியாரத் செய்வது தடுக்கப்படவில்லை. மரணத்தை நினைவுகூர்வது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானதே! என்று 'இமாம் குர்துபி' அவர்கள் விளக்கமளிக்கிறார்கள்.

"பெண்கள் ஸியாரத் செய்வது தொடர்பாக ஒன்றுக்கொன்று முரண்பாடாக வந்துள்ள நபிமொழிகளின் வெளிப்படையான கருத்து இதுவேயாகும்" என இமாம் ஷவ்கானீ அவர்கள் தமது 'நைலுல் அவ்தார்' (4-95) என்னும் நூலில் தீர்ப்பளித்துள்ளார்கள்.

**119.** படிப்பினை பெறுவதற்காக முஸ்லிம் அல்லாதவர்களின் கப்ருஸ்தானங்களையும் 'ஸியாரத்' செய்யலாம்.

*அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்:*

*ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் தங்கள் தாயாரின் கப்ரை ஸியாரத் (தரிசனம்) செய்தார்கள். அங்கு நபியவர்கள் அழுதார்கள். சுற்றியிருந்த நபித் தோழர்களும் அழுதார்கள். பின்பு 'நான் எனது அதிபதியிடம் (அல்லாஹ்விடம்) என் தாயாருக்குப் பாவமன்னிப்புத் தேட பிரார்த்திக்க அனுமதி கோரினேன். எனது கோரிக்கையை அல்லாஹ் மறுத்து விட்டான். அவருடைய கப்ரை தரிசிக்க அனுமதி கோரினேன். எனக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனவே கப்ருகளை 'ஸியாரத்' செய்யுங்கள். அது மரணத்தை நினைவூட்டும் எனக் கூறினார்கள்.*

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, பைஹகி)

கப்ருகளை 'ஸியாரத்' செய்வது இரண்டு நோக்கங்களுக்காகவே இருத்தல் வேண்டும்.

1. மரணத்தையும், மரணித்தவர்களையும் நினைவு கூர்தல், மரணித்தவர்கள் நரகத்திற்கோ, சுவர்க்கத்திற்கோ தான் செல்வார்கள். இவ்விரண்டில் நாம் பிரார்த்திப்பது

எதற்கு என்பதுதான் தேவை. இவற்றுக்குரிய ஆதாரங்கள் முன்னர் தரப்பட்டுவிட்டன.

2. தன்னால் கப்ருடையவர்களுக்குத் தரக்கூடிய ஸலாம், கொடை, பாவமன்னிப்புக் கேட்டல், பிரார்த்தனை ஆகியவற்றைச் செய்பவர் கப்ருஸ்தானத்தில் ஸியாரத் செய்தல் வேண்டும்! இது முஸ்லிம் கப்ருஸ்தானத்திற்கு மட்டும் சொந்தமானது. இவ்வாறான பிரார்த்தனைகள் ஆதாரபூர்வமான நபிமொழி மூலம் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

1. "அஸ்ஸலாமு அலைக்கும்! தாரகௌமில் முஃமினீன் வஇன்னா வஇய்யாகும் வமாதூஅதூன் முஅஜ்ஜிலூன் வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன். அல்லாஹும்ம (இ) ஹ்பிர்லி பகீஇல் அர்கத்"

(கப்ரு வீட்டுக்குரிய விசுவாசிகளே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! நாங்களும் நீங்களும் வாக்களிக்கப்பட்டபடி ஒரு தவணைக்குரியவர்களே! அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களைச் சேர்ந்து விடுவோம். யாஅல்லாஹ்! செழிப்பான பகீஃ (கப்ருஸ்தானம்) உடையவர்களுக்குப் பிழை பொறுத்தருள்வாயாக!).

2. "அஸ்ஸலாமு அலைக்கும்! அஹ்லத்தியாரி மினல் முஃமினீன வல் முஸ்லிமீன், வயர்ஹமுல்லாஹுல் முஸ்தக்தமீன மின்னா வல் முஸ்தஃகிரீன் வயின்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்"

(விசுவாசிகளான, முஸ்லிம்களான (கப்ரு) வீட்டுக்கு உரியவர்களுக்குச் சாந்தி உண்டாவதாக! (மரணமடைந்து) முன் சென்றவர்களுக்கும் பின் செல்பவர்களுக்கும் அல்லாஹ் நற்கிருபை செய்வானாக)

3. "அஸ்ஸலாமு அலா அஹ்லித்தியாரி மினல் முஃமினீன வல் முஸ்லிமீன வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன் அன்தும் லனா பரத வநஹ்னு லகும் தபஃ அஸ்அலுல்லாஹ லனா வலகுமுல் ஆபியர்"

(விசுவாசிகளான, முஸ்லிம்களான (கப்ரு) வீட்டுக்கு

உரியவர்களுக்குச் சாந்தி உண்டாவதாக! அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களை வந்தடைவோம். நீங்கள் எங்களை முந்தி விட்டீர்கள். நாங்கள் பின்னால் வருவோம். எங்களுக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் சுகத்தை வேண்டுகிறோம்).

**120.** கப்ருகளை ஸியாரத் செய்யும் போது குர்ஆன் வசனங்களை ஓதுவது கூடாது. இதற்கு நபிமொழிகளில் எந்த ஆதாரமும் கிடையாது. முன்கூறப்பட்ட நபிமொழிகள் குர்ஆன் ஓதுவது மார்க்கத்திலுள்ளதல்ல என்பதையே வலியுறுத்துகிறது. அது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டிருப்பின், நபியவர்கள் அதனைச் செய்திருப்பார்கள். தம் தோழர்களுக்கும் கற்றுக் கொடுத்திருப்பார்கள். குறிப்பாக நபியவர்களுக்கு மிக்க விருப்பமானவரான அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் நான் 'ஸியாரத்' செய்யும் போது என்ன கூற வேண்டும் என்று கேட்ட வேளையிலாவது குர்ஆன் வசனங்களை ஓதவேண்டும் எனக் கூறாமல் ஸலாம் சொல்லல், பிரார்த்தித்தல் போன்றவற்றையே கற்றுக் கொடுத்தார்கள் (117ம் சட்டத்தில் பார்க்க)

கப்ருஸ்தானங்களில் (யாஸீன், பாத்திஹா போன்ற) குர்ஆன் வசனங்களை ஓதுவது ஆகுமாக்கப்பட்டிருந்தால் நபியவர்கள் அதனைக் கற்றுக் கொடுக்காமல் மறைத்திருக்க மாட்டார்கள். விளக்கம் தேவைப்படும்போது, விளக்கம் தெரிந்தவர்கள் தாமதமின்றி அதைச் சொல்லிவிட வேண்டும் என்பது அடிப்படை சட்டவிதியாகும். எனவே இதனை நபியவர்கள் மறைத்திருப்பார்களா? மறைக்காது தம் தோழர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்தால் அவர்கள் மூலம் நமக்கும் கிடைத்திருக்கும்.

தொடர்புடைய சரியான நபிமொழி நமக்கு எப்போது கிடைக்கவில்லையோ அப்போதே அப்படியான ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதே தெளிவாகும். மேலும் இவ்வாறு கப்ருஸ்தானங்களில் குர்ஆன் ஓதக் கூடாது என்பதற்குப் பின்வரும் நபிமொழியே வலுவூட்டுகிறது.

*அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*''உங்கள் வீடுகளைக் கப்ருஸ்தானங்களாக*

ஆக்கிவிடாதீர்கள்! நிச்சயமாக ஷைத்தான் 'சூரத்துல் பகரா' ஓதப்படும் வீட்டிலிருந்து விரண்டோடுகிறான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம், திர்மிதி, அஹ்மத்)

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதன் மூலம் கப்ருஸ்தானம் குர்ஆன் ஓதுவதற்குரிய இடமல்ல என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இதற்காகவே வீடுகளில் அதிகமாகக் குர்ஆனை ஓதும்படியும், வீடுகளை குர்ஆன் ஓதக் கூடாத கப்ருஸ்தானங்கள் போன்று ஆக்கி விடாதிருக்கவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இவ்வாறேதான் இன்னொரு நபிமொழி மூலம் ''கப்ருஸ்தானங்கள் தொழுவதற்குரிய இடமல்ல'' எனவும் சுட்டிக் காட்டினார்கள்.

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உங்கள் வீடுகளில் தொழுங்கள்! அவற்றைக் கப்ருஸ் தானங்களாக ஆக்கி விடாதீர்கள்! என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

இந்த நபிமொழி இடம் பெறும் பாடத்திற்கு ''கப்ருஸ்தானங்களில் தொழுவது வெறுக்கத்தக்கது என்பதன் பிரிவு'' என இமாம் புகாரி அவர்கள் பெயரிட்டுள்ளார்கள். இவ்வாறு பெயரிட்டதன் மூலம் கப்ருஸ் தானங்களில் தொழுவது வெறுக்கத்தக்கது என்பதையே சுட்டிக் காட்டினார்கள். கப்ருஸ்தானங்களில் குர்ஆன் ஓதுவதற்கும் இதுவேதான் விளக்கம் ஆகுமே தவிர வேறு வித்தியாசமில்லை. இதனால்தான் இமாம் அபூஹனிபா, இமாம் மாலிக் போன்ற முன்வந்த அறிஞர்களும் ஏனையோரும் கப்ருஸ்தானங்களில் குர்ஆன் ஓதுவது வெறுக்கத் தக்கதெனத் தீர்ப்பளித்துள்ளனர். இதுதான் இமாம் அஹ்மத், இப்னு ஹன்பல் அவர்களின் கருத்துமாகும்.

இமாம் அபூதாவூத் அவர்கள் தனது ''மஸாயில்'' என்ற நூலில் (பக்கம்158) இமாம் அஹ்மது அவர்களிடம் கப்ருஸ் தானங்களில் குர்ஆன் ஓதுவது பற்றிக் கேட்கப்பட்டபோது

கூடாது' எனக் கூறுவதை நான் கேட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

**121.** கப்ருஸ்தானங்களில் பிரார்த்திக்கும் போது இரு கைகளையும் உயர்த்திக் கொள்வது ஆகும்.

*அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*ஓர் இரவு நபி (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறினார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து சென்று கவனிக்கும்படி என் அடிமைப்பெண் பரீராவை அனுப்பினேன். நபியவர்கள் "பகீஹ்" கப்ருஸ்தானத்திற்குச் சென்று தங்கள் இரு கைகளையும் உயர்த்திப் பிரார்த்தனை செய்து விட்டுத் திரும்பியதாக பரீரா என்னிடம் வந்து கூறினார்.*

*விடிந்ததும் அல்லாஹ்வின் தூதரே! இரவு எங்கு சென்றிருந்தீர்கள்? எனக் கேட்டேன். நான் கப்ருஸ்தானத்திற்குச் சென்று வந்தேன். அவர்களுக்குப் பிரார்த்தனை செய்வதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தேன். (அதற்காக அங்கு சென்றேன்) எனக் கூறினார்கள்.*

(அஹ்மத், முஅத்தா, நஸயீ)

**122.** கப்ருஸ்தானம் சென்று பிரார்த்தனை செய்யும் போது கப்ரை முன்னோக்கி நில்லாது கிப்லாவை முன்னோக்கி நின்றுதான் பிரார்த்தனை செய்தல் வேண்டும். பின்னால் வரக்கூடிய நபிமொழியின்படி நபி (ஸல்) அவர்கள் கப்ருஸ்தானங்களில் தொழுவதைத் தடுத்துள்ளார்கள். இதன் சட்டங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

*"பிரார்த்தனை தொழுகையின் மூளையாகும்" பிரார்த்தனை என்பது ஒரு வணக்கமாகும்! என்ற நபியவர்கள் "உங்கள் இறைவன் கூறுகின்றான். நீங்கள் (உங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்க) என்னையே அழையுங்கள்! நான் உங்களு(டைய பிரார்த்தனை)க்குப் பதிலளிப்பேன் என்ற குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.*

(திர்மிதி, இப்னுமாஜா, இப்னுஹிப்பான், ஹாகிம்)

**123.** நிராகரிப்பாளர்களின் கப்ருஸ்தானத்தைக் கண்டால் ஸலாம் கூறுவதும் பிரார்த்திப்பதும் கூடாது. நரகத்தையே செய்தியாகக் கூற வேண்டும். (நரகமே கிடைப்பதாக! என்றவாறு) இவ்வாறுதான் கூறவேண்டுமென்று நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

*ஸஹ்திப்னு அபீவக்காஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*நாட்டுப்புறத்து அரபி ஒருவர் வந்து "எனது தகப்பன் (உறவினர்களை) இனசனங்களை ஆதரிப்பவராகவும் இன்ன, இன்ன நற்செயல்கள் செய்பவராகவும் இருந்து மரணித்து விட்டார். இப்போது அவர் நிலை என்ன?" எனக் கேட்டார். "அவர் நரகத்திலேதான் இருக்கிறார்" என நபி(ஸல்) அவர்கள் விடையளித்துள்ளார்கள். இந்தப் பதில் அந்த அரபியின் உள்ளத்தைத் தாக்கியது. அல்லாஹ்வின் தூதரே! அப்படியானால் உங்களுடைய தந்தையின் நிலை என்ன? என்று மீண்டும் கேட்டார். "நீர் எந்த நிராகரிப்பாளர்களின் கப்ருஸ்தானத்திற்குச் சென்றாலும் அவருக்கு நரகத்தையே செய்தியாகக் கூறுவீராக!" என நபியவர்கள் பதிலளித்தார்கள்.*

*இதற்குப்பின் அக்கிராமவாசி இஸ்லாத்தில் இணைந்து கொண்டார். அதன்பின் இறைத்தூதர் அவர்கள் எனக்குத் துன்பத்தைக் கொடுத்து விட்டார்கள். நான் நிராகரிப்பாளர்களின் எந்தக் கப்ரைக் கண்டாலும் நரகத்தையே செய்தியாகக் கூறிக் கொண்டிருக்கின்றேன் எனச் சொல்லிக் கொண்டிருந்தார்.*

(இப்னுமாஜா, இப்னுஸ்ஸுன்னீ, தப்ரானீ, முகத்திஸீ)

**124.** முஸ்லிம்களின் கப்ருஸ்தானங்களில் செருப் பணிந்து கொண்டு செல்லக்கூடாது. இதனை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்:

*பஷீர் இப்னு ஹன்ஸலிய்யா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*நபி (ஸல்) அவர்கள் நடந்து முஸ்லிம்களின் கப்ருஸ்தானத்தை அடைந்தார்கள். அங்கே ஒரு மனிதர் காலில் அலங்காரச் செருப்புடன் கப்ருஸ்தானத்தினூடே*

நடந்து செல்வதைக் கண்டார்கள். உடனே அலங்காரச் செருப்புக்குரியவரே! உனது செருப்பைக் கழற்றி வீசு! எனக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற அம்மனிதர் திரும்பிப் பார்த்து செருப்பைக் கழற்றி வீசச் சொன்னவர்கள் இறைத்தூதர் எனத் தெரிந்ததும் தனது செருப்புகளை கழற்றி வீசி விட்டார்.

(அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத், பைஹகி)

**125.** கப்ருகளின் மீது (பூமரங்களை நடுவது) பூக்களை வைப்பது, மலர் வளையம் வைப்பது போன்ற செயல்கள் மார்க்கத்திலுள்ளவை அல்ல. இவ்வாறு செய்வது கூடாது. முன்வந்த நபித்தோழர்கள், இமாம்கள், அறிஞர்கள் யாரும் இப்படிச் செய்ததில்லை. இதில் நன்மை உண்டு என்றிருந்தால் நமக்கு முன் அவர்களே இதனைச் செய்து வழிகாட்டியிருப்பார்கள்.

''மனிதர்கள் நற்செயலெனக் கருதினாலும் எல்லா 'பித்அத்' (அநாச்சார செயல்)களும் வழிகேட்டுக்குரியதே!'' என்று இப்னு உமர் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

# 20. கப்ருஸ்தானங்களில் செய்யக்கூடாதவை

**126.** கப்ருஸ்தானங்களில் பின்வரும் செயல்களைச் செய்வது கூடாது (ஹராமாகும்).

அ) அல்லாஹ்விற்காக (ஆடு, மாடுகளை) அறுத்தல், பலியிடுதல். இஸ்லாத்தில் இவ்வாறு செய்வதற்கு இட மில்லை. இவற்றை நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

இஸ்லாத்தில் பலியிடுதல் இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூதாவூத், திர்மிதி)

இதனை இமாம் நவவீ அவர்கள் தமது "அல்மஜ்மூஉ" (5-320) என்ற நூலில் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்கள். சில ஊர்களில் ஒரு மையித்தை நல்லடக்கம் செய்து விட்டு, ரொட்டி, பிஸ்கட், தேனீர் போன்றவற்றை விநியோகிக் கின்றனர். இதுவும் தவறான, கப்ருஸ்தானத்தில் இல்லாத செயலாகும்.

ஆ) கப்ரு தோண்டும் போது எடுத்த மண்ணை விட மேலதிகமான மண்ணை எடுத்து கப்ரை உயர்த்துதல்,

இ) கப்ருகளின் மீது சாந்து (சுண்ணாம்பு, சிமெண்ட்) பூசுதல்,

ஈ) கப்ருகளில் (பெயர், தேதி முதலியன) எழுதுதல்

உ) கப்ருகள் மீது கட்டிடம் கட்டுதல்

ஊ) கப்ருகள் மீது உட்காருதல்

இவை கூடாது என்பதற்குப் பல நபிமொழிகள் வந்துள்ளன.

**I. ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

*கப்ருகளில் சாந்து (சுண்ணாம்பு) பூசுவதையும், அதில் உட்காருவதையும், அதில் கட்டிடம் கட்டுவதையும், மண்ணை அதிகப்படுத்திக் கொள்வதையும், எழுதுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.*

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, பைஹகி)

**II. அபுல் ஹய்யாஜில் அஸதி அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

*என்னை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அனுப்பியிருந்த ஒரு வேலைக்கு உம்மை அனுப்பட்டுமா? எந்த உருவச் சிலையையும் (கண்டால்) அழித்து விடுவீராக! உயர்ந்திருக்கும் கப்ரை (பூமி மட்டத்திற்கு) சமமாக்கி விடுவீராக! என்று அலீ இப்னு அபீதாலிப் (ரழி) அவர்கள் கூறினார்கள்.*

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, திர்மிதி, பைஹகி)

**III. அபூ ஸயீதில் குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

*கப்ரில் கட்டிடம் கட்டுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.*

(இப்னுமாஜா, அபூயஃலா)

**IV. துமாமா இப்னு ஷுஃபை அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

*நாங்கள் பழாலத் இப்னு உபைத் (ரழி) அவர்களின் தலைமையின் கீழ் (இவர் முஆவியா (ரழி) அவர்களின் பிரதிநிதியாக இருந்தார்) உரோமானியர்களோடு போருக்குச் சென்றோம். எங்கள் சாச்சாவின் மகன் 'ரூத்ஸ்' என்னும் இடத்தில் ஷஹீதாகி விட்டார். (இது துருக்கியின் தெற்கிலுள்ள ஒரு தீவு)*

*பழாலா (ரழி) அவர்கள் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். பின்னர் கப்ரின் ஓரத்தில் நின்று கொண்டார்கள். நாங்கள் கப்ரை மூடும் வரை கவனித்துக் கொண்டிருந்தார்கள். (பூமி மட்டத்திற்கு மூடப்பட்டவுடன்) அதிக பாரம் ஏற்றாது இலேசாக்கி விடுங்கள்! ஏனெனில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கப்ருகளைச் சமப்படுத்தும்படி எங்களுக்குக் கட்டளையிட்டு உள்ளார்கள் எனக் கூறினார்.*

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, அஹ்மத், இப்னு அபீஷைபா)

இச்செய்தியின் கருத்து என்னவெனில் பூமி மட்டத்திலிருந்து ஒரு சாண் கப்ரை உயர்த்த வேண்டும்! என்ற கருத்தை மாற்றுவதல்ல. மேலதிகமான மண்ணைப் போட்டு பாரமேற்றக் கூடாதென்பதாகும்.

(மிஷ்காத் 2-372)

**V. *அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:***

*நீங்கள் நெருப்பின் மீது உட்கார்ந்து அது உங்கள் ஆடையைப் பொசுக்கி உடம்பைத் தாக்குவது ஒரு கப்ரின் மீது உட்காருவதை விட மேலானதாகும். (இன்னொரு அறிவிப்பின்படி) கப்ரை மிதிப்பதை விட மேலானதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத்)

**VI. *உக்பா இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:***

*நெருப்புத்தணல் மீது அல்லது வாளின் மீது நான் நடப்பது அல்லது என்காலுடன் செருப்பு (கழற்ற முடியாமல்) ஒட்டிக் கொள்வது ஒரு முஸ்லிம் கப்ரின் மீது நடப்பதை விட எனக்கு மிக விருப்பமானச் செயலாகும். (அதாவது கப்ரின் மீது செருப்புடன் நடப்பது மேற்கண்ட செயல்களை விடக் கடுமையானதும், விரும்பத்தகாததுமாகும்) கப்ரின் மத்தியில் அல்லது கடைத் தெருவின் மத்தியில் நான் என் தேவையைப் பூர்த்தி செய்வதை நான் விரும்பமாட்டேன். (மக்கள் நடமாடும் கடைத்தெருவின் மத்தியில் சிறுநீர் கழிப்பதும் கப்ரின் மத்தியில் அவ்வேலையைச் செய்வதும் அசிங்கமானது) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(இப்னுமாஜா, இப்னு அபீஷைபா)

**VII. *அபூ மர்தத் அனவீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:***

*கப்ருஸ்தானங்களில் தொழாதீர்கள்! அதில் உட்காராதீர்கள்! என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, திர்மிதி)

கப்ருஸ்தானத்தில் தொழுதல், முன்கூறப்பட்ட நபி மொழி இதற்கு ஆதாரமாகிறது.

இந்த நபிமொழியின் கருத்து நேரடியாகவே கப்ருஸ் தானத்தில் தொழுவதை ஹராமாக்கியுள்ளது. இதுதான் இமாம் நவவீ அவர்களின் கருத்துமாகும். "பைலுல்கதீர்" எனும் நூலில் இந்த நபிமொழிக்கு விரிவுரை எழுதும் போது கப்ருஸ்தானத்தை முன்னோக்கித் தொழுவதால் கப்ருக்குரியவர்களை அதிகம் கண்ணியப்படுத்தப்படுகிறது. இது வணங்கப்படத்தக்கவர் என்ற அந்தஸ்தைக் கொடுக்கிறது. இவ்வாறு கண்ணியப்படுத்தல் ஏற்படக் கூடாது என்பதே இந்த நபிமொழியின் கருத்தாகும் என இமாம் நவவீ அவர்கள் கூறுகின்றார்கள்.

மற்றுமோரிடத்தில் இது வெறுக்கத்தக்க செயல் என்றும் அந்த இடத்தில் தொழுவதால் 'பரக்கத்' கிடைக்குமென நினைத்தால் அல்லாஹ் அனுமதிக்காத 'பித்அத்'தை புகுத்தியவனாவான் என்றும் இமாம் நவவீ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கப்ருக்குரியவரை கண்ணியப்படுத்தும் எண்ணத்தோடு கப்ருஸ்தானத்தில் தொழுவதுதான் விலக்கப்பட்டுள்ளது. கண்ணியப்படுத்தும் நோக்கத்தோடு தொழுதால் அது 'ஷிர்க்'காக (அல்லாஹ்விற்கு இணை வைத்ததாக) ஆகிவிடும்.

**VIII. கப்ருஸ்தானத்தில் (கப்ருக்குப் பக்கத்தில்) தொழுவதும் கூடாது. இதற்கு ஆதாரமாகப் பல நபி மொழிகள் வந்துள்ளன.**

*அபூ ஸயீதுல் குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*கப்ருஸ்தானத்தையும் குளிக்குமிடங்களையும் தவிர ஏனைய பூமி அனைத்தும் பள்ளிவாசல்களாகவே இருக்கின்றன என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா)

*அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*கப்ருகளுக்கிடையே தொழுவதைஇறைத்தூதர் (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்.*

(பஸ்ஸார், தப்ரானீ, முகத்திஸீ)

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உங்கள் வீடுகளை கப்ருஸ்தானங்களாக ஆக்கிவிடாதீர்கள்! சூரத்துல் பகராவை ஓதக்கூடிய வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம்)

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உங்கள் வீடுகளிலும் தொழுகைகளில் சிலவற்றை வைத்துக் கொள்ளுங்கள்! அதனை கப்ருஸ்தானமாக ஆக்கிவிடாதீர்கள்! என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

**IX. கப்ருஸ்தானங்களில் பள்ளிவாசல்களைக் கட்டுவது கூடாது. இதற்கு ஆதாரமாகப் பல நபி மொழிகள் வந்துள்ளன. அவற்றில் சில:**

அன்னை ஆயிஷா (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி) ஆகியோர் அறிவிக்கிறார்கள்:

''நபி (ஸல்) அவர்களுக்கு நோய் அதிகப்பட்ட வேளை மயக்கமடைவார்கள். பின் மயக்கம் தீர்ந்ததும் பேசுவார்கள். அவ்வாறு மயக்கமடையும் போது தங்கள் துணியை முகத்தில் போட்டுக் கொள்வார்கள். நீங்கியதும் அதனை எடுத்து விடுவார்கள். இவ்வாறு பேசும் நிலை வந்த போது ''தங்கள் நபிமார்களின் கப்ருகளை வணக்கஸ்தலமாக்கிக் கொண்ட யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் சபிப்பானாக! எனக் கூறினார்கள்.

(அவர்கள் செய்ததைப் போன்று என் கப்ரையும் வணக்கஸ்தலமாக்கி விடாதீர்கள்! என எச்சரிப்பதாக அவர்கள் வசனம் இருந்தது)

இன்னொரு அறிவிப்பில் ஆயிஷா அன்னையவர்கள் இவ்வாறு நபியவர்கள் எச்சரிக்கை செய்யாதிருப்பின் அன்னாரின் கப்ரு எல்லோருக்கும் பகிரங்கமாகத் தெரியக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்குமெனக் கூறுகிறார்கள்.

(புகாரி, முஸ்லிம், நஸயீ, தாரமீ, பைஹகி)

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

யா அல்லாஹ், என் கப்ரை (வணங்கும்) சிலையாக ஆக்கிவிடாதே! தங்கள் நபிமார்களின் கப்ரை வணக்கஸ்தலமாக்கிக் கொண்ட சமூகத்தை அல்லாஹ் சபிப்பானாக! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத், இப்னுஸஹ்து, அபூநுஅய்ம்)

ஜுன்துப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உங்களில் எனக்கு சகோதரர்களும், நண்பர்களும் உள்ளனர். உங்களில் யாரும் எனக்கு நேசர்களாக இல்லாதிருப்பதை அல்லாஹ்விடம் வேண்டுகிறேன். ஏனெனில் அல்லாஹ் இப்ராஹீமை நேசனாக ஆக்கிக் கொண்டதுபோல் என்னையும் நேசனாக ஆக்கிக் கொண்டான். நான் எனது சமூகத்திலுள்ளவர்களில் யாரையாவது எமது நேசராக ஆக்கிக் கொள்வதாயின் அபூபக்கரையே நேசனாக (நண்பனாக) கொண்டிருப்பேன். அறிந்து கொள்ளுங்கள்! உங்களுக்கு முன் வந்த சமூகத்தினர் தங்கள் நபியவர்களின் கப்ருகளை வணக்கஸ்தலங்களாக்கிக் கொண்டனர். அவ்வாறு நீங்கள் செய்ய வேண்டாம் என விலக்குகிறேன்! என்று நபி (ஸல்) அவர்கள் மரணிப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் கூறினார்கள்.

(முஸ்லிம், அபூஅவானா)

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''மனிதர்களில் மிகக் கெட்டவர்கள் யாரெனில் அவர்கள் உயிருடனிருக்கும் போது மறுமைநாள் வந்தடைபவர்களும், கப்ருஸ்தானங்களை வணக்கஸ்தலமாக்கிக் கொண்டவர் களுமாவார்கள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன் என்றார்கள்.

(அஹ்மத், இப்னுஹிப்பான், இப்னுஅபீஷைபா)

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்களுக்கு நோய் அதிகமானபோது நபியவர்களின் ஏனைய மனைவியரும் அங்கிருந்து கொண்டு அபிசீனியாவில் உள்ள 'மாரியா' என்னும் கோயிலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். உம்முஸல்மாவும், உம்முஹபீபாவும் அபிசீனியாவிற்கு

(ஹிஜ்ரத்) சென்றிருந்தனர். அந்தக் கோயிலையும் அதன் அழகையும், அதில் வரையப்பட்ட ஓவியங்களையும் பேசிக் கொண்டிருந்தனர்.

நோய் உடன் இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நபியவர்கள், "அவர்களிலே ஒரு நல்ல மனிதன் இறந்து விட்டால் அவரது கப்ரின் மீது வணக்கஸ்தலத்தைக் கட்டிக் கொண்டு அம்மனிதனின் படத்தையும் வரைந்து கொள்வார்கள். மறுமையில் அல்லாஹ்விடம் மிகவும் கெட்டவர்கள் இவ்வாறு செய்பவர்களே!" என்று கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம், நஸயீ, அஹ்மத், பைஹகி)

கப்ருகளை முன்னோக்கித் தொழுவது, கப்ருக்குச் சிரம் பணிவது, கப்ருகளில் வணக்கஸ்தலங்களைக் கட்டுவது ஆகியவற்றின் முடிவான கருத்துக்களை இந்த நபிமொழிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இதில் கப்ருகளுக்குச் சிரம்பணிதல் என்பது கப்ருகளை முன்னோக்கித் தொழுவது, கப்ருகளில் வணக்கஸ்தலங்களைக் கட்டுவது ஆகிய இருவிஷயங்களிலும் இரண்டறக் கலந் துள்ளன. இவை பற்றிய நபிமொழிகளையும் மார்க்க அறிஞர்களின் கூற்றுக்களையும் விபரமாக எனது "தஹ்தீருஸ் ஸாஜித்மின் இத்திஹாதில் குபூரிமஸாஜித்" என்ற நூலில் எழுதியுள்ளேன்.

அதில் நபி (ஸல்) அவர்களின் கப்ரு பள்ளிவாசலுள் சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியையும் நபிமொழிக்கு விரோதமாக இது உள்ளது என்பதையும் விசேஷ அந்தஸ்துப் பெற்ற இந்தக் கப்ருடைய பள்ளிவாசலில் தொழுவது வெறுக்கத்தக்கதல்ல என்பதையும் விரிவாக எழுதியுள்ளேன். தேவையானவர்கள் அதனை வாசித்துப் பயனடை வார்களாக!

**X. குறிப்பிட்ட தினத்தில் கப்ரு(க்குரியவரு)க்கு விழா எடுத்தல், இது மார்க்கத்தில் அனுமதிக்கப் படவில்லை.**

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

என்னுடைய கப்ரை(க் குறிப்பிட்ட தினத்தில்) விழா எடுக்காதீர்கள்! உங்கள் வீடுகளையும் கப்ருகளாக ஆக்கி

*விடாதீர்கள்! நீங்கள் எங்கிருந்தாலும் என் மீது ஸலவாத்துக் கூறுங்கள். அது எனக்கு எடுத்து வைக்கப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(அபூதாவூத், அஹ்மத், அபூநுஅய்ம்)

**XI. கப்ருகளை நோக்கிப் பயணம் செய்தல்:** நல்லடியார்கள் இருக்கும் ஊருக்குப் பயணம் செய்வது முஸ்லிம்களிடையே தற்போது பரவிக் கொண்டிருக்கின்றது. இது மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ள செயலாகும். இதற்கு ஆதாரமாகப் பல நபி மொழிகள் வந்துள்ளன.

*அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

*மூன்று இடங்களைத் தவிர (நேர்ச்சை செய்து) பயணம் செய்வது கூடாது. மஸ்ஜிதுல் ஹரம் (மக்கா), மஸ்ஜிதுர் ரஸூல் (ஸல்) (மதீனா), மஸ்ஜிதுல் அக்ஸா (பாலஸ்தீனம்) ஆகியவையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ)

*அபூ ஸயீதுல் குத்ரீ (ரழி) அவர்கள் மூலமும் இதே கருத்துள்ள நபிமொழி வந்துள்ளது.*

(புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி)

**XII. கப்ரு (தர்ஹா)களில் விளக்கெரித்தல்:** பல காரணங்களுக்காக இச்செயல் மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ளது.

*இவ்வாறு கப்ருகளில் விளக்கேற்றுதல் முன்வந்த நல்லடியார்கள் செய்யாத ஒரு 'பித்அத்' ஆகும். ஒவ்வொரு பித்அத்துகளும் வழி கேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே இட்டுச் செல்லும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*

(நஸயீ, இப்னுகுஸைமா)

இதனால் வீண்விரயம் ஏற்படுகிறது (கப்ருக்குள்ளிருப்பவர்களுக்கு வெளிச்சம் தேவையில்லை) இவ்வாறான வீண் விரயங்களை இஸ்லாம் தடுக்கிறது. (இதற்குரிய சட்டம் 42ம் இலக்க சட்டத்தில் காண்க).

நெருப்பு வணங்கிகளான 'மஜூஸி'களுக்கு இது ஒப்பாகிறது.

"எங்கள் சக அறிஞர்கள் கப்ருகளில் சிறிதளவேனும் விளக்கெரிப்பதை தடுத்துள்ளார்கள். 'ஹராம்' எனத் தெளிவாகவே கூறியுள்ளார்கள். ஏனெனில் இது யாருக்கும் பயன் அளிப்பது இல்லை. இவ்வாறு விளக்கெரிப்பது பெரும்பாவமாகும். இப்னு ஹஜர் ஹைதமீ அவர்கள் தமது ஸவாஜீர் (1-134) என்ற நூலில் கூறியுள்ளார்கள்.

இம்மூன்று காரணங்களில் முதலாவதாகக் குறிப்பிட்ட 'பித்அத்' என்ற காரணத்தை முழுமையாகக் கவனிப்பது தேவையாகும். இவ்வாறு கப்ருகளில் விளக்கெரிப்பது மார்க்கம் அனுமதிக்காத 'பித்அத்' என்பதே வலுவான காரணமாக உள்ளது. கப்ருக்குரியவர் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வார் என்ற எண்ணத்துடனேயே பலர் அங்கு விளக்கெரிக்கின்றனர். (முடியாவிட்டால் எண்ணெயையாவது நேர்ச்சை செய்து கொண்டு வந்து கொட்டுகின்றனர்) சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பட்டப் பகல் வேளையிலும் விளக்கேற்றி வைக்கின்றனர். எனவே இது மிகவும் கெட்ட 'பித்அத்' ஆகி விடுகிறது.

**XIII. மரணித்தவர்களின் எலும்புகளை ஒடித்தல்: கப்ருஸ்தானங்களில் நடப்பவர்கள் மூலம் முன்னர் அடக்கம் செய்யப்பட்டவர்களின் உறுப்புகள் சிதையலாம் அல்லது இன்னொருவரை அடக்கம் செய்வதற்காக பழைய கப்ரைத் தோண்டி அதன் சிதைவுகளை அலட்சியப்படுத்தலாம். இவையெல்லாம் மார்க்கத்தில் விலக்கப்பட்டவையே!**

அன்னை ஆயிஷா (ரழி), அன்னை உம்மு ஸல்மா (ரழி) ஆகியோர் அறிவிக்கிறார்கள்:

"இறந்த விசுவாசியின் எலும்பை ஒடிப்பது அவர் உயிருடனிருக்கும் போது ஒடிப்பதற்கு சமமாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூதாவூத், இப்னுமாஜா, இப்னுஹிப்பான், தஹாவீ)

இந்த நபிமொழி இறந்த விசுவாசியின் உறுப்பைச் சிதைப்பது ஹராம் என்பதற்கு ஆதாரமாக அமைகிறது.

இறந்த விசுவாசியின் எந்த உறுப்பையாவது சிதைப்பதும், இயற்கையான படைப்பை வீணாக்குவதும், எரிப்பதும் ஹராமாகும் என முன் கூறப்பட்ட நபிமொழியை ஆதாரங்காட்டி 'ஹன்பலி' மத்ஹபு ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளது.

போதிய காரணமின்றி அடக்கம் செய்யப்பட்ட கப்ரைத் தோண்டுவது கூடாது. இது எல்லா அறிஞர்களினதும் ஒருமித்த முடிவாகும். சரியான காரணம் இருந்தால் தோண்டுவதும், மையித்தை வெளியில் எடுப்பதும் ஆகும். (இதற்குரிய விபரம் 107வது சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளது)

அடக்கம் செய்யப்பட்ட சடலம் உக்கி மண்ணோடு மண்ணாக மாறிய பின் அவ்விடத்தைத் தோண்டி வேறொரு மையித்தை அடக்கம் செய்வது ஆகும். அவ்விடத்தில் விவசாயம் செய்வதோ, கட்டிடம் கட்டுவதோ ஆகும். இவ்வாறு பயனுள்ள முறையில் அக்கப்ரை உபயோகிக்கலாம். இவையாவும் தோண்டும் போது மையித்தின் ஒரு எலும்பாவது அகப்படாமல் இருந்தால்தான் ஆகும். இல்லாவிட்டால் ஆகாது. இந்த நிலை நிலத்தின் தன்மையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். (சில நிலங்களில் ஒரு மையித்து ஐந்திலிருந்து பதினைந்து வருடங்கள் வரையும் வேறு சில 50 வருடத்திற்கு மேலும் இருந்து மண்ணோடு மண்ணாகி விடும்) அந்த நிலத்தின் தன்மையை அறிந்த முதியவர்களிடம் கேட்டுத் தெளிவது அவசியமாகும் என இமாம் நவவீ அவர்கள் தமது 'அல்மஜ்மூஉ' (5-303) என்ற நூலில் குறித்துள்ளார்கள்.

சில இஸ்லாமிய நாடுகளில் கட்டிடங்கள் எழுப்புவதற்காக அல்லது விஸ்தரிப்பதற்காக முஸ்லிம்களின் கப்ருகளை மாசு படுத்துகிறார்கள், தோண்டுகிறார்கள். இக்கப்ருகளின் மதிப்பை அலட்சியம் செய்கிறார்கள். அதனை மிதிப்பதும், உக்கிவிடாத எலும்புகளை நொறுக்குவதும் மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொண்டே ஆட்சியாளர்கள் இவ்வாறு செய்கின்றனர். இச்செயல் தவறு என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தும் பயனுள்ள ஒரு வேலைக்கே இவ்வாறு செய்கிறோம் என்று சமாதானம் கூறுகின்றனர்.

மரணித்தவர்களின் உடல்களுக்குப் பழுது ஏற்படுத்தி இவ்வாறான பயனுள்ள வேலைகள் செய்வது, உயிருடனிருப்பவர்களுக்குக் கூடாது. உயிருடனிருப்பவர்கள் மரணித்தவர்களுக்குத் துன்பம் கொடாமலிருப்பது அவசியமாகும்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்த ஆட்சியாளர்கள் சில கற்களுக்கும், சில கப்ருகளின் மீது கட்டப்பட்ட கட்டிடத்திற்கும் கண்ணியம் கொடுக்கின்றனர். அவர்களின் பயனுள்ள வேலையின் போது இவை குறுக்கிட்டால் அப்படியே விட்டுவிட்டு வேறு திசையில் அவர்களின் பயனுள்ள வேலையைக் கொண்டு செல்கின்றனர். காரணம் கேட்டால் அவை 'புராதனச் சின்னங்கள்' எனக் கூறிவிடுகின்றனர்.

முஸ்லிம்களின் கப்ருகளை விட இந்தக் கற்களுக்கும், சமாதிக் கட்டிடங்களுக்கும் மதிப்புக் கொடுக்கப்பட வேண்டிய நியாயத்தை அவர்கள் கண்டுள்ளனர். புராதனச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு முஸ்லிமின் கப்ரு அழிக்க, தோண்டப்பட வேண்டும். (இதுவா நியாயம்) அது மட்டுமல்ல. இந்த அரசாங்கங்கள் நகருக்கு வெளியே கப்ருஸ்தானங்களை அமைக்க கட்டளை போடுவதாகவும் காண்கின்றோம். நகருக்குள்ளேயுள்ள பழைய கப்ருஸ்தானங்களில் நல்லடக்கம் செய்வதையும் தடை செய்கின்றார்களெனவும் அறிகிறோம். இதுவும் மார்க்கத்திற்கு விரோதமான செயலாகும்.

ஏனெனில் கப்ருஸ்தானங்கள் நகருக்கு வெளியே அமைக்கப்பட்டால் முஸ்லிம்களின் கப்ரை ''ஸியாரத்'' செய்வதும் அக்கப்ருக்குரியவர்களுக்குப் பிரார்த்தனை செய்வதும் தடைபடுகின்றன. நபியவர்கள் 'சுன்னா' செயல்படுத்தல் தடைபடுகின்றது. பாமர முஸ்லிம்கள் ''ஸியாரத்'' செய்வது கஷ்டமாகி விடுகிறது. (கார் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே இது முடியும். ஆனால் கார் வைத்திருப்பவர்களின் உள்ளங்கள் இவ்வாறான ''சுன்னா''க்களை பெரிதாக எடுக்க மறுத்துவிடும் என்பதே உண்மை நிலையாகும்)

புராதனச் சின்னங்களுக்கு மதிப்பளிக்கும் செயல் குருட்டுத்தனமாக ஐரோப்பிய கலாச்சாரங்களைப்

பின்பற்றுவதாகவே இருக்கிறது. அவர்கள் மறுமைக்காக நாம் செயற்படுவதை ஒழித்துக் கட்டி இவ்வுலக மாயைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ''புராதனச் சின்னங்களைப்'' பாதுகாக்க வேண்டும் என்ற அவர்கள் நடைமுறையும் இதே வகையைச் சேர்ந்ததே. மறைமுகமாக நபி (ஸல்) அவர்களின் 'சுன்னா'க்களை ஒழித்து விடுவதுதான்.

நாகரீகமடைந்தவர்கள் செயல் என்று முஸ்லிம் ஆட்சியாளர்களும், இதனைக் கண்மூடிப் பின்பற்றுகின்றனர். 'கலை' என்ற பெயரால் ஆணும், பெண்ணும் கட்டிப்பிடித்துக் கொண்டு பகிரங்கமாக மேடையில் ஆடுகின்றனர். உயிரைக் கொடுத்தாவது இக்கலையைப் பாதுகாக்க வேண்டும் என்று கூச்சலிடுகின்றனர். நாகரீகமடைந்தவர்களின் செயல்கள் இதுவல்ல. சில முஸ்லிம் ஆட்சியாளர்களும் இவற்றைத் தங்கள் நாடுகளில் அனுமதித்துள்ளனர். முஸ்லிம்களின் மறுமை வாழ்வை மறக்கடிக்கச் செய்ய வேண்டும் என்பதே ஐரோப்பியரின் கபட எண்ணமாகும். அதற்கு இவர்கள் பலியாகின்றார்கள் என்பதே இதன் முடிவாகும்.

ஒரு விசுவாசியின் எலும்பை விட வேறு எலும்புகளுக்கு மரியாதை இல்லை. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் (விசுவாசியின் எலும்பு என்று) இணைத்துக் கூறியுள்ளதால் நிராகரிப்பாளனின் எலும்புக்குக் கிடையாது. இதனையே 'ஹாபிழ் இப்னுஹஜர்' அவர்கள் ஒரு விசுவாசியின் கண்ணியம் உயிருடனிருந்தது போன்றே இறந்த பின்பும் இருக்கும் என அல்பைழ் (4-551) என்ற நூலில் குறித்துள்ளார்கள்.

இந்த விடையையே மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் தருகிறேன். ''நாங்கள் மருத்துவப் பரிசோதனைக்காக இறந்த மனித உடல்களின் பாகங்களை அறுப்பதற்கும் எலும்புகளை முறிப்பதற்கும் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறோம். இது ஆகுமா? என்று பல மாணவர்கள் கேள்வி கேட்டுள்ளனர். உங்கள் பரிசோதனைகளுக்கு விசுவாசியின் (உடலோ) எலும்போ மாசுபடுவது கூடாது. மற்றவர்களின் உடல்களில்தான் நீங்கள் பரிசோதனைகளை வைத்துக் கொள்ளலாம் என்று விடையளிக்கிறோம்.

இதனை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் சட்டத்தின் சம்பவங்களைத் தருகிறோம்.

**127.** நிராகரிப்பாளர் கப்ருகளை தோண்டுவது ஆகும். முன் கூறப்பட்ட நபிமொழி இதற்கு ஆதாரமாக அமைகிறது. அதனைப் பின்வரும் சம்பவம் உறுதிப்படுத்துகிறது.

அனஸ் இப்னுமாலிக் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

*நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு (ஹிஜ்ரத்) வந்த போது மதீனாவின் மேற்பகுதியில் வாழ்ந்த "பனூ அம்ரு இப்னு அவ்பு" கூட்டத்தினரிடம் 14 நாள் தங்கினார்கள். பின்னர் (பனூ நஜ்ஜார்) கூட்டத்தினருக்கு செய்தியனுப்பினார்கள். அவர்கள் வாட்களை அணிந்தவர்களாக (நபியவர்களை வரவேற்க) வந்து குவிந்தனர். நான் நபியவர்களைத் தங்கள் வாகனத்தில் உட்கார்ந்திருக்க கண்டேன். அபூபக்கர் அவர்கள் பின்னால் வந்தார்கள். இவ்விருவரையும் சுற்றி பனூ நஜ்ஜார் கூட்டத்தினர் வந்தனர்.*

*அபூ அய்யூப் அன்ஸாரி (ரழி) அவர்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள முற்றத்திற்கு வந்து வாகனத்திலிருந்து இறங்கித் தொழுதார்கள். அப்போது அதிகாலை நேரம். பின்னர் பள்ளிவாசல் கட்டுவதற்கு கட்டளையிட்டார்கள். அது அய்யூப் (ரழி) அவர்களின் வீட்டுக்குச் சமீபமாக ஒரு நிலம் இரண்டொரு பேரீத்தம் மரங்களுடன் குப்பைமேடாக இருந்தது. அந்நிலம் பனூ நஜ்ஜார் கூட்டத்தைச் சேர்ந்த இருவருக்குச் சொந்தமாக இருந்தது.*

*பனூ நஜ்ஜார் கூட்டத்தினரே! என அக்கூட்டத்தினரிடம் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் (பணத்திற்கு) விற்பனை செய்ய மாட்டோம். இதன் விலையை அல்லாஹ்விடமே பெற்றுக் கொள்வோம். (பள்ளிவாசல் கட்ட இனாமாகக் கொடுத்து விடுகிறோம்) என ஒருமித்துக் கூறி கொடுத்து விட்டனர்.*

*அந்நிலத்தில் முஷ்ரிகீன்கள் கப்ருகளும், பேரீத்தமரங்களும் மேடு பள்ளங்களும் இருந்தன. நபியவர்களின் கட்டளைப்படி கப்ருகள் தோண்டப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. மேடு பள்ளங்கள் எல்லாம் சமப்படுத்தப்பட்டன. பேரீத்தமரங்கள்*

தறிக்கப்பட்டு அதன் குச்சிகள் கிப்லாவின் பக்கம் நடப்பட்டன. இரு சுவர்களுக்கும் கற்களை அடுக்கினார்கள். நபி (ஸல்) அவர்களும் கற்களை சுமந்து வந்தனர். அப்போது,

''இந்தச் சுமை கைபர் செல்வமல்ல,
அந்த அதிபதியின் செல்வமே செல்வம்
எந்த நலவும் மறுமை நலனுக்கொப்ப
வந்து சேரா யா அல்லாஹ்!
அன்ஸார் முஹாஜிர் பிழை களைந்து
அருளைச் சொரிவாய் யா அல்லாஹ்!''
எனப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

*ஹாபிழ் இப்னுஹஜர் அவர்கள் இந்த நபிமொழியை ஆதாரம் காட்டி சொந்தமான பூமியை விலைக்கோ, நன் கொடையாகவோ மாற்றலாம் என்றும் முஷ்ரிகீன்களின் கப்ருகளைத் தோண்டி துப்புரவு செய்யலாம் என்றும், அவ்வாறு தோண்டி அதனுள்ளிருப்பவற்றை அப்புறப் படுத்தியபின் அந்த இடத்தில் தொழுவது ஆகும் என்றும் 'பத்ஹுல்பாரி' என்ற நூலில் விளக்கமளித்துள்ளனர்.*

*''அஹ்காமுல் ஜனாயிஸ்'' என்ற நூலின் சுருக்கத்தின் கடைசிப் பகுதியை எழுத உயர்வும், மகிமையும் உள்ள அல்லாஹ் இலகுபடுத்தியுள்ளான். இத்துடன் சுருக்கம் முடிவு பெறுகிறது. இஸ்லாத்தை நன்றாக நடைமுறைப் படுத்தி வாழவும், விசுவாசிகளாகவே நம்மை மரணிக்கச் செய்யவும் நல்லடியார்களுடன் நம்மை இணைத்துவிடவும் ஏக வல்லவனான அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.*

*எங்களின் கடைசி பிரார்த்தனைகள் ''எல்லா உலகையும் (படைத்து) இரட்சிப்பவனாகிய அல்லாஹ் வுக்கே எல்லாப் புகழும்'' என்பதே ஆகும்.*

*வஸ்ஸலாம்.*

*வாங்கி விட்டீர்களா?*

# புலூகுல் மராம்

பெருமானாரின் பொன்மொழிப் பெட்டகம்

இமாம் இபுனு ஹஜர் அல் அஸ்கலானி அவர்களின் உன்னத சேவையால் உருவான ஒப்பற்ற நபி வழிப் பேழை

புலூகுல் மராம் மின் அதில்லத்தில் அஹ்காம்

- இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களுக்கும் அண்ணல் நபியின் நடைமுறை விளக்கம்.
- முப்பத்தைந்து ஹதீஸ் கிரந்தங்களிலிருந்து திரட்டப்பட்ட நபிவழிப் பெட்டகம்.
- அனைவரும் படிக்கத் தக்க வகையில் அரபி மூலத்துடன் இணைந்த எளிய தமிழ் மொழி பெயர்ப்பு.
- பொருளடக்க அட்டவணை, கலைச் சொல் அக்ராதி, ஹதீது தரங்களின் வகை விவரம், மேலதிக பின் குறிப்பு விளக்கம் ஆகியவற்றின் இணைப்பு.
- 1597 ஹதீஸ்கள் அடங்கிய அற்புத நபிவழித் தொகுப்பு.
- சுமார் 1000 பக்கங்கள் அடங்கிய அருமையான அச்சுப் பதிப்பு.

இது ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய ஒப்பற்ற பொக்கிஷம்.

**விலை: ரூ.180/- மட்டும்.**

Published by:

**ISLAMIC STUDIES PUBLICATION CENTRE**

**கிடைக்குமிடங்கள்**

| | |
|---|---|
| **Islamic Studies Publication Centre**<br>26, Ayya Samy St., Pudupet,<br>Chennai - 600 002.<br>Phone: 853 0786. | **Hira Publications**<br>105, Big Street,<br>Kottar,<br>Nagercoil - 629 002.<br>Phone: 40620 |

# பிழை திருத்தம்

Female

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 38 | 6 | | 11வது தீயினால் மரணமடைவது .. | அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுவது உட்பட மேலும் ஏழுவகையினர் ஷுஹதாக் (தியாகி)களாவார்கள் காயப்பட்டு(ப்பல நாட்களுக்குப் பின்) இறப்பவரும், நீரில் மூழ்கி இறப்பவரும், பாரிசவாத நோயினால் இறப்பவரும், வயிற்றோட்ட நோயினால் இறப்பவரும், தீயினால் இறப்பவரும், இடிபாடுகளுக்கிடையில் இறப்பவரும், நிறைமாதக் கற்பத்துடன் இறப்பவரும் . |
| 42 | 1 | 2 | ஊரிலுள்ள | அயல்பாகத்திலுள்ள அல்லது வீட்டிலுள்ள |
| 43 | 5 | 1 | ஆ. அபுல் அஸ்அத்தைல் | ஆ அபுல் அஸ்வதித்தைலீ (ரழி) |
| 59 | 3 | 1 | ‘ஆயூத்தைப்’ | ‘அபுத்தையிப்’ |
| 64 | 6 | 1 | முக்ரா இப்னு ஹும்ரா (ரழி) | முகீரா இப்னு ஷுஹ்பா (ரழி) |
| 89 | 6 | 5 | தவஃப்பைத்தஹுமின்னா | தவஃப்பைத்தஹு மின்னா ஃபத்தவஃப்பிஹி அலல் ஈமான் அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா |
| 90 | | | | |
| 105 | 3 | 3 | உதுமான் இப்னு மஸ்ஊது | உதுமான் இப்னு மள்ஊன் (ரழி) |
| 105 | 4 | 6 | துரிதப்படுத்தும்படி | தரிபடுத்தும்படி |
| 120 | 4 | 3 | அலி முஸன்னம் | ‘அல் முஸன்னஃப்’ |
| 133 | 4 | 4 | பிகும்லாஹிரூன் | பிகும்லாஹிகூன் |
| 136 | 7 | 4 | வலகுமுல் ஆபியர் | வலகுமுல் ஆஃபியா |
| 154 | 5 | 1 | பனூநஜ்ஜார் கூட்டத்தினரே! என... | பனூநஜ்ஜார் கூட்டத்தினரே! ‘இந் நிலத்தை எனக்கு விலைக்குத் தாருங்கள்!’ |